Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 30

ஞாயிற்றுக்கிழமை
26 டிசெம்பர் 2021

மார்கழி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16 +16

விலை: 40/=

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 529 |
| மொத்தம் | 583,251 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 19 |
| மொத்தம் | 14,871 |

# இந்து ஆலய விக்கிரகங்கள் களவு பாதுகாப்புத் தரப்பினருக்குத் தொடர்பு

## கொழும்பில் 20க்கும் மேற்பட்ட சிலைகள் மீட்பு
## இராணுவச் சிப்பாய்கள், கடற்படைப் புலனாய்வாளர்கள் கைதாகலாம்?

யாழ்ப்பாணம், டிசெம்பர் 26

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயங்களின் சிலைகள் களவாடப்பட்ட சம்பவத்துடன் பாதுகாப்புத் தரப்பினருக்கும் தொடர்புகள் இருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வலி. வடக்கில் பாதுகாப்புத்தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களின் சிலைகள் இராணுவத்தினர் மற்றும் கடற்படைப் புலனாய்வாளர்களின் உதவியுடன் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸார் தமது விசாரணைகளில் கண்டறிந்துள்ளனர். இவ்வாறு களவாடப்பட்டவற்றில் சுமார் 20 சிலைகளை கொழும்பில் வைத்து பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். 15 ➤



கொழும்பில் மீட்கப்பட்ட சிலைகள்

## சுனாமி! இன்றுடன் 17 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 26

இலங்கையில் ஆழிப்பேரலை - சுனாமி ஏற்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள். ஆழிப்பேரலையால் உயி 15 ➤

## மாணவிகளுக்கு பாலியல் தொல்லை ஆசிரியர் கைது

முல்லைத்தீவு, டிசெ. 26

பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் 15 ➤

## ஊசி போட்ட தாதிக்கு பாலியல் தொந்தரவு

முல்லைத்தீவு, டிசெ. 26

கொரோனாத் தடுப்பூசி ஏற்றிய தாதிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த சந்தேக 15 ➤

## இளம்குடும்பப்பெண் தீயில் எரிந்து சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 26

குடும்பப் பிரச்சினை காரணமாக தவறான முடிவு எடுத்துத் தனக்குத்தானே தீமூட்டிய 15 ➤

**ஆபத்தான மருத்துவக் கழிவுகளை**

## பொறுப்பின்றி எரியூட்டிய தனியார் மருத்துவமனை

### நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் மாநகர மேயர்

யாழ்ப்பாணம், டிசெ. 26

பொதுமக்கள் நெரிசலாக வாழும் பகுதியில் தனியார் மருத்துவமனையொன்று ஆபத்தான மருத்துவக் கழிவுகளை எரியூட்டியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் திருநெல்வேலி 15 ➤




**மணல் கடத்தல்**

## துப்பாக்கிச்சூடு நடத்தி சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 26

அரியாலை, நெடுக்குளம் பகுதியில் உழவு இயந்திரத்தில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரை சிறப்பு அதிரடிப்படை 15 ➤

### விடுமுறை வழங்காத விரக்தியில்

## சார்ஜன்ட் துப்பாக்கிச்சூடு 4 பொலிஸார் உயிரிழப்பு

### திருக்கோவிலில் பயங்கரம்

அம்பாறை, டிசெ. 26

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன் தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 4 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மேலும் 15 ➤




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொலர் இன்றித் தேங்கின 3,000 கொள்கலன்கள்!

**கொழும்பு, டிசெ.26**

**டொலர் பற்றாக்குறை காரணமாக 3 ஆயிரம் கொள்கலன்கள் துறைமுகங்களில் சிக்குண்டுள்ளன என்றும், அதனால் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் தங்கள் பொருள்களைப் பெற முடியாது அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு விடுமுறைக்காக வந்துள்ள பல இலங்கையர்கள் டொலர் நெருக்கடி காரணமாக துறைமுகங்க ளில் கொள்கலன்களில் உள்ள தங்கள் பொருள்களை உரிய நேரத்தில் பெற முடியாத நிலையில் உள்ளனர். வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பொருள்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருள்களுடன் 3 ஆயிரம் கொள்கலன்கள் துறைமுகத்தில் சிக்குண்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

போதியளவு தொழிலாளர்கள் இல்லாதமையாலும் கட்டணங்களை டொலரில் செலுத்தவேண்டும் என்று உயர்மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்கள் தங்கள் பொருள்களைப் பெறமுடியாத நிலை காணப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## கவனவீனமாக செயற்பட்டால் பிரிட்டன் நிலைமையே வரும்

*எச்சரிக்கின்றார் ஹேமந்த ஹேரத்*



கொழும்பு, டிசெ.26

நாட்டில் ஒமிக்ரோன் தொற்றாளர்களை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. பொது மக்கள் கவனவீனமாக செயற்படுவார்களாயின் தென்னாபிரிக்கா, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவைப் போன்ற நிலைமை இலங்கையிலும் ஏற்படும்.

இவ்வாறு சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் ஒமிக்ரோன் தொற்றாளர்களை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 7 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒமிக்ரோன் வைரஸ் டெல்டாவை விட வேகமாகப் பரவக்கூடியது என்று ஏனைய நாடுகளின் நிலவரங்களை அவதானிக்கும்போது தெளிவாகிறது. தென்னாபிரிக்காவில் 10 நாள்களுக்குள் ஒரு மாநிலம் முழுவதும் ஒமிக்ரோன் தொற்றுப் பரவியுள்ளது. பிரித்தானியாவில் தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களில் 75 சதவீதமானோரும், அமெரிக்காவில் 50 சதவீதமானோரும் ஒமிக்ரோன் தொற்றாளர்களாகவே உள்ளனர்.

இலங்கையில் இதே போன்ற நிலைமை ஏற்படலாம். அதனால் பொது மக்கள் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். விமான நிலையங்களில் எந்த வித தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் இதுவரை இனங்காணப்பட்ட ஒமிக்ரோன் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள் மருத்துவக் கண்காணிப்பிலேயே உள்ளனர். மருத்துவ அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய சிலர் தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர் - என்றார். (எ-இ)

## மனைவி தாக்கியதில் கணவன் உயிரிழப்பு!


கொழும்பு, டிசெ.26

நுவரெலியா பீட்ரு பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக்கொலை செய்யப்பட்டார் என்று நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

44 வயதுடைய ஒருவரே கொலை செய்யப்பட்டார் என்றும், அவர் 3 பிள்ளைகளின் தந்தை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணவன் மற்றும் மனைவிக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு முற்றிய நிலையில், மனைவி கணவரைத் தாக்கிக் கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குடும்பஸ்தரின் உடலில் 5க்கும் மேற்பட்ட காயங்கள் காணப்படுகின்றன என்றும், மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)



## மகாறம்பைக்குளத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

வவுனியா, டிசெ.26

வவுனியா, மகாறம்பைக்குளத்தில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

வீடு ஒன்றில் நேற்று அதிகாலை நீர் கொதிக்க வைத்த பின்னர் அடுப்பை நிறுத்திவிட்டு தேவாலயத்துக்குச் சென்றுள்ளனர். அதிகாலை 1.45 மணியளவில் வீடு திரும்பியபோது, எரிவாயு அடுப்பு வெடித்துள்ளமையை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர்.

வவுனியா மாவட்டத்தில் இதுவரை 5 எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (எ-110)

## மக்கள் சேவைக்காக ஒன்றுபடவேண்டும்!

*ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவிப்பு*

மன்னார், டிசெ.26

எந்தத் திணைக்களமாக இருந்தாலும், நிறுவனமாக இருந்தாலும் நாம் மக்களுக்காவே சேவை யாற்றுகின்றோம். நாம் அனைவரும் மக்கள் நலன் நோக்கி ஒன்றுபட்டுச்செயற்பட வேண்டும்.

இவ்வாறு மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி ஏ. ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் பிரஜைகள் குழுவின் அங்கத்தவர்கள் வருட இறுதி ஒன்றுகூடல்கூந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் பலதரப்பட்ட பொறுப்புக்களில் இருப்பதற்கு மக்களே காரணம். மக்கள் இல்லையென்றால் எமக்கு இந்த நிலைமை கிட்டியிருக்காது. நாம் ஒவ்வொருவரும் செய்யும் பணியும் மக்களுக்கானது. பிரஜைகள் குழுவானது மக்களுக்காகவே தங்களை அர்ப்பணித்துச் சேவைகளைச் செய்து வருகின்றது.

இங்கிருக்கும் ஒவ்வொருவரும் மக்களுக்காகவே சேவை செய்கிறீர்கள். எமது மக்கள் இன்பத்திலும் துன்பத்திலும் நோய் நொடியிலும் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். அவர்களை மறக்காது நாம் தொடர்ந்து அவர்களுக்குப் பணி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாம் ஒன்றிணைந்த பணியாக மக்களுக்கு சேவை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம் - என்றார். (எ-60)





## மார்கழிப் பெருவிழா நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.26

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் அடியார் சுவாமிகள் அமர்வு முதலாவதாக ஆரம்பமானது. நேற்று ஆரம்பமான மார்கழிப் பெருவிழா இன்றும் இடம்பெறவுள்ளது.

முதலாம் அமர்வில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நிறுவுநர் தென்னவன் பார்த்தீபன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா ஆகியோரின் உரையும், நவரத்தினம் பரந்தாமன் குழுவினரின் திருமுறை விண்ணப்பமும், மதுரையைச் சேர்ந்த சொ.சொ.மீ. சுந்தரம் ஐயாவின் தொண்டு நெறி எனும் தலைப்பிலான சிறப்புரையும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், மறவன்புலவு சச்சிதானந்தன், ஆன்மீகத் தலைவர்கள் மதப் பெரியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 600 கிலோ நகைகளை அடகு வைத்த மக்கள்!



கொழும்பு, டிசெ. 26

**நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக கடந்த சில மாதங்களில் மட்டும் நாடுமுழுவதும் உள்ள மக்கள் சுமார் 600 கிலோ நகைகளை அடகு மற்றும் விற்பனை செய்துள்ளனர் என்று நகை வர்த்தகத்தில் ஈடுபட்டுவரும் தொழிலதிபர்கள் மற்றும் வங்கியாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

கொழும்பு செட்டியார்தெரு மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளில் உள்ள பல நகைக்கடைகளின் உரிமையாளர்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக புதிய நகைகளைக் கொள்வனவு செய்வது சுமார் 80 வீதத்தால் குறைந்துள்ளது. தற்போது நகைகளை அடகு வைக்க, விற்பனை செய்ய மக்கள் வருவது அதிகரித்துள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைகளால் இப்போது அதிகமானோர் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளைப் பயன்படுத்த தூண்டப்படுகின்றனர்.

அதன் காரணமாக நகை விற்பனையாளர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது- என்றனர். (எ-இ)





## பிரதான வீதியில் தேங்கும் மழைநீரால் பெரும் சிரமம்

### காரைநகர் மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

காரைநகர், சக்களாவோடை பிரதான வீதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

பிரபல பாடசாலை மற்றும் சுற்றுலாமையமான கசூரினா கடற்கரைக்குச் செல்லும் வீதியாக இந்த வீதி காணப்படுகின்றதுடன் இது பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது. இந்த வீதியால் 782, 784 மற்றும் 785ஆம் இலக்க வழித்தட பஸ்கள் பயணிக்கின்றன.

சுமார் 15 நாள்களுக்கு முன்பு பெய்த மழை நீர் இன்னமும் வடிந்தோடவில்லை. மழைநீர் தேங்கி நிற்கும்போது வீதியில் உள்ள பள்ளங்கள் வெளியே தெரிவதில்லை. அதனால் விபத்துக்களும் சம்பவிக்கின்றன.

வீதியைச் சீரமைப்பதற்கு முன்னர், மழைநீர் வடிந்தோட வடிகாலமைப்பு செய்யவேண்டும். வடிகாலமைப்புச் செய்யாமல் வீதியைத் திருத்தம் செய்தாலும் எந்த பிரயோசனமும் இல்லை. உரிய அதிகாரிகள் இதைக் கருத்தில்கொண்டு வடிகாலமைப்பைச் செய்வதோடு இந்த வீதியையும் விரைவில் சீரமைத்துத் தர வேண்டும் என்று கோருகின்றோம் - என்றுள்ளது. (எ-27)

## பரு. மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.26

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு ஒருதொகுதி மருத்துவ உபகரணங்கள் மத்திய சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவால் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் உட்கட்டுமான சீரமைப்பு, மருத்துவ ஆளணி எண்ணிக்கை அதிகரிப்புப் போன்ற அம்சங்கள் படிப்படியாக மெருகூட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் நோயாளர்களின் மருத்துவ சேவைத் தரத்தை உயர்த்துவதற்காக அடிப்படை மருத்துவ உபகரணங்கள் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய சுகாதார அமைச்சால் சுமார் 20 மில்லியன் ரூபா பெறுமதியுடைய மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பால்மா தட்டுப்பாடு பெப்ரவரி வரையில்



கொழும்பு, டிசெ. 26

நாட்டில் ஏற்பட்டுள்ள பால்மாத் தட்டுப்பாடு, எதிர்வரும் பெப்ரவரி மாதமளவில் நீங்கும் என்று என பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்படுகின்றமையால், எதிர்வரும் காலங்களில் பால்மா விலையை அதிகரிக்க நேரிடும் என அந்தச் சங்கத்தின் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்துள்ளார். தற்போது சந்தையில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் அதிக விலைக்கு பால்மா விற்பனை செய்யப்படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில், டொலர் பற்றாக்குறை காரணமாக வங்கிகளின் கடன் உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் செயற்பாடு தாமதமடைந்துள்ளமையாலேயே இந்தநிலைமை ஏற்பட்டுள்ளது என்று பால்மா இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்தார். (எ-இ)

## சிறுவனை ஆற்றில் வீசிய பல்கலை மாணவன் கைது

கொழும்பு, டிசெ.26

காவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலை மாணவன் ஒருவர் 12 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவரை அவரது கால்களைப் பிடித்துப் பாலத்திலிருந்து ஆற்றில் வீசிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடக்கவெல பொலிஸார் தெரிவித்தனர்.

கல்வி நடவடிக்கைக்காகச் சென்று கொண்டிருந்த தரம் 7 இல் கற்கும் மாணவன் ஒருவரே ஆற்றில் வீசப்பட்டுள்ளார். பிரதேச மக்களால் மீட்கப்பட்ட அந்த மாணவன் தற்போது மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)

## விபத்தில் இருவர் காயம்

வவுனியா, டிசெ.26

வவுனியாவில் முச்சக்கரவண்டியும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து நேற்று மதியம் நடந்துள்ளது.

ரயில் நிலைய வீதியிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் மாணவி ஒருவரை இறக்கிவிட்டு, வவுனியா நகரை நோக்கி முச்சக்கரவண்டி திரும்ப முயன்றபோது, ரயில் நிலைய வீதியூடாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்துள்ளது.

முச்சக்கர வண்டிச் சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி ஆகியோர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்துத் தொடர்பாக வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-18)



## இடர்களால் பாதித்தோருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு

சாவகச்சேரி, டிசெ.26

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் இடம்பெற்ற புரவிப் புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இடர்களால் பாதிக்கப்பட்ட சுமார் 700 குடும்பங்களுக்கான இழப்பீட்டுத் தொகை பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு பிரதேச செயலகத்தால் நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இடர்கால முகாமைத்துவ திணைக்களத்தால் இந்தக் கொடுப்பனவு பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்ட நிலையில் இந்தக் கொடுப்பனவுகளை பிரதேச செயலகம் அந்தந்தக் குடும்பங்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)

## வெட்டிக்கொலை

கொழும்பு, டிசெ.26

அகுரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலஹகம பிரதேசத்தில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொட்டேகொட பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி கிடையாது!



## சரத் பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 26**

**அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பது தவறல்ல. ஆனால் நல்லாட்சியின்போது, இந்த நாட்டை அழிக்க தலைமை தாங்கியவர்களுடன் கூட்டணி அமைக்க நாம் தயாரில்லை- என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அவர்களுடன் மேடையில் ஏறுவது எமக்கு வெட்கம். கூட்டணி அமைக்கும்போது எவருடன் கூட்டணியை அமைத்தால், அரசியல் செய்யமுடியும். எவருடன் செய்யமுடியாது என்பதை ஆராயவேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் பல தேர்தல்களில் கூட்டணி அமைத்துள்ளோம். அவர்களுடன் கூட்டணி அமைத்து 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றமும் சென்றேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் எனக்குப் பெரும் வெறுப்பே உள்ளது. அந்தத் தலைவர் முழுமையாக தோல்வியடைந்த தலைவர்.

அவரது அரசியல் செயற்பாடுகள், தலைமைத்துவம் தொடர்பிலும் நாம் திருப்தியடையவில்லை. எனவே, அவருடன் என்றால் எம்மால் கூட்டணி அமைக்க முடியாது.

அதேவேளை, விவசாயிகளுக்கு மீண்டும் இரசாயன உரத்தை வழங்க வேண்டும். நாம் அந்தத் துறையின் விசேட நிபுணர்களுடன் பேசியபோது, அவர்கள் அனைவரும் விவசாய செயற்பாடுகளுக்கு இரசாயன உரம் வழங்கப்பட வேண்டும் என்றே தெரிவித்தனர். அவ்வாறு வழங்கப்படாது விட்டால் கண்டிப்பாக விவசாயத்துறை கடுமையாகப் பாதிக்கும்.

உரம் தொடர்பில் தவறான அரசியல் தீர்மானங்கள் எடுத்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. ஆனால், இவ்வாறான தீர்மானத்தை எடுத்தவர்களே மக்களுக்கு பதிலளிக்க வேண்டும்- என்றார். (எ-இ)



# உர விடயத்தில் அரசை மன்னிக்கவே முடியாது

## ஆளும் கட்சி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 26

உரப் பிரச்சினையில் அரசை மன்னிக்க முடியாது என்று ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சாரத்தை அணிந்துகொள்ளாமல் காற்சட்டையைக் கழற்றுவதுபோலவே உரப் பிரச்சினையில் அரசு செயற்பட்டது. இதை நான் இதற்கு முன்னரும் கூறியிருந்தேன். உரப் பிரச்சினையில் அரசின் செயற்பாட்டை மன்னிக்க முடியாது- என்றார். (எ-இ)

# இறக்குமதித் தடையால் மக்கள் பெரும் சிரமம்!

கொழும்பு, டிசெ. 26

21ஆம் நூற்றாண்டில் வாகன இறக்குமதியைத் தடைசெய்த ஒரு நாடு என்றால் இலங்கையை குறிப்பிட முடியும். தற்போது வாகனம் என்பது ஆடம்பரப் பொருள் அல்ல. அத்தியாவசியப் பொருளாகும் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டின் வாகன இறக்குமதி மீது விதிக்கப்படும் வரி வீதம் மிகவும் அதிகம். வாகனத்தின் விலையை விடவும் நூற்றுக்கு 200 தொடக்கம் 300 வீதம் வரி விதிக்கப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் வாகனங்களுக்கான விலை மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது.

அந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது குறித்த வரி விதிப்பின் காரணமாக எமது நாட்டில் நான்கு மடங்கு விலை அதிகமாக காணப்படுகின்றது. இப்போது அரசு விதித்துள்ள இறக்குமதித் தடையால், வாகனங்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது- என்றார். (எ-இ)

# பிரியந்தவின் பதவிக்கு மீண்டும் இலங்கையர்!

கொழும்பு, டிசெ.26

பாகிஸ்தானின் சியால்கோட்டிலுள்ள தொழிற்சாலை ஊழியர்களால் நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் பதவிக்கு, வேறொரு இலங்கையரை நியமிக்க அந்த நிறுவன நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இலங்கைத்தூதுவர் வைஸ் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம மற்றும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் மத ஒத்துழைப்புக்கான விசேட தூதுவர் ஹாபிஸ் தாஹிர் மெஹ்மூத் அப்ராபி மற்றும் மதத் தலைவர் மௌலானா தாரிக் ஜமீல் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின்போது இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரியந்த குமார தமது மதத்தை அவமதித்ததாகக் குற்றஞ்சுமத்தி தொழிற்சாலை ஊழியர்களால் கடந்த 3ஆம் திகதி கொடூரமான முறையில் அவர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். (எ-இ)

# நெருக்கடியை எதிர்கொள்ள இணைந்து செயற்படுவோம்

## டலஸ் அழகப்பெரும அழைப்பு



கொழும்பு, டிசெ. 26

நாட்டின் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அறிவு மற்றும் தரவுகளுடன் விடயங்களைத் தீர்மானிக்கும் யுகம் தற்போது உருவாகியுள்ளது. மாற்றமடையும் உலகுக்கேற்ப கல்விமுறையிலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை, மக்களை ஜீவனோபாய ரீதியில் பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கும்- என்றார். (எ-22)

# திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.26

மூளாய் கிழக்குப் பொற்புலம்பதி ஸ்ரீ மஹா காளியம்பாள் ஆலய வருடாந்த திருவாசக முற்றோதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச)


# ரயில் திணைக்களத்துக்கு தினமும் ரூ.10 மில். நஷ்டம்


கொழும்பு, டிசெ. 26

ரயில் நிலைய அதிபர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, ரயில் திணைக்களத்துக்கு நாளாந்தம் சுமார் 10 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கையால், பயணச்சீட்டு விநியோகம் மற்றும் பொதிகளைப் பொறுப்பேற்றல் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

பதவி உயர்வு, பயணிகளுக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்க வலியுறுத்தி ரயில் நிலைய அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-இ)





# நுவரெலியாவில் பனிப்பொழிவு!

கொழும்பு, டிசெ.26

நுவரெலியா மற்றும் அதை அண்டிய பகுதிகளில் நேற்றுச் சனிக்கிழமை காலை கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. நுவரெலியாவில கடந்த சில தினங்களாகக் கடும் குளிர் காணப்படுகின்றது என்றும், வெப்பநிலை வெகுவாகக் குறைந்துள்ளது என்றும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். தற்போது பனிப்பொழிவு அதிகரித்துள்ள நிலையில் மரக்கறிச் செய்கை மற்றும் தேயிலைச் செய்கைக்குப் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் - என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் டெங்கு அதிகரிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ். மாநகர பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கின் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளது என சுகாதாரப் பிரிவால் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த நவம்பர் மாதத்தைக் காட்டிலும் டிசெம்பர் மாதத்தில் டெங்கின் தாக்கம் வேகமாக அதிகரித்துள்ளது எனவும் நவம்பர் மாதத்தில் 4 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மாதத்தில் இதுவரை 45 பேர் வரை டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நாவாந்துறை மற்றும் யாழ்.நகர்ப்பகுதியில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்தும் காணப்படுகின்றது என சுகாதாரப் பிரிவால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

## 15 மாவட்டங்களில் டெங்கு தீவிரம்

கொழும்பு, டிசெ. 26

15 மாவட்டங்களில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்றும், மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது.

இந்தவருடத்தின் இதுவரையான காலம்வரை, நாட்டில் 33 ஆயிரத்து 269 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதில் 60 வீத மானவர்கள் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இருந்து கண்டறியப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக மருத்துவ விசேட நிபுணரான மருத்துவர் ஷிலந்தி செனவரத்ன தெரிவித்தார்.

கண்டி, காலி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் கணிசமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். எவருக்கேனும் காய்ச்சல் காணப்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் - என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)

## 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தென்மராட்சியில் 'பூஸ்டர்' டோஸ்



கொடிகாமம், டிசெ. 26

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையால் இதுவரை பைஸர் தடுப்பூசி செலுத்தாத 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நாளை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி 4ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையத்திலும், எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை எழுதுமட்டுவாழ் ஆரம்ப சுகாதார நிலையத்திலும், எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை மட்டுவில் ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலயத்திலும், எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி வடக்கு அம்பிகா முன்பள்ளியிலும், எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன. (ம-159)

## வவுனியாவிலும் அடுப்பு வெடிப்பு



வவுனியா, டிசெ. 26

வவுனியா, காத்தார்சின்னக்குளம் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது என்று வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, காத்தார்சின்னக்குளம் லக்ஸபானா வீதியில் உள்ள வீடொன்றிலேயே மேற்படி வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.பீ.மானாவடு தலைமையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-110)

## டெங்கு வாரம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் ஜனவரி 4ஆம் திகதி தொடக்கம் 10 திகதிவரை கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதற்கான சுற்றறிக்கையை சுகாதார அமைச்சு வெளியிடவுள்ளது.

டெங்கு ஒழிப்பு வாரத்தில் துப்புரவுப் பணிகள் மற்றும் சுகாதாரப் பணிகள் என்பன முன்னெடுக்கப் படும் எனவும் சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-17)

## நாவாந்துறை மீன் சந்தையில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், டிசெ.26

நாவாந்துறை மீன் சந்தை, சுகாதாரப் பிரிவால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

உரிய சுகாதாரமுறையைப் பின்பற்றாத சந்தை வியாபாரிகள் மற்றும் நுகர்வோரை சுகாதாரப் பிரிவினர் எச்சரித்ததோடு சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறும் ஆலோசனைகளை வழங்கினர். மேலும் சுகாதார விதிகளைப் பின்பற்றாதவர்கள் மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் சுகாதாரப் பிரிவால் எச்சரிக்கப்பட்டது. (ச-17)

## கடலுணவுகளின் விலை திடீர் அதிகரிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ். குடாநாட்டில் கடலுணவுகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன என நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

பாஷையூர், கொட்டடி, நாவாந்துறை, குருநகர் மற்றும் கல்வியங்காடு ஆகிய மீன் சந்தைகளிலேயே கடலுணவுகளின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தைகளுக்கு குறைந்தளவு கடலுணவுகள் வந்து சேர்வதாலேயே அவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

குறிப்பாக இறால் கிலோ ஆயிரத்து 400 ரூபாவுக்கும் நண்டு கிலோ ஆயிரத்து 200 ரூபாவுக்கும் மீன் பெரியது கிலோ ஆயிரத்து 200 ரூபாவுக்கும், கணவாய் கிலோ ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## சுகாதாரப் பிரிவினரால் பாடசாலைகள் சோதனை

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ். மாநகர பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் சுகாதாரப் பிரிவினர் டெங்கு சோதனை நடவடிக்கைளை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது டெங்கின் தாக்கம் மற்றும் கொரோனா போன்ற தாக்கங்கள் குறித்து பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வு மற்றும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பாடசாலை வளாகத்தில் காணப்படுகின்ற வெற்று பொருள்கள் மற்றும் கழிவுகள் போன்றவற்றையும் உடன் அகற்றவேண்டும் எனவும் சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தினர். (ச-17)

## கணபதி ஹோமம்

சாவகச்சேரி, டிசெ.26

மிருசுவில், உசன் கஜகேணி விநாயகர் கோவிலில் நாட்டில் அமைதியும் சமாதானமும் வேண்டி மகா கணபதி ஹோமம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ இ.தேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த யாகம் சிவாச்சாரியார்கள் பலரது பங்குபற்றலுடன் நடைபெறவுள்ளது. (ச-9)

## நாவல் குற்றிகளுடன் உழவியந்திரம் மீட்பு

கொடிகாமம் நாவலடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி வெட்டப்பட்ட நாவல் மரக்குற்றிகளுடன் உழவு இயந்திரமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த உழவு இயந்திரத்தில் நேற்றுமுன்தினம் சென்ற நான்கு பேர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியுள்ளனர். இதையடுத்தே 17 நாவல் குற்றிகளும் உழவியந்திரமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (ம-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## டெங்கை ஒழிக்க நம்மால் முடியும்...!

இலங்கையின் 15 மாவட்டங்களில் டெங்குத் தொற்றுத் தீவிரமாகியிருக்கின்றது. ஆரோக்கியமான ஒருவரை சாவுவரைக் கொண்டு செல்லக்கூடிய தன்மை கொண்ட டெங்குத் தொற்றைச் சாதாரணமாகக் கருதிக் கடந்துவிட முடியாது. கொரோனாத் தொற்றால் நாடு நிலை குலைந்துள்ள இந்த நிலைமையில், டெங்குத் தொற்றும் தீவிரமடைந்தால் ஏற்படும் பாதிப்புக்களை நினைத்தும் பார்க்கமுடியாது.

கடந்த மாதத்தில் மட்டும் டெங்குத் தொற்றுக்குள்ளான 250 சிறுவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையைவிடவும் அதிகம். மன்னார் மாவட்டத்தில் சில தினங்களுக்குமுன்னர், 13வயதுச் சிறுமி ஒருவர் டெங்குத் தொற்றால் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் மட்டும் நாட்டில் 33 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

போதிய வளங்கள் இன்றி, ஆளணி இன்றி கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் சுகாதாரத் தரப்பினருக்கு, டெங்குத் தொற்று என்பது ஒரு மேலதிகச் சுமையே. கொரோனாத் தொற்றாளர்கள் ஏற்கனவே மருத்துவமனைகளில் நிறைந்திருக்கும் நிலைமையில், டெங்குத் தொற்றாளர்களும் மருத்துவமனைகளை நிறைக்க ஆரம்பித்தால் சுகாதாரக் கட்டமைப்பைப் பேணுவதென்பது மிகச் சிக்கலான விடயமே.இந்த இக்கட்டான நிலைமைகளை வெற்றிகரமாகக் கையாள மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. பொதுமக்களின் விழிப்புணர்வான செயற்பாடுகளே சுகாதாரத் தரப்பினர் மீதான அழுத்தங்களைக் குறைத்து, அவர்களைப் புத்துணர்ச்சியுடன் செயற்பட வைக்கும். கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளின்போதும், டெங்குத் தொற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின்போதும் சுகாதாரத் தரப்பினர் பொதுமக்களின் ஒத்துழைப்பையே பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

என்னதான் இறுக்கமாக சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தாலும், சிலவேளைகளில் கொரோனா ஏதோவொருவகையில் ஊடுருவவும்கூடும். ஆனால், டெங்கு அப்படியல்ல. நாம் நினைத்தால் அதனை முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தவும், தொற்று ஏற்படாது தடுக்கவும் முடியும். எமது சூழலை, டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகாதவகையில், சுத்தமாகப் பேணினாலே நம்மை டெங்கு அண்டாது. ஆனால் பொதுமக்களின் செயற்பாடுகள் அப்படியிருப்பதில்லை. மழைக்காலத்தில் மூசிக்கொண்டு முளைத்தெழுந்த பற்றைகளும், குப்பைகளும் நம்மைச் சுற்றி இன்னும் இருக்கின்றன. அவை சீரான வகையில் அப்புறப்படுத்தப்பட்டாலே டெங்கு அபாயத்தில் இருந்து ஓரளவு தப்பிவிடலாம். அதைவிட அடுத்தவர்களின் காணிகளில் டெங்கு நுளம்புகள் தோன்றக்கூடிய ஏதுநிலைகள் காணப்பட்டால், நாம் அதை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. ஆனால், அங்கு உருவாகும் டெங்கு நுளம்புகள் நமது வீட்டுக்குள் நுழைய அதிகநேரம் பிடிக்காது என்பதை மறந்துவிடுகின்றோம். எனவே நம்முடைய இருப்பிடங்கள், காணிகள் என்பவற்றை மட்டுமல்லாது அயலிலுள்ள இடங்களையும் அதேபோன்று சுத்தமாக வைத்திருப்பதை உறுதி செய்யவேண்டியது மக்களின் கடமை. அதற்காக அடுத்தவர்களின் காணிகளையும் நாம்தான் சுத்தப்படுத்தவேண்டுமென்பதில்லை. உரியவர்களுக்கு அதைத் தெரியப்படுத்தி, சுத்தம் செய்வதற்கான முயற்சிகளை முன்னெடுக்கலாம். அவ்வாறு நமது சூழல் சுத்தமானால் டெங்கு எப்படி எம் வீட்டுக்குள் எட்டிப்பார்க்கமுடியும்? இது ஊர் கூடித் தேர் இழுக்க வேண்டிய தருணம். அதை உணர்ந்து அனைவரும் செயலாற்றவேண்டும்...!



# அடுத்த ஆண்டு வசந்தகாலமாம்

## கதை விடுகின்றார் காணி அமைச்சர்

**கொழும்பு, டிசெ. 26**

**2022ஆம் ஆண்டுமுதல் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் வசந்தகாலம் ஆரம்பமாகப் போகின்றது என்று காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.**

நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் ஆண்டு ஜனவரி முதல் நாட்டில் மாபெரும் விவசாய எழுச்சி ஆரம்பமாகும். தற்போது பெரும்பாலானோர் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசு 'பெயில்' எனக் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதுபோல் எவரும் பெயில் ஆகவில்லை. பெயில் ஆவதாக இருந்திருந்தால் கொரோனாக் காலப்பகுதியில் அது நடந்திருக்க வேண்டும்.

கொரோனாவால் சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால், கடந்த நல்லாட்சிக் காலத்தில் கொரோனா போன்ற தொற்றுகள் ஏற்படவில்லை. எனினும், அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் காரணமாகவே நன்றாக இருந்த நாடு சீர்குலைந்தது. இன்று எந்தவொரு அபிவிருத்தி வேலைத்திட்டத்திலும் தொய்வு ஏற்படவில்லை. சஹ்ரானின் குண்டுத் தாக்குதல் காரணமாக 4.5 பில்லியன் இல்லாமற் போனது. கொரோனா மிகுதியை இல்லாமற் செய்துள்ளது.

இன்று நாட்டில் டொலருக்கான பற்றாக்குறை நிலவுகின்றது. அதன் காரணமாகவே இந்தக் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. எது எப்படியோ தற்போதைய சூழ்நிலைக்கு முகம்கொடுப்பது அவசியமானது. எப்போதும் வறட்சி இருக்கப் போவதில்லை; வசந்த காலம் ஒன்று வரும். 2022ஆம் ஆண்டு முதல் வசந்த காலம் ஆரம்பமாகும். 2022ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் மூன்று வருடங்களுக்குள் எம்மால் உயரமான இடத்துக்குச் செல்ல முடியும் - என்றார். (எ-22)

# பட்டத்தைப் பெறமறுத்தமை மதம் மீதான தாக்குதலாம்!

கொழும்பு, டிசெ. 26

இலங்கை போன்ற பௌத்த நாட்டில், பௌத்த பிக்கு ஒருவரிடமிருந்து பட்டங்களைப் பெற மறுப்பதென்பது பௌத்த மதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல் என அனுநாயக்க ஓமாரே கஸ்ஸப தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது: கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் மாணவர்கள் சிலர் செயற்பட்ட விதத்தை நாம் பார்த்தோம். இது நாட்டின் எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கப்பட்ட தவறான முன்னுதாரணமாகும். இதற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது. கொழும்புப் பல்கலைக்கழக வேந்தரான முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு விடயங்களையும் பேசக்கூடியவர். எந்தவொரு அரசியல் தவறுகளையும் விமர்சிக்கக்கூடியவர். ஆனந்த தேரரிடம் பட்டங்களைப் பெற மாணவர்கள் சிலர் மறுத்தமை மதத்தை நிராகரிக்கும் செயற்பாடு. பௌத்த மதகுருவான ஆனந்த தேரருக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அல்ல. இது போன்ற செயற்பாடுகளை சமூகமயப்படுத்துவது நல்லதல்ல - என்றார். (எ-இ)

நாளை 27.12.2021
திங்கட்கிழமை
மார்கழி 12

சுபநேரம் : பி.ப. 12.27 - பி.ப. 01.57
ராகுகாலம் : மு.ப. 07.57 - மு.ப.09.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆழியின் ஊழி

## 17 ஆண்டுகள் ஓடிமறைந்தும் மறையாத கனத்த நினைவுகள்

■ நீர்வையூர் யசிந்தா

பதினேழு வருடங்களுக்கு முன்னர், இதேநாள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஆழிப் பேரலையால் வழித்துத் துடைக்கப்பட்டன. கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடி மறுநாள் உறங்கிக்கொண்டிருந்த பல்லாயிரம் உறவு களின் இறுதி உறக்கமாக அது அமைந்தது. அந்தக் கோரம் நடைபெற்று 17 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் பசுமரத்தில் ஏற்றப்பட்ட ஆணியாக மனதில் பதிந்து, கனத்து நிற்கின்றன அந்தத் தடங்கள்.

இந்து சமுத்திரத்தின் அருகில் உள்ள இந்தோனேஷியாவின் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சுமாத்திரா தீவின் வடக்கே கடலுக்கு அடியில் காலை 6.58 மணிக்கு 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கமானது சுனாமியைத் தோற்றுவித்தது. அடுத்த இரு மணி நேரத்தில் இந்தப் பேரலை இலங்கையின் பல பகுதிகளையும் தாக்கியது. 14 நாடுகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் அந்தக் கோரத்தில் மடிந்தன. இந்தோனேஷியாவில் ஒரு லட்சத்து 84 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இலங்கையில் சுமார் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. இதன்படி சுனாமியால் அதிக அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடாக இலங்கை உலக அளவில் அடையாளப்படுத்தப்பட்டது. அதிலும் சுமார் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைக் காவு கொடுத்தது அம்பாறை. ஏனைய கரையோரங்கள் அடுத்தகட்டப் பாதிப்புக்களை எதிர்கொண்டன.

### இலங்கைக்கே புதியது

கி.பி. 3ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்த வச்சிர நந்தி என்ற முனிவர் 'இறையனார் களவியலுரை' என்ற நூலை எழுதினார். அதில் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கு முன் எமது முன்னோர்களால் பாதுகாக்கப்பட்டு வந்த சங்கங்களும் அதனோடு இணைந்த ஆவணங்களும் கடல்கோளால் காவு கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடுகிறார்.

அந்த முனிவரால் கூறப்பட்ட கடல்கோள் பற்றி வரலாற்றுத்துறை மாணவர்களும் தமிழ் இலக்கிய மாணவர்களும் ஆண்டாண்டு காலமாகக் கற்றுவந்த போதிலும் இலங்கையர்களைத் தாக்கிய ஆழிப்பேரலையே அன்றைய கடல்கோள் என்ற பாடத்தை 2004 சுனாமியே யதார்த்தமாகக் கற்றுக்கொடுத்தது.

### கடல்கோள் என்றால் என்ன?

பூமி பல தட்டுக்களைக்கொண்டமைந்தது. அந்தத் தட்டுக்கள் அதிர்வு விசைகளுக்கேற்ப துலங்கல்களைக் காட்டக்கூடியன. அவ்வாறான நில அதிர்வு கடலடித் தட்டுக்களைத் தாக்கும்போது ஏற்படும் உடனடி நிகழ்வே சுனாமியாகும்.

ஜப்பானின் தீவுப்பகுதி மக்களை இந்த அலை அடிக்கடி தாக்குவதால் அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டே தங்கள் குடியிருப்புக்களையும் அமைப்பர். நில அதிர்வுகள் ரிச்ட்டர் அளவில் தீர்மானிக்கப்படுவதால் அதன் அளவுகள் குறைவடையும்போது நிலஅதிர்வுகள் மட்டுமே ஏற்படும். அதன் அளவுகள் அதிகரிக்கும் போதே சுனாமியாக மாறி கடலலையில் தாக்கத்தை ஏற்படுத்தும். நில அதிர்வுகளின் விசைநிலைத் தாக்கங்களே சுனாமியைத் தீர்மானிக்கின்றன.

### அனுபவங்கள் அழியாதவை

சுனாமிப் பேரலை முடிந்ததும் அதுபற்றி மக்களுக்குள் பேசப்படுகின்ற கதைகள் அதிர்ச்சியும் அதிசயமும் நிறைந்தவை. சுனாமி இடர் ஏற்படுவதற்கு முதலிரு நாள்களுக்குமுன், கடல் சீறி எழுந்து வந்ததைத் தாம் கனவில் கண்டதாக சிலர் தமது அனுபவங்களில் மீட்டிக் கொள்கின்றனர். கடல் வருகிறது என்ற சத்தம் கேட்டதும் முதலாவது அலையைக் கண்டேன். பிறகு நான் எங்கே இருக்கிறேன் என்று கூறமுடியவில்லை. மரத்தின் கிளையொன்றைப் பற்றினேன் அது பல தடைகளைத்தாண்டி ஒரு வீட்டின் கூரையின்மீது என்னை ஏற்றியது. மரத்தின் கிளைகளால் நான் மீட்கப்பட்டேன். எனக்கு என்ன நிகழ்ந்ததென்றே தெரியாது. அரைநிர்வாணமாக நான் காப்பாற்றப்பட்டேன். மானத்துக்குப் பயந்தே பலர் வெளியில் வராமல் மரித்துப் போனார்கள் என்கின்றார் இன்னொருவர்.

> கடல் வருகிறது என்ற சத்தம் கேட்டதும் முதலாவது அலையைக் கண்டேன். பிறகு நான் எங்கே இருக்கிறேன் என்று கூறமுடியவில்லை. மரத்தின் கிளையொன்றைப் பற்றினேன் அது பல தடைகளைத்தாண்டி ஒரு வீட்டின் கூரையின் மீது என்னை ஏற்றியது. மரத்தின் கிளைகளால் நான் மீட்கப்பட்டேன். எனக்கு என்ன நிகழ்ந்ததென்றே தெரியாது.



### சுனாமி டிசெம்பரில் வருமா?

டிசெம்பரை அண்மித்த பகுதிகளிலும் டிசெம்பரிலுமே இயற்கை அனர்த்தங்கள் பெரும்பாலும் நிகழும். மண்சரிவுகள், வெள்ளப்பெருக்குகள், சூறாவளி உள்ளிட்டவைகள் இக் காலப்பகுதியிலேயே நடைபெற்றுவந்துள்ளன.

அதற்குக் காரணம் ஒக்ரோபரைத் தொடரும் காலப் பகுதிகள் கால நிலை மாற்றங்களுக்கான பருவ நாட்காட்டியைக் கொண்டதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையே. இந்த வருடமும் இதை அவதானித்திருக்கலாம்.

ஆனால் இவற்றை வைத்துக்கொண்டு வருடந்தோறும் நடைபெறுகின்ற சில இயற்கை இடர்களால் அந்தப் பகுதிக்குள் சுனாமியும் வரும் என நம்புவது மடமையானதாகும்.

### கடல்கோளுக்கு முன்னர் அதிசயங்கள் நிகழுமா?

2004இல் சுனாமி இடர் ஏற்படுவதற்கு முன்னர் கோடிக்கணக்கான சூறை இன மீன்கள் பிடிபட்டமை, பாம்பு இன மீன்கள் அதிகம் கரை ஒதுங்கியமை, கிணறுகளில் நீர் மட்டம் அதிகரித்தமை போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இவைகளை வைத்துக்கொண்டு சுனாமி வருவதாக நம்புவது இயற்கைக்கு மாறான சிந்தனையாகும். இதனை வைத்து சில சோதிடர்களும் மக்களை ஏமாற்றி மூக்குடைந்த வரலாறுகளை மக்கள் மறக்கக் கூடாது. சுனாமி அனர்த்தத்தை வைத்து அது ஏற்பட்ட அடுத்த மணித்தியாலம் முதலே களவுகளும் பண மோசடிகளும் ஆரம்பமாகின. சிலருக்கு தங்கச் சுனாமி என்பதுபோல் மக்களது உடைமைகளையும் நிவாரணங்களையும் திருடும் மோசடிக் கூட்டம் நன்றே பிழைத்தது. அதேபோன்று சுனாமி வரவுள்ளது என்று ஒரு பகுதியில் இருந்து மக்கள் திட்டமிட்டு வெளியேற்றப்பட்டு திருட்டுக்களும் இடம் பெற்றுள்ளன.

ஆக மொத்தத்தில் பெரும் துயரக் கறையை இந்தப் பேரலை தந்து சென்றுள்ளது. 16 ஆண்டுகள் அல்ல இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும் இந்த அவல நினைவுகள் நெஞ்சில் நிழலாடும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை

தொடர்பு: 077 35 80 547

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள எமது வேலைத்-தளததிற்கு தச்சு வேலை தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு: 077 35 80 547

## பணியாளர் தேவை

கொழும்பு பம்பலப்பிட்டியில் தங்கி நின்று சமையல் வேலை செய்யக்கூடிய பணியாளர் தேவை. (இருபாலாரும்)

**உணவு, தங்குமிடம் வழுங்கப்படும்.**

(40,000 ஆயிரத்துக்கும் குறையாமல்)

**071 4115000**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 07 . 09 . 1969



விண்ணில் 18 . 12 . 2019

### திருமதி தேவராஜா ஆனந்தி

ஆனந்தியெனும் எம் வீட்டு
ஆனந்தம் போய் ஆண்டிரண்டு
கடந்தும் ஆறவில்லையே துயரத்தீ!
பேரன்பின் பெருநதியை காலன்
குடித்திட கூரம்பாய் நெஞ்சில்
மூண்ட வலியின்னும் ஈரவிழிநீராய்
பெருக்கெடுத்து ஓயவில்லை
இன்னும் நினைவுச் சிலுவையோடு

ஆனந்தி இல்லம்,
தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 17 . 04 . 1958



இறப்பு 25 . 12 . 2021

### ஆறுமுகம் கனகலிங்கம்

வளுப்போடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் பரந்தன் 1 ம் கட்டை முல்லை வீதியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகலிங்கம் நேற்று (25.12.2021) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு ஆறுமுகம் சிவக்கொழுந்து தம்பதியினரின் 2 ஆவது மகனும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசபூபதியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர், கதாரணி, கௌரிசுதன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சுந்தரலிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பரந்தன் 1 ஆம் கட்டை முல்லை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் கிரியைகள் இடம்பெற்று கோரக்கன் கட்டு இந்து மயானத்தில் தகனக்கியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தகவல்: மனைவி, பிள்ளைகள்**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 19.12.1975

இறப்பு 24.12.2013

### திருமதி. சிவலோஜினி சுரேஸ்குமார்

திதி : அபரபக்க ஸப்தமி (26.12.2021)

நா இரண்டு ஆண்டுகள் நகர்ந்துவிட்டது
நாயகியே நீ நமைப் பிரிந்து
நாளும் பொழுதும் வளர்கின்றன நம்
மழலைகள் உன்முகம் தாங்கி
காலன் செய்த சதியாலே நடுக்காட்டில்
நமைவிட்டு நீ பிரிந்தாய்
உன் எச்சமாய் எப்பொழுதும் நம் மகவுகள்
என்றும் இருந்திடும் உன் நினைவாய்
என்றும் அழியா உன் நினைவாய் வாழும்.

(CS 41525) (3/6)

கலைவாணி வீதி,
சித்தன்கேணி

கணவன், பிள்ளைகள்
(பிரணவி / மகிஷா)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். பலர் பாராட்டும் செயல் ஒன்றைச் செய்து, பெருமிதம் அடைவீர்கள். எடுத்த விடயம் ஒன்று சிறு தடைகளுக்குப் பிறகு நிறைவேறும்.

**இடபம்:** வாகனத்தைச் சீரமைப்பீர்கள். மகிழ்விக்கும் செய்தி உண்டு. பணியாளர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும். பதற்றமான நிலை மாறும். கோபத்தை கட்டுப்படுத்துவீர்கள். நிம்மதி மீளும்.

**மிதுனம்:** சகபணியாளர்கள் தந்த சிறு தொல்லைகள் நீங்கும். இளைஞர்கள் வாழ்வில் உயர்வதற்கான வழியைத் தேர்ந்தெடுப்பீர்கள். பணியாளர்கள் உழைத்துப் பாராட்டுப் பெறுவீர்கள்.

**கடகம்:** சம்பள உயர்வு வரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். உற்ற நண்பர்களுடன் சிறு கருத்து வேற்றுமை ஏற்பட்டுச் சரியாகும். பணியில் இருந்த பிரச்சினை நீங்கும். பொறுப்பை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். உங்களது பேச்சுக்கு மதிப்புக் கூடும். நெருக்கமானவருக்கு நன்மை வரும். உங்களின் செயற்பாடுகள் குடும்பத்தில் குதூகலத்தைத் தரப்போகிறது.

**கன்னி:** பணியாளர்களுக்கு வாக்கு வன்மை அதிகரிக்கும். பணவரவு தேடிவரும். நீண்டநாளாக இருந்து வந்த மனஅழுத்தம் தீரும். நட்பு வட்டம் விரியும். உங்களது பணியிலும், ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

**துலாம்:** உங்களது கவனக்குறைவால் யாரையும் பகைக்க வேண்டாம். சகோதரர் வீட்டு விசேடங்களில் பங்கேற்பீர்கள். உங்களுக்குப் பாராட்டு கிடைக்கும். உங்களுக்குள்ள தனித் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பயணம் முடிவாகும். பணியில் இடமாற்றம் வரலாம். பணியிடத்தில் உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். முயற்சி கைகூடும். உங்களின் புகழ் கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும்.

**தனுசு:** அலுவலகத்தில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். தாய் வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும் பிறருடன் மனம் விட்டுப் பேசி சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். விருந்தில் பங்கேற்பீர்கள்.

**மகரம்:** விருப்பப்படி விடயங்களை முடிக்கும் பிடிவாதம் உங்களுக்கு வரும். உங்களுக்குத் தொல்லை தந்த எதிரியின் பலம் குறைந்து நிம்மதி வரும். புது விடயத்தில் ஈடுபாடு வரும். தந்தையின் பரிவு கூடும்.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். திடீர் பயணம் உண்டாகும். எதிலும் அவசரம், பதற்றம் வேண்டாம். கலகலப்பான நாள். பணவரவு இருக்கும். படிப்படியாக முன்னேற ஆரம்பிப்பீர்கள்.

**மீனம்:** புதுமனை கட்டிக் குடியேறும் எண்ணம் மேலோங்கும். குடும்ப முன்னேற்றம் கருதி செய்த செலவுக்குப் பயன் உண்டு. காலை நேரத்திலேயே மனம் நிறையும் செய்திகள் வந்து சேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மன்னார்

# புனித செபஸ்தியார் ஆலயத்தில் கிறிஸ்மஸ் நள்ளிரவுத் திருப்பலி

**மன்னார், டிசெ. 26**

**மன்னார் ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கிறிஸ்மஸ் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.**

நள்ளிரவு 12 மணிக்கு இயேசுவின் பிறப்பைக் குறிப்பிடும் வகையில் பாலன் திருச்சொரூபம் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆராதனைகள் இடம்பெற்றன. குறித்த ஆரானைகளின்போது கொரோனா அச்சுறுத்தலில் இருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்கவும், நாட்டில் நீடித்த அமைதியும், மகிழ்ச்சியும் நிலவவும் விசேட பிரார்த்தனையும் திருப்பலியும் ஆயரால் முன்னெடுக்கப்பட்டது. (ம-56)

# வவுனியா தேவாலயங்களிலும் நேற்று நத்தார் கொண்டாட்டம்


வவுனியா, டிசெ. 26

வவுனியாவில் உள்ள தேவாலயங்களில் அமைதியான முறையில் நேற்று கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

வவுனியாவின் பிரதான கிறிஸ்தவ தேவாலயமான இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆயர் பொடித்தோர் ஆண்டகை தலைமையில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கிறிஸ்து பிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த மக்கள் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், பாலன் பிறப்பு வழிபாடுகளிலும் ஈடுபட்டனர். குறித்த தேவாலயத்தின் பாதுகாப்புக் கடமையில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டிருந்தனர். இதேபோன்று, வவுனியாவில் அமைந்துள்ள ஏனைய கிறிஸ்தவ ஆலயங்களிலும் பாதுகாப்புக்கு மத்தியில் பாலன் பிறப்புக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. (ம-18)





கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு, மன்னார் புனித வெற்றி அன்னை ஆலயத்தில் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரும் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயப் பங்குத் தந்தையுமான அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (ம-60)

# கடனுக்கு கச்சாய் எண்ணெய்

கொழும்பு, டிசெ. 26

இலங்கைக்கு கடன் அடிப்படையில் கச்சா எண்ணெய் வழங்க சிங்கப்பூர் இணங்கியுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

180 நாள்களுக்கு கடனைச் செலுத்தும் இணக்கத்தின்கீழ் சிங்கப்பூரிடம் இருந்து கச்சாய் எண்ணெய் கொள்வனவு செய்யப்படவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். ஆறு கட்டங்களாக இந்த கச்சாய் எண்ணெய் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. (ஒ-இ)

# ஸ்தாபகர் நினைவுதினம்

யாழ்ப்பாணம், டிசெ.26

மட்டுவில்தெற்கு, வளர்மதி சனசமூக நிலையத்தின் ஸ்தாபகர், அமரர் பொன். நாகமணியின் 25 ஆவது ஆண்டு நினைவுதினமும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத்தலைவர் க.திவாகர் தலைமையில் இன்று பி.ப. 3.30 மணியளவில் வளர்மதி கலையரங்கில் இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கனகராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.பி.சுவீட்டா மற்றும் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி த.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். கௌரவ விருந்தினராக டென்மார்க் வாழ் நிலைய அங்கத்தவர் கு.விதராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (எ-27)



கிளிநொச்சியில் நத்தார் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. கிளிநொச்சியிலுள்ள அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. முறிகண்டி தென்னிந்திய திருச்சபை ஆலயத்திலும் வழிபாடுகள் இடம்பெற்றன. (ம-6)





கிறிஸ்து பிறப்பு விழாவான நேற்று உலகெங்கும் பரவலாகக் கோலாகலமான கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. கிறிஸ்து பிறந்த ஊரான பெத்லகெம் நகரில் கிறிஸ்து பிறந்த இடம் என்று அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்திலும் வழிபாடுகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி, வரணிப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற 16 மாணவர்களுக்கும் க.பொ.த.சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவனுக்கும் லண்டனில் இயங்கும் வரணிப் பிரதேச ஒன்றியத்தால் 16 மில்லியன் ரூபா நிதியில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. (ரி1-159)



சமுர்த்தி வதிவிட பொருளாதார நுண்நிதி சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் 'சமுர்த்தி சௌபாக்கியா' வாரத்தை முன்னிட்டு, மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் துரித நடவடிக்கைக்கு அமைய மன்னார் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இந்த உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-56)





வடமாகாண எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/141 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் குடும்பத்துக்கு கனடாவில் வசிக்கும் சிவகுமார் செல்வநாயகத்தின் நிதியில் பசுமாடும் கன்றும் அதே நாட்டில் வசிக்கும் கெங்காதரன் நிஷாந்தனின் நிதியில் நீர் இறைப்புக்கான குழாய்களும் வழங்கப்பட்டன. (ரி-1)



விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக மன்னார் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான செயல்முறைப் பயிற்சிகள் மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் மன்னார் மாவட்ட வீதிப் போக்குவரத்து அதிகாரியால் கடந்த செவ்வாய்க்கிழமை பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் 60 மாணவர்களும் 5 ஆசிரியர்கள் மற்றும் மன்னார் றோட்டரிக் கழகத்தினர் அனைவரும் கலந்துகொண்டனர். (ய-213)





மானிப்பாய், கட்டுடையில் மழையால் பாதிக்கப்பட்ட 58 குடும்பங்களுக்கு ஆயிரத்து 300 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களும் கோப்பாய் கல்வி வலயத்துக்குட்பட்ட 6 பாடசாலைகளுக்கு கட்டில்கள், மெத்தைகள் ஆகியனவையும் பூமணியம்மா அறக்கட்டளையின் நிதியில் வழங்கப்பட்டன. (ரி-1)






இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை ஸ்தாபகரும் பிரதம ஆணையாளருமான அமரர் நாகேந்திரம் போஜனின் 10 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளி/ விசுவமடு பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது 50 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. (ய-159)



வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆத்துப்பிலவு, தேவிபுரம் ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கும், கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை, சிலாவத்தை, கள்ளப்பாடு ஆகிய பகுதிகளில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கும் அரிசிப்பொதிகள் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் வழங்கப்பட்டன. (ய-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பற்றாக்குறையாலேயே மட். கடலில் கப்பல் நிறுத்தப்பட்டுள்ளதாம்



கொழும்பு, டிசெ. 26
மட்டக்களப்பு கடற்பரப்பில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ள கப்பலொன்றுக்கு கரையிலிருந்து மணல்கொண்டு செல்லப்பட்டு நிரப்பப்படுவதாக வெளியான செய்திகளை பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், மட்டக்களப்பு கடற்பகுதியில் நங்கூரமிட்டுள்ள கப்பல் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். கடலில் இருந்து மணல் அள்ளப்பட்டு வருவதாகவும், மற்றொரு கப்பல் மணல் ஏற்றி வருவதாகவும், அரசு அதிகாரிகள் அங்கு சென்ற போது, ஆயுதம் தாங்கிய சீருடை அணிந்தவர்களால் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து பங்களாதேஸ்ஷுக்கு பயணித்த கப்பல், எரிபொருள் பற்றாக்குறையைத் தொடர்ந்து அவசர நிலையை எதிர்கொண்டதால் சில நாள்களுக்குமுன்பு நங்கூரமிடப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலுள்ள உள்ளூர் கப்பல் முகவரான விக்டரி ஏஜென்சீஸ் நிறுவனத்திடம் இருந்து எரிபொருள் நிரப்பிய பின்னர் இந்தக் கப்பல் தனது இலக்கை நோக்கி பயணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான பொய்யான தகவல்களை நம்பி ஏமாற வேண்டாம் என பொது மக்களை அறிவுறுத்துவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-இ)

## பெண் பராமரிப்பாளர்கள் தேவை

வவுனியா கோவில்குளம் சிவாலயம் "அகிலாண்டேஸ்வரி அருளகம்" கோவில்குளம் சிறுவர் பராமரிப்புக்கான இரு பெண் பராமரிப்பாளர்கள் உடன் தேவை.
**வயது எல்லை - 35 / 55**
**கல்வி குறைந்தது O/L சாதாரணம்**
(AVA CS 00943) (3/6)

**தொடர்பு : 077 656 7827 / 077 843 7960**

## 17ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்......

**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**
மருதமண்ணில் முத்தாக
08.06.1966

**வேலாயுதம்பிள்ளை இளவரசி**
மருதமண்ணில் முத்தாக
29.03.1995
அழிப் பேரலையில்
நெய்தலில் வித்தாக
26.12.2004



அலையாகும் கடலலை முழங்கிட
கல்லறைகள் பாரிடை எழுந்தது
குவிகின்ற மலர்மாலைகள் ஓரம்
வழிந்தோடும் கண்ணீர்த்துளிகளின் ஈரம்

(cs.41768) (2.6)

மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி.
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நடராஜா சந்திரராஜா (போஸ்)**
(முன்னாள் குகன் ஸ்ரோஸ். உரிமையாளர் தலவாக்கலை)
பிறப்பு
20.02.1948
இறப்பு
19.12.1989
திதி: 26.12.2021

அன்பான அப்பாவே பண்பும், பாசமும்
அறிவும் காட்டி தரணியில் எம்மை உயர்த்தி
யவரே என்றும் எம்முடன் இருந்து
தங்கள் பசுமையான நினைவுகளை மீட்கும்
எமக்கு தங்கள் ஆசீர்வாதம் என்றென்றும்
வேண்டி தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்

(CR 36795) (3.6)

இல. 36, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
01
08
1930

உதிர்வு
21
12
2021



**சின்னத்தம்பி தியாகராஜா (S.T.R)**
**(S.T.R Films உரிமையாளர்)**

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும்,
நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டி நிற்கின்றோம்
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!*

பிரிவால் துயருறும்
**சரவணா நகை மாடம்**
**இல.205/ 05, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(ராஜா கட்டடத்தொகுதி)
(cs 41850) (2.6)

## உடன் வேலைவாய்ப்பு

**வவுனியாவில் இயங்கிவரும் பிரபல்யமான**
**ஐஸ்கிறீம் கடையில்**
பணியாற்றுவதற்கு 20 முதல் 45 வயதிற்குட்பட்ட ஆண் வேலையாள்கள் உடன் தேவை.
(cs 00944) (2.6)

**077 378 8746**

## மணமகள் தேவை

இந்து, ஐரோப்பிய நாடுகளில் தொழில் அதிபராக கடமையாற்றும் வயது 58, உயரம் 5'6" விவாகரத்தானவருக்கு, 50 வயதிற்குட்பட்ட ஆங்கிலம், பிரெஞ்சுமொழி பேசக்கூடிய தொழில் அனுபவமுடைய வெளிநாடு செல்ல விரும்பும் மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார்கள்.

**077 788 0404** (ct36907) (2.6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நெடுங்குளம் சந்திக்கு அருகாமையில் கண்டி றோட், A-9 பாதையில், 9 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. 5 பரப்பு, 4 பரப்பு துண்டுகளாகவும் பிரித்துகொடுக்கக் கூடியதாக உள்ளது. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம் விபரங்களுக்கு
(cs 1239) (2.6)

**077 801 5156**

## வீடு வாடகைக்கு தேவை

வயோதிபத் தம்பதிகளுக்கு
நல்லூர், திருநெல்வேலி,
கந்தர்மடம், கச்சேரி,
சுண்டுக்குழி (கல்வியங்காடு)
விரும்பத்தக்கது.
(cs 1236) (2.6)

**071 856 5298, 077 457 5044**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் **பிரபல புடைவைக் கடை** ஒன்றிற்கு அனுபவம் உள்ள ஆண் / பெண் பணியாளர் தேவை.
(CS 41853B)(3.6)

**தொடர்பு : 077 260 4233**

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கவறிங் நகை கடைக்கு அனுபவம் உள்ள ஆண் / பெண் பணியாளர்கள் தேவை.
(CS 41853A)

**077 260 4233**

## சேவை

முதியோர் பராமரிப்பிற்கும் மற்றும் வீடு சுத்திகரிப்பிற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் எம்மிடம் அனுபவமுள்ள பணியாளர்கள் உள்ளனர்.
(CR 36799)(3.6)

**தொடர்பு : 074 055 5922**

## விற்பனைக்கும், வடைகைக்கும்

யாழ் பிறவுன் வீதியில் 6 பரப்பு காணியும், வீடும்,5பரப்பு காணியும் வீடும் ,1பரப்பு காணியும் வீடும். 2பரப்பு காணியும்,யாழ் k.k.s வீதியில் 2 1/2 பரப்பு காணியும் வீடும், யாழ் நல்லூர் கோயில் அண்மையில் 10பரப்பு காணியும்,4பரப்பு காணியும், யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 2 கடைகளும், யாழ் மின்சாரநிலைய வீதியில் பஸ் தரிப்பிடத்திற்கு பின்னால் 2 கடைகளும் வாடகைக்கு உண்டு.

**0777 23 25 35**

## மரண அறிவித்தல்



**திருமதி சாந்தநாயகி விநாயகமூர்த்தி**

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியையான திருமதி சாந்தநாயகி விநாயகமூர்த்தி அவர்கள் (24-12-2021) வெள்ளிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. வ. நமசிவாயம் (ஆசிரியர்), திருமதி பொன்னுப்பிள்ளை ஆகியோரின் மூத்த மகளும்,
காலஞ்சென்றவர்களான திரு. ந. வல்லிபுரநாதன், திருமதி மகேஸ்வரி இராசேந்திரம், திரு. ந. கந்தசாமி ஆகியோரின் சகோதரியும்,
காலஞ்சென்ற திரு. பொ. விநாயகமூர்த்தி (ஆசிரியர்) அவர்களின் மனைவியும், திருமதி கமலினி சிவயோகன் (ஆசிரியர்), வைத்திய கலாநிதி வி. சிவகுமார், திருமதி ரஜிதா சுந்தரகுமார் (ஆசிரியர்), திரு. வி. தற்பரன் (தாதிய உத்தியோகத்தர் - கனடா) ஆகியோரின் தாயாரும், வைத்திய கலாநிதி சா. சிவயோகன், வைத்திய கலாநிதி சாந்தினி சிவகுமார், திரு. சி. சுந்தரகுமார், திருமதி சர்மிலி தற்பரன் (கணக்காளர் - கனடா) ஆகியோரின் மாமியாரும், பாவனா, சாதனா, தாருகா, பவான், சியாமளன், சாம்பவி, கஜானி,அபிஷேக், ஆதேஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.12.2021) திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடமான இல 89/11, பலாலி வீதி, திருநெல்வேலியில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 45 ரூபாய்

**077 334 1281**

## வீடு விலைக்கு தேவை

நல்ல சூழலில் குறைந்த விலையில் வீடு விலைக்குத் தேவை.

தொடர்பு: **077 078 3832**

## வீடு விற்பனைக்கு

நுணாவிலில் A9 வீதியிலிருந்து இரண்டாவது காணியில் அமைந்த இடைக்கால வீடு விற்பனைக்கு.

**076 065 0166, 077 078 3832**

## A/L இணைந்த கணிதம்

A/L 2022, 2023 மாணவர்களுக்கு தனியாகவோ அல்லது குழுவாகவோ வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**074 111 0790**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு பிறந்த அரச அலுவலக உதவியாளராகப் பணிபுரியும் மணமகனிற்கு உத்தரம், பாதம் 2 (குறைந்த பாவம்) உடைய மணமகள் தேவை.

(m 17835) (2.6)

**077 515 1761, 076 159 5441**

## வாடகைக்கு

பரமேஸ்வரா கல்லூரி வீதி (தபால் பெட்டிச் சந்தி) திருநெல்வேலியில் அமைந்துள்ள குளியலறை, 3 அறைகளுடனான மாடி வீடு வாடகைக்குண்டு.

(cs.1217) (2.6) **076 880 0599**

## HOTEL VACANCY

Rooms மற்றும் திருமண மண்டபங்களுடன் கூடிய யாழ்நகரில் பிரபல்யமிக்க ஹொட்டல் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. Cook - Rs. 40,000/=
2. Roomboy - Rs. 25,000/=
3. Waiter - Rs. 25,000 / =
4. Night Receptionist - Rs.20,000/=

உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

**076 419 2934**

Email: brightinn jaffna@yahoo.com

## மணப்பெண் தேவை

இந்து கௌர குடும்பம் மூல நட்பத்திரம் - தனுசு ராசி பாவக்கிரகம் 15 - 1985ல் பிறந்த சொந்தக் கொம்பனி உரிமையாளருக்கு மணமகள் தேவை. (CS 41842)(3.6)

தொடர்பு : **074 057 5886**

## கடை வாடகைக்கு

யாழ். உரும்பிராய் சந்தியில் இருந்து மருதனார்மடம் வீதியில் பாதுகாப்பான சூழலில் சகல வசதிகளுடன் கூடிய 1050 சதுர அடி புத்தம்புதிய கடை வாடகைக்குண்டு. களஞ்சியமாகவோ அல்லது அலுவலகமாகவோ பயன்படுத்த முடியும். வாகன தரிப்பிடம் உண்டு.

(cr 36906) (2.6)

**077 886 1855, 077 660 2821**

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பேக்கரி ஒன்றிற்கு பணி புரிய ஓரளவு அனுபவமிக்க பாண் உற்பத்தியாளர்களைத் தேடுகின்றோம். தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

(CS 41824)(3.6) **077 785 8317**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டைப் பராமரிப்பதுடன் நன்கு சமையலும் தெரிந்த 35 -50 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருவர் கொழும்பில் உள்ள வீடொன்றிற்கு உடன் தேவை.

(aco 17671) (2.6)

**077 655 5677, 071 429 9935**

## வேலைக்கு ஆள்கள் தேவை

Phoenix உணவகத்திற்கு (Food Shop) சமையல் உதவியாளராகவும். உணவு பரிமாறுபவராகவும் வேலை செய்யக்கூடியவர் தேவை.

- இருபாலினரும் (ஆண், பெண்) விண்ணப்பிக்கலாம்
- 20 வயதிற்கு உட்பட்டோர் விரும்பத்தக்கது
- 40 வயதிற்கு உட்பட்டோராக இருத்தல் கட்டாயமானது.

அடிப்படைச் சம்பளம்: 25000/=

தொடர்பு **074 045 7588**

(Standly Road, வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் Building அருகில்)

(cs1215) (2.6)

## தேவை

முதியோர் பராமரிப்பு, வீட்டுவேலை சமையல் வேலைகள் செய்வதற்கு பெண் பணியாளர்கள் தேவை. யாழ்ப்பாணம், மலையகம் கொழும்பை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும் (09 - 05) (CR 36901)(3.6)

தொடர்பு : **074 055 5922**

## உடனடி வேலை வாய்ப்பு

உணவுப் பொருட்களை பொதி செய்து விற்பனை செய்வதற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- விற்பனை பிரதிநிதிகள் (Sales Rep)
- வாகன ஓட்டுநர்கள் (Drivers)
- பொதி செய்வதற்கு (பெண்கள்)
- களஞ்சிய பகுதி எழுதுனர் (பெண்கள்)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 41852)(3.6)

**077 313 5195, 077 959 4326**

## பணிப்பெண் தேவை

மேல் மாகாணம் / வெள்ளவத்தையிலும் வட மாகாணம் / சாவகச்சேரியிலும் உள்ள வீடொன்றில் வசிக்கும் 75 வயது தமிழ் பெண் மணி ஒருவருடன் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கு சுறுசுறுப்பான ஆரோக்கியமான அனுபவமுள்ள தமிழ் பணிப்பெண் தேவை. வயது 25 - 45 வரை, சம்பளம் 30, 000/- 3 மாதம் பின்பு சம்பளம் உயர்வு உண்டு.

(CR 36800)(3.6)

தொடர்பு : **076 244 4678**

## வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இராசாவின் தோட்ட வீதி சந்தியிலுள்ள கடை சகல தளபாடங்களுடன் இயங்கு நிலையில் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **076 7049048**

(whatsapp) **+440 777 665 5080**

## மணமகன் தேவை

1994 யாழிந்து ரேவதி Development Officer ஏழாலை மணமகள் பதிவு இல : 6654. No Broker Commission, Register Fees Only. www.EQMarriageService.com, Ensured Quality Lanka. Bambalapity.

(cr 36904) (2.6)

Call **076 664 9401**

## மணமகன் தேவை

1992 யாழிந்து மூலம் Engineer உடுப்பிட்டி. மணமகள் பதிவு இல : 6643. No Broker Commission, Register FeesOnly. www.EQMarriageService.com, Ensured Quality Lanka. Bambalapity.

(cr 36902) (2.6)

Call **076 664 9401**

## மணமகன் தேவை

1993 யாழிந்து பூரம் Demonstrator சாவகச்சேரி மணமகள் பதிவு இல : 6628. No Broker Commission, Register FeesOnly. www.EQMarriageService.com, Ensured Quality Lanka. Bambalapity.

(cr 36903) (2.6)

Call **076 664 9401**

## வாடகைக்கு

யாழ். கோவில் வீதி முடிவில் வீதியோரத்தில் களஞ்சியமாக பயன்படுத்தக்கூடிய பழைய வீடு வாடகைக்கு அரச, தனியார் நிறுவனங்களுக்கு விடப்படும்.

(41845) (2.6)

**077 669 6208**

## தேவை

பொரலஸ்கமுவையில் உள்ள கார் சேர்விஸ் நிறுவனத்துக்கு வாகனம் கழுவுவதற்கானவர்கள் (Body wash Helpers) உடனடித் தேவை. வயது 18 க்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அனுபவம் அற்றவர்களாயேனும் விண்ணப்பிக்கலாம் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் சலுகைகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு : (CR 36798)(3.6)

**077 721 9229, 077 735 2332**

# அடகு வைத்து மீட்டெடுக்க இயலாது போன

## உங்களது தங்க நகைகள் மீண்டும் உங்களது கைககளுக்க

நீங்கள் தற்பொழுது அடகு வைத்திருக்கும் ரசீதனை எமது **076 788 8222** என்ற இலக்கத்திற்கு Whatsapp செய்யவும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்.**

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 622 7250 | மட்டக்களப்பு | 076 622 7243 |
| சுன்னாகம் | 071 087 0689 | ஹட்டன் | 077 879 0372 |
| கிளிநொச்சி | 076 622 6964 | யாழ்ப்பாணம் | 076 622 6942 |
| பருத்தித்துறை | 076 622 6980 | முல்லைத்தீவு | 077 120 1856 |
| சாவகச்சேரி | 076 622 6967 | சம்மாந்துறை | 077 803 2233 |
| தலவாக்கலை | 071 087 1009 | அக்கறைப்பற்று | 077 778 3673 |
| நாவலப்பிட்டி | 071 087 0706 | நெல்லியடி | 074 092 0357 |
| புதுக்குடியிருப்பு | 076 991 4642 | சங்கானை | 074 092 0317 |
| கல்முனை | 071 087 0663 | பேருவளை | 077 299 9934 |
| பூண்டுலோயா | 077 768 3889 | மத்துகம | 077 220 6413 |
| வாழைச்சேனை | 077 815 1938 | ஒட்டுச்சுட்டான் | 074 092 9571 |
| ராகலை | 071 087 0703 | வவுனியா | 074 092 0313 |
| கொழும்பு | 070 253 9382 | திகன | 077 815 6738 |
| கம்பளை | 071 087 0735 | களுத்துறை | 077 616 7149 |
| மாத்தளை | 070 253 9389 | வெள்ளவத்தை | 071 087 0686 |
| கிண்ணியா | 077 120 1853 | களுவாஞ்சிகுடி | 077 120 1864 |
| மஹியங்கனை | 077 120 1862 | உடப்புவ | 077 120 1851 |
| கல்பிட்டி | 076 160 5803 | வேலணை | 076 994 0273 |
| மஸ்கெலியா | 076 090 9822 | [illegible] | [illegible] |
| கட்டுகஸ் தோட்ட | 077 947 6206 | [illegible] | [illegible] 7119 |
| | | மன்னார் | 077 498 5049 |

(ACO 7672) (3/6)

## நாகபூசணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர் கணக்காளர், வங்கியாளர், அரச உத்தியோகத்தர் ஆசிரியர், தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் பொருத்தம் பார்க்கப்பட்டு உடன் தரப்படும்.

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(CS 41775) (3/6)

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

## ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய நகரங்களில் வீடு வீடாகச்சென்று (Door to Door) புத்தகங்கள் விநியோகம் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் ஆள்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. தினசரி 2000/= வருமானம் உத்தரவாதம் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

(cs 41774) (2.6)

**077 623 7295, 071 918 7403**

## வேலைவாய்ப்பு

யாழ்நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு (Event Management)

01. வரவேற்பாளர் (பெண்) Full Time - 15000/=
02. மணவறை அலங்கரிப்பாளர் (பெண்) - 18000/=
03. ஸ்ரோர் வேலைகள் (பெண்) - 21000/=
04. வெளி வேலைகள் / அலங்கரிப்பு வேலைகள் / மணவறை வடிவமைப்புகள் — ஆண்கள் - 25000/=
05. பகுதிநேரம் (5 pm to - 8.30 pm) பெண் - 7500/= (வரவேற்பாளர்)

நேரில் வரவும் : இல.120, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


(cs 41843 (2.6)

**077 775 0318**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 07 . 1932



இறப்பு 19 . 12 . 2021

## நாகலிங்கம் குகதாசன்

(ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ் பெக்டர்)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் உடுவில் சண்டிலிப்பாய் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாகலிங்கம் குகதாசன் கடந்த (19.12.2021) ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்தம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம் - நாகரத்தினம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற பத்மரஞ்சினியின் ஆருயிர் கணவரும், சறோஜினி (சறோ- பிரான்ஸ்), சுபாஜினி (சாந்தி - பிரான்ஸ்) ஆகியோரின் அருமை அப்பாவும், காலஞ்சென்ற ராதாகிருஷ்ணன், சிவகுமாரின் அன்பு மாமனாரும், ஆதவன், அஸ்வின், நிஷாங்கன், நிதீஷன், நீரஜா, தாட்சாயினியின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கணேசலிங்கம், காலஞ்சென்ற உமாதேவி மற்றும் ஜெயலொளிபவன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அரியமலர், பத்மசுந்தரி, காலஞ்சென்ற பத்மநாதன், காலஞ்சென்ற பத்மநேசன் மற்றும் திலகவதி, பத்ம தேவன் பத்மஜோதி, பத்மானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமை மைத் துனரும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளைமறுதினம் (28.12.2021) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கும் 10.00 மணிக்கும் இடையில் 55 Ruedu General Lec Lerc 93370 Mont Femeil என்னும் இடத்தில் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:
பத்மசுந்தரி - 021 225 6168 - சண்டிலிப்பாய்
பத்மதேவன் - 076 883 7444 - மருதனார்மடம்
நாகராஜசேகரன் (Bala) - 077 717 9972 - உரும்பிராய்
தேவி இந்திராணி (Baly) - 077 455 3546 - இணுவில்
விக்னராஜசேகரன்- (விக்கி) 077 138 9161 - வட்டுக்கோட்டை
மஞ்சு - 077 640 4383 - உடுவில்
ரஞ்சா - உடுவில்

தகவல் :
சறோஜினி (சறோ - பிரான்ஸ் - 0033 664 343 385)
சுபாஜினி (சாந்தி - பிரான்ஸ் - 0033 761 189 488)

(cs.41804) (2.6)

# கண்ணீர் காணிக்கை



எமது நிறுவன சட்ட ஆலோசகரும் சிறந்த வாடிக்கையாளருமான

## திரு. கனகரத்தினம் கேசவன்

(சிரேஷ்ட சட்டத்தரணியும் சமாதான நீதவானும்)

அவர்கள் காலமான செய்தியை அறிந்து மிகுந்த வேதனை யடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப் பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திருக்கின்றோம்.

(CR 36797) (3.6)

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாளிகை உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்

## நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் தகவல் அறியும் உரிமை உள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா?



**எந்தவொரு பொது அதிகாரசபையிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக**

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் நடைமுறையிலுள்ள விசேட அம்சங்களைக்கொண்ட இச் சட்டத்தின் கீழ் தகவல்களை தாமாகவோ அல்லது கோரிக்கையினூடாகவோ பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**இதன் ஊடாக,**

☑ கருத்துச் சுதந்திரம் வலுப்பெறும்

☑ வெளிப்படைத்தன்மை மேலோங்கி பொதுமக்களுக்கு அரச சேவைகள் இலகுபடுத்தப்படும், இலஞ்சம் மற்றும் மோசடிகள் குறையும்

**நீங்கள் செய்ய வேண்டியது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது அதிகாரசபைகளிடம் தேவையான தகவல்களை கோருவது மட்டுமே.**

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா
இல: 366, நாவல வீதி, நாவல, ராஜகிரிய
தொ.இல: 011 436 9781
தொ.நகல்: 011 2 865 777
மின்னஞ்சல்: tisl@tisrilanka.org
இணையத்தளம்: www.tisrilanka.org
www.rtiwatch.lk

Funded by the European Union

(CR 36791)

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

## பகிரங்க ஏல அறிவித்தல்

### கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி.

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை **2022.01.01 - 2022.12.31** வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க ஏலம் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக நடைபெறும்.

பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி, நேரம் :- 2021.12.30 காலை 10.30 மணி
பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் :- கரைச்சி பிரதேச சபை, தலைமை அலுவலகம், கிளிநொச்சி.

பகிரங்க ஏலம் விடப்படும் குத்தகை நிலையங்கள்

| இல | குத்தகை நிலையம் | பகிரங்க ஏல இழிவுத் தொகை |
|---|---|---|
| 1 | கிளிநொச்சி சந்தை புதிய பொதுமலசலகூடம் | 64,424.56 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 141,115.77 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 29,160.00 |
| 4 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 154,683.51 |
| 5 | இராமநாதபுரம் சந்தை மாட்டிறைச்சி கடை | 319,512.60 |
| 6 | இராமநாதபுரம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 230,622.39 |
| 7 | இரணைமடு சந்தை கோழி இறைச்சிக்கடை | 580,041.00 |
| 8 | D10 உருத்திரபுரம் சந்தை தொகுதி | 12,882.06 |
| 9 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 335,238.75 |
| 10 | அக்கராயன் மாட்டிறைச்சிக் கடை | 81,170.10 |
| 11 | பரந்தன் சந்தை கோழி இறைச்சிக் கடை | 241,461.00 |
| 12 | பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 62,370.00 |
| 13 | பரந்தன் சந்தை தொகுதி | 67,716.00 |
| 14 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 4,860.00 |
| 15 | புன்னைநீராவி சந்தை கோழி இறைச்சிக்கடை | 197,802.00 |
| 16 | புன்னைநீராவி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 179,982.00 |
| 17 | கல்லாறு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 64,152.00 |
| 18 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 40,516.80 |

01. பகிரங்க ஏலத்தில் பங்குபற்றுபவர்கள் 2021.12.30 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் ரூபா.500.00 செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும். பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

02. சித்தியடையும் ஏலகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதி தொகையினை அன்றைய தினமே உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த கேள்விகாரர் ஒப்பந்தத்திற்கு அமைவாக குத்தகை நிலையத்தை நடாத்தினால் குறித்த வைப்பு தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகை ஒப்பந்தமாக மாற்றம் செய்யப்படும்.

03. 2021.11.27 ஆம் திகதி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளும் இதற்கு பொருந்திக்கொள்ளப்படும்.

தவிசாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி.

(CR 36905)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச ஆங்கில, கணினி, சிங்கள வகுப்புக்கள்

### புதிய பிரிவுகள் : 33

### Certificate/ Diploma Courses :

- Cerfiticate in English / ICT / Singalam
- Diploma in English / Spoken English
- Diploma in Ms - Office / ICT
- Diploma in Singala



### HND Courses : (ஆசிரிய நியமனத்திற்குரியது)



- Higher National Diploma In English
- Higher National Diploma In Business Managemant
- Higher National Diploma in Information Technology

ஆரம்பம் 01.01.2022 - 10.00 am

குறிப்பு
- சான்றிதழ் பிரிவுகள், காலம் 3 மாதங்கள்
- HND பிரிவுகள் 02 வருடங்கள்
- கற்கைகளுடன் வேலைவாய்ப்பு
- Certificate / Diploma HND Degree



**IPS** to Your Future

பல்கலைக்கழகம் அண்மையில்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
021 434 0229,076 685 2529

## ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவுநாள் கடைப்பிடிப்பு

2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் ஈடுபட்டவேளை அரச ஒட்டுக்குழுவால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவுநாள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுக் கடைப்பிடிக் கப்பட்டது.


காங்கேசன்துறைவீதி, கொக்குவிலில் அமைந்துள்ள அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை 5.30 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது. அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினரும் செயலருமான செல்வராசா கஜேந்திரன், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் மற்றும் கட்சியின் மகளிர் அணித் தலைவியும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினருமான வாசுகி ஆகியோரால் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

(ஒ-125)




## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 . 02 . 1947 | 25 . 12 . 2021 |



### நடராசா பரமேஸ்வரன்

உடுவில் தெற்கு பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் லோட்டன் வீதி மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட நடராசா பரமேஸ்வரன் நேற்று (25.12.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராசமணி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - பறுவதாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகனும், தமயந்திதேவியின் அன்புக் கணவரும், தேவராஜ் (தொழிநுட்ப உதவியாளர் SLT Jaffna), அபிராமி (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துர்க்காஷர்மினி, ஜனகன் (ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹிபிரசாத்தின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, பவாநாதன் மற்றும் நகுலேஸ்வரி, சண்முகரட்ணம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

லைமன் லேன்,
லோட்டன் வீதி, மானிப்பாய்.
(CS 1238) (3/6)

021 225 6000
071 856 5673

தகவல்:
குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

## மரண அறிவித்தல்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 12 . 01 . 1951 | 24 . 12 . 2021 |



### பாலசுப்பிரமணியம் ஆச்சாரி விஜயலெட்சுமி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் ஆச்சாரி விஜயலெட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (24.12.2021) வெள்ளிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் ஆச்சாரி - வள்ளிம்மா தம்பதியாரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாராயணன் ஆச்சாரி காமாட்சி தம்பதியரின் மருமகளும், திரு. பாலசுப்பிரமணியம் ஆச்சாரி அவர்களின் அன்பு மனைவியும், நாகராஜன் (ஜெயதுர்க்கா நகை தொழிலகம் மல்லாகம்), கவிதா (பிரான்ஸ்), சந்திரன், வனிதா, துர்க்காதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜேஸ்வரி, ராஜலிங்கம் (பிரான்ஸ்), ரதி, திருமாலன், ராஜசேகர், ஆகியோரின் அன்பு மாமியாரும், நரேஸ்குமார், சிலவன், விஷ்ணுவரன், பகிராம், நேபகா, வைஷ்ணவி, வராகினி, ரித்திகா, பர்ணிகா, விபூஷ்ரன், சிவரீஸ் சர்வேஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியவில் சுன்னாகம் கொத்தியாவத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

ஜெயதுர்கா நகை தொழிலகம்,
மல்லாகம்.
(CS 1238) (3/6)

தகவல்:
குடும்பத்தினர்
சுன்னாகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்து ஆலய...

காங்கேசன்துறையில் குமாரகோவிலின் பிள்ளையார் சிலை களவாடப்பட்டமை தொடர்பில் முதலில் தகவல் வெளியாகியிருந்தது. குமாரகோவில் காணியில் அடாத்தாக கெமுனு விகாரை அமைக்கப்பட்டுள்ளதுடன், அந்தப் பகுதி பாதுகாப்புத் தரப்பினரின் அதீத கண்காணிப்புக்கும் உட்பட்டதாகும். இந்தத் தகவல் வெளியாகியிருந்த நிலையில் மேலும் 4 சிலைகள் களவாடப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மாவிட்டபுரம், நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞன் ஒருவர், புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், ஆலய விக்கிரகங்களை கொழும்பில் விற்றமை தெரியவந்துள்ளது. அத்துடன் நவக்கிரியைச் சேர்ந்த 25 வயது இளைஞனும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து விசேட பொலிஸ் அணி கொழும்புக்கு நேற்று முன்தினம் சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தது. இதன் அடிப்படையில் 20 க்கும் மேற்பட்ட சிலைகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன் இந்தச் சிலைக் களவுடன் 3 இராணுவத்தினரும், கடற்படைப்புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் தொடர்புபட்டுள்ளனர் என்ற தகவலும் வெளிவந்துள்ளது. அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத் துள்ளனர்.

30 சிலைகள் வரையில் யாழ்ப்பாணத்தில் களவாடப்பட்டுள்ளபோதும் இதுவரை 5 சிலைகள் தொடர்பில் மாத்திரமே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-26)

### சுனாமி...

ரிழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக இன்று காலை 9.25 முதல் 2 நிமிடங்கள்வரை மௌனஅஞ்சலி செலுத்துமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பொது மக்களிடம் கோரியுள்ளது. (ஒ-இ)

### மாணவிகளுக்கு...

ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலையில் ஆசிரியரால் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுக்கப்படுவதாக, மாவட்ட சிறுவர், பெண்கள் பாதுகாப்புப் பிரிவுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. அதற்கு அமைவாக முல்லைத்தீவுப் பொலிஸார் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர். நேற்று நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார். எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-19)

### ஊசி போட்ட....

நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மாங்குளம் மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி ஏற்றல் இடம்பெற்று வருகின்றது. அங்கு சென்ற ஒருவர், ஊசி ஏற்றிய தாதியுடன் அங்கசேட்டையில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் அவர் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-19)

### சார்ஜன்ட்...

இரு பொலிஸார் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார் என்று கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் சரணடைந்துள்ள நிலையில் அவரை எதிர்வரும் 6ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள், விசேட விசாரணைப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாண்டிருப்பைச் சேர்ந்த நவீனன் மற்றும் ஒலுவிலை சேர்ந்த அப்துல் காதர், பிபில மற்றும் சியம்பலாண்டுவ பிரதேசங்களைச் சேர்ந்த துசார, பிரபுத்த உள்ளிட்ட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களே உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் சார்ஜன், பொலிஸ் நிலையத்தில் முன்காவல் கடமையில் இருந்த பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்தே ஏனைய உத்தியோகத்தர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் சிவில் உடை தரித்து உள்ளகக் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டவர் எனவும் விடுமுறை கோரிய நிலையில் வழங்கப்படாமையாலேயே இவ்வாறு நடந்துகொண்டார் எனவும் விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய சார்ஜன் இரு துப்பாக்கிகள் மற்றும் துப்பாக்கி ரவைகளுடன் அவரது சொந்த வாகனத்தில் தப்பிச் சென்று தனது தாயை பார்த்த பின்னர் மொனராகலை மாவட்டத்தின் எதிமலை பிரதேச பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். (ஒ-இ)

### பொறுப்பின்றி....

பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையாக இயங்கி வரும் பிரபலமான தனியார் மருத்துவமனைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தியில் மிக நீண்ட காலமாக இயங்கி வரும் பிரபலமான தனியார் மருத்துவமனையின் கழிவுகள், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்துக்கு முன்பாகவுள்ள வெற்றுக் காணியில் கொட்டப்பட்டு அங்கேயே அவை எரியூட்டப்பட்டும் வந்தன. இந்தச் செயற்பாடு காரணமாக சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டது. இது தொடர்பில் பொதுமக்கள் நேற்றைய தினம் மாநகர சபை உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர்.

அவர்கள் சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

ஆபத்தான மருத்துவக் கழிவுகள் எந்த வித பாதுகாப்பு நடவடிக்கையும் இன்றி எரியூட்டப்பட்டதை உறுதி செய்தனர். சுகாதாரத்தரப்பினருக்கும் தெரியப்படுத்தினர். அவர்களும் அங்கு வந்து நிலைமையை ஆராய்ந்து ஆதாரங்களைச் சேகரித்தனர். சுற்றுச்சூழல் பொலிஸாருக்கு முறைப்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி தனியார் மருத்துவமனை இதே போன்ற செயற்பாட்டை முன்னரும் முன்னெடுத்திருந்ததாகவும், அவர்களுக்குப் பலமுறை எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் தெரிவித்தார். (ஒ-26.27.125)

### துப்பாக்கிச்சூடு...

யினர் மறித்தபோதும் நிறுத்தாமல் சென்றதனால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்தில் உழவு இயந்திரத்தில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்ததுடன் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரியாலை முள்ளியைச் சேர்ந்த 27 வயதுடைய யசிந்தன் என்பவரே காயமடைந்தார். அவர் பொலிஸ் காவலில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். மணல் ஏற்றிய பெட்டியுடன் உழவு இயந்திரம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (ஒ-26)

### இளம்குடும்பப்பெண்...

2 பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளார். ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அனுசா சதீஸ்குமார் (வயது - 22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கணவர், சந்தேகத்தில் சித்திரவதை செய்வதாகவும் இதன் காரணமாக கடந்த 20ஆம் திகதி தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார் என்றும் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. கணவன் முன்பாகவே அவர் தீ மூட்டியதாகவும், அவர் அதனைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் விசாரணைகளின்போது மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கணவர்தலைமறைவாகியுள்ளதாகவும் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஒ-26)

# சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதிக்காது

## ரணில் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, டிசெ. 26

டொலர் நெருக்கடிக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தை நாடினால் அந்த அமைப்பு இலங்கைக்கு நிபந்தனைகளை விதிக்கும் என்று நான் நினைக்கவில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



உலகில் இதுவரை ஆறு நாடுகள் சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்றுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியம் அந்த நாடுகளுக்கு நிபந்தனைகளை விதிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதே டொலர் பிரச்சினையைத் தீர்க்க சிறந்த வழி என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஒ-இ)

# பொருளாதார நெருக்கடி ஏற்படத்தான்போகின்றது!

## மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநரும் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 26

அடுத்த ஆண்டு பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி ஏ.விஜயவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி அடுத்த ஆண்டு இன்னமும் தீவிரமடையும். அரசின் தேசிய வருவாயின் வளர்ச்சி எதிர்மறை அல்லது பூச்சிய அளவில் அடுத்த ஆண்டு இருக்கும்.

மத்தியவங்கிபெருந்தொகைப்பணத்தை அச்சிடுவதும் பண விநியோகத்தை அதிகரிக்க அனுமதித்துள்ளது.

2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் மத்திய வங்கி நாட்டின் பண விநியோகத்தை 3 ஆயிரம் பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

இது 39 சதவீத அதிகரிப்பாகும். பணவீக்கம் அதிகரித்து வருகின்றது. அந்நியச் செலாவணி இல்லாமையால் ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைவதை தடுக்க முடியாது.

எனவே அடுத்த ஆண்டு மிகக் கடுமையான பொருளாதார, அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும்- என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நுணாவில் மேற்கு A9 வீதியிலுள்ள பெற்றோல்செற் அருகாமையில் நுணாவில் வாசகசாலை முன்பாக 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(2 பரப்பாகபிரிக்கப்பட்ட நிலையில் )
தரகர் தேவையில்லை.

தொடர்பு 076 89 09 259
077 01 50 353

## வேலையாள்கள் தேவை

**சூப்பர் மார்கெட்** வேலைக்கு ஆள்கள் தேவை. **காசாளர், கணக்காளர், மேற்பார்வையாளர், முகாமையாளர்** Photo Shop IT தெரிந்தவர்கள். **பெண்கள்** மட்டுமே எதிர் பார்க்கப்படுகின்றனர். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
**இடம் : நல்லூர், திருநெல்வேலி.**
தொடர்புகளுக்கு:
தொ.பே.: 077 028 2811, 076 022 5001
முகவரி: **195, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**
Email Ad.: mkpdiscounts@gmail.com
(cs.41770) (2.6)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம், சுன்னாகம், கந்தரோடைப்பகுதியில் கணக்கர் வளவு**
**4 பரப்புக்** காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
**14 அடிபாதையுடன் சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்**
**பார்வையிடும் நேரம்:** காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணிவரை. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
(தரகர் தேவையில்லை)
(cs 1228) (2.6)

தொடர்பு: 077 814 7389, 077 614 7333

## வேலை வாய்ப்பு!

**விவசாய பண்ணை மேற்பார்வையும் வேலையும்**

தகைமை:
- Agriculture engineer, Agriculture science
- Agriculture Degrees
- Animal science Degrees

விசேட தகமை:
- English, Singala மொழிஅறிவு.கணினி அறிவு.
- விவசாய ஆர்வம்
- விவசாய அனுபவம் மிக அவசியம்.

- பிறந்த இடம்: கிளிநொச்சி மாவட்டம் அல்லது முல்லைத்தீவு மாவட்டம் என்பது அவசியம்
- சம்பளம்: பேசித்தீர்மானிக்கப்படும். வயது: 23 - 33

அனுப்பப்படவேண்டிய முகவரி.
lingammaster@gmail.com (cs. 41825) (2.6)

## வாடகைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி யாழ்ப்பாணத்தில் வீதியோரமாக 6000 சதுர அடியில் அமைந்துள்ள கடை (ஸ்டோர் ரூம், Office Room, 2 சமையலறை, 3 குளியலறை Toilet வசதிகளுடன்) வாடகைக்கு உண்டு.
(நான்கு லொறிகள் Park பண்ணும் வசதியுண்டு)
மேலதிக விபரங்களுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு நேரில் வரவும்
(cs 1216 (2.6)

Mobile: 076 949 2048

## வேலையாள்கள் தேவை

மானிப்பாயில் இயங்கும் பான்சி கடைக்கு ஆண்/ பெண் வேலையாள்கள் தேவை.
ஆலடிச்சந்தி, மானிப்பாய். 070 607 1141

## வீட்டு தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு: 076 803 5438
076 434 4254

விலாசம்: இல.28, கோதல வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கொக்குவில் புகையிரத வீதியில் 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

077 190 9253

## வயோதிபரை பராமரிக்க ஆள் தேவை

தங்கி நின்று பராமரிக்கக் கூடிய பெண்கள் தேவை

077 773 3368 (cs1231) (2.6)

## பணியாளர் தேவை

கோண்டாவிலில் உள்ள ஸ்ரூடியோவிற்கு கணினி அறிவுடைய ஆண், பெண் தேவை தொழில் பழகுபவர்களும் தொடர்பு கொள்ளலாம். (CS 41844)(3.6)

078 911 7260, 077 248 7442

## விற்பனைக்கு

BCS XXXX இலக்கமுடைய
Pulsar 150 **மோட்டார் சைக்கிள்**
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

077 535 3824 (cs1227) (2.6)

## இந்தியாவில் ஒமிக்ரோன் 415

புதுடில்லி, டிசெ.26
இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 415 ஆக அதிகரித்துள்ளது.
உருமாறிய கொரோனா வகையான ஒமிக்ரோன் தொற்று உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் பரவி வருகிறது. இந்த நிலையில் இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 415 ஆக அதிகரித்துள்ளது.
அதிகபட்சமாக மகாராஷ்டிரா மாநிலத்திலேயே ஒமிக்ரோன் தொற்றால் பாதிக் கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாகப் பதிவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## காணி தேவை

உரும்பிராய். ஊரெழு. புன்னாலைக்கட்டுவன். வசாவிளான். பகுதிகளில் பலாலி வீதியை அண்மித்த பகுதியில் (5 - 10 பரப்பு) காணி தேவை.
உரிமையாளர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும் (CS 41608)(3.6)
தொடர்பு: 076 399 6505

## மணமகன் தேவை

1989 இல் பிறந்த யாழ் இந்து பூரடம் 5 இல் சூரியன் செவ்வாய் உயர் கல்வித் தகைமைகளைக் கொண்ட அரச வங்கி உத்தியோகபெண்ணுக்கு கல்வித்தகைமைகளையுடைய அரச உத்தியோக மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு - விளம்பர இல 001
மே/பா உதயன் 361 கஸ்தூரியார் வீதி .யாழ்ப்பாணம்

## NIKON கமரா மற்றும் மொபைல் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
**NIKON D 7500. NIKON D 5200, NIKON Z 6 (Body Only)** மற்றும் Lens, **மொபைல்** (Iphone 6 S+, Samsung note 8, Samsung note 10) விற்பனைக்குண்டு.

(cs 1218) (2.6) 076 998 9801

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு Billing Clerk with Computer knowledge, Delivery boy, waiter ஆகிய வேலைகளுக்கு ஆட்கள் தேவை. (CR 36796)(3.6)

தொடர்பு 077 668 1840

## தென்னங்காணி விற்பனைக்கு

முகமாலை A-9 வீதியில் இருந்து 1 km தூரத்தில் 29 ஏக்கர் விற்பனைக்குண்டு.
5 ஏக்கர்களாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.

077 232 0176, 077 239 0780 (cs.41841) (2.6)

## காணி விற்பனைக்கு

நல்லூர் பழம் வீதியில் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 10 அடி பாதையுடன் கூடிய 1 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு
(அரசடி வீதியில் இருந்து 20m தூரம்)
(தரகர் தேவையில்லை)

தொடர்பு : 070 257 5174 (CS 41854 (3/6)

## வேலைவாய்ப்பு

யாழ்நகரில் இயங்கும்
எமது நிறுவனத்திற்கு இரவு நேர
**கிராபிக் டிசைனர் (Graphics Designer)** தேவை.
ஆர்வமுள்ளவர்கள் பழக விரும்புவர்கள்
உங்கள் சுயவிவரக் கோவையுடன்
**27.12.2021 திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் 12.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்**



(cr.8303)

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## யாழ் வேலைவாய்ப்புகள்

150+ Vacancies, 30+free Vacancies
நேர்முகத்தேர்வுகள்.மேலதிக விபரங்களை Youtube ல் DEWMAS என Search செய்து பார்வையிடலாம் .

DEWMAS 077 77 33 368

## தேவை

எமது தேவைக்காக கட்டட இடிபாடு 20 டிப்பர் (60 கியூப்), கிரவல் 2 டிப்பர் (6 கியூப்) தேவை.
(CS 41851)(3.6)

தொடர்பு : 076 711 1168

## வேலை வாய்ப்பு

**எமது WEC நிறுவனம் அலுவலக ரீதியான வேலை வாய்ப்பினை வழங்கவுள்ளது**
**வாய்ப்பினை வழங்க எதிர்பார்ப்போர்**
- Lock down இல் வேலையை இழந்தோர்
- நிரந்தர வேலை வாய்ப்பினை எதிர்பார்ப்போர்
- 10 - O/L, A/L படித்து விட்டு நிறுவனத்தில் வேலை செய்ய எதிர்பார்ப்போர்

எதிர்பார்ப்பவர்கள்
நேர்முக தேர்வினூடாக தெரிவுசெய்யப்படுவார்.
ஆர்வம் உள்ளவர்கள்
077 922 7362, 077 324 8647
எனும் இலக்கத்திற்கு தங்களது
**தே.அ.அட்டை இலக்கம்** மற்றும் **முகவரி. முழுப்பெயர், பிறந்த ஆண்டு, திகதி** என்பவற்றை **SMS** செய்யவும்.
மேலதிக விவரங்களுக்கு:
077 940 8007 (cs.1125) (2.7)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 மார்கழி 11 ஞாயிற்றுக்கிழமை (26.12.2021) சிகரம் : 79

பட்டம் விடுவோம் பட்டம் விடுவோம்
பாலா ஓடிவா
பட்டத்தில் ஏறி வெளிநாடு போவோம்
பாலா ஓடிவா
ஹெலியில வந்து பேர்த்டே கொண்டாட
பாலா ஓடிவா
கியூவில நிண்டு சாமான் வாங்க
பாலா ஓடிவா

–ஒட்டுக்குழுச் சுவாமிகள்



தென்னாபிரிக்காவின் நிலை இலங்கைக்கும் ஏற்படலாம்!

03 »




கெட்ட கிருமி

12 »

# உள்ளூராட்சி சபைகளில் நடப்பதென்ன?

○ நிலாந்தன்





கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது காரைநகரில் ஒரு சுயேச்சைக் குழுபோட்டியிட்டது. அந்தப் பிரதேசத்தில் காணப்படும் சமூக வேறுபாடுகளின் அடிப்படையில் குறிப்பிட்ட சில சமூகங்களை பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு சுயேச்சைக்குழுவாக அது தேர்தலில் போட்டியிட்டது. எனினும் அதன் தேர்தல் விஞ்ஞாப னத்தில் தெளிவான தமிழ்த்தேசிய நிலைப்பாட்டை அந்தக்கட்சி வெளிப்படுத்தியது.தேசிய விடுதலை என்பது சமூக விடுதலையை யும் உள்ளடக்கியதே என்பதனை அந்தத் தேர்தல் அறிக்கை தெளிவாக வெளிப்படுத்தியிருந்தது.

தேர்தலில் அந்தச்சுயேச்சைக் குழு மூன்று ஆசனங்களைப் பெற்றது.எனினும் பிரதேச சபையைக் கைப்பற்றுவதற்குத் தேவையான பெரும்பான்மை கிடைக்க வில்லை. இதனால் ஏனைய கட்சிகளுடன் பேரம் பேச வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது. அப்பொழுது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியோடு அவர்களை இந்தக் கட்டுரையாளர் தொடர்புபடுத்திவிட்டார். எனினும் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவில்லை. காரணம் ஈ.பி.டி.பி.யின் ஆதரவைப் பெற்ற ஒரு சுயேச்சைக் குழுவைத் தாம் ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொண்டிருந்தது. இதனால் தவிசாளர் பதவி கூட்டமைப்பிடம் சென்றது.

அண்மையில் அந்தப்பிரதேச சபையின் தவிசாளர் இறந்துபோன காரணத்தால் அந்தப்பதவி வெற்றிடம் ஆகியது. அதன்பின் நடந்த வாக்கெடுப்பில் சுயேச்சைக் குழு வெற்றி பெற்றது.தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தபடியால் அந்த வெற்றி கிடைத்தது. எனினும் அதன்பின் வந்த பட்ஜெட் வாக்கெடுப்பில் சுயேச்சைக் குழுவின் தவிசாளர் தோற்கடிக்கப்பட்டார். கூட்டமைப்பு, யு.என்.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்து அவரைத் தோற்கடித்தன.

இது தொடர்பில் சுயேச்சைக்குழுவின் ஸ்தாபகர்களில் ஒருவர் இந்தக் கட்டுரையாளரோடு தொடர்பு கொண்டார். 'தமிழ்த்தேசியத் திரட்சியை சமூகங்களின் பெயரால் உடைப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.எனவே தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் இதுவிடயத்தில் எம்மை ஏன் ஆதரிக்கவில்லை?' என்றும் கேட்டார்.குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இதில் எதிர்நிலை எடுப்பது குறித்தும் அவர் கேள்வி எழுப்பினார். எனவே இந்தக் கட்டுரையாளர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் உரையாடியிருந்தார். கொள்கை ரீதியாக தேசிய விடுதலை என்பது சமூக விடுதலையையும் உள்ளடக்கியதுதான் என்ற அடிப்படையில் இந்த விவகாரம் அணுகப்பட வேண்டும் என்பதை அந்தக்கட்சி ஏற்றுக்கொண்டது. இதுவிடயத்தில் ஈ.பி.டி.பி ஆதரிக்கும் ஒரு தரப்பை எதிர்ப்பது என்று முடிவெடுக்கா மல் தமிழ்த் தேசியத் திரட்சியைப் பாதுகாப்பது என்ற நீண்டகால நோக்குநிலையின் அடிப்படையில் அந்தக்கட்சி முடிவெடுத்தது. அதன்படி வாக்கெடுப்பில் சுயேச்சைக் குழுவை எதிர்ப்பதில்லை என்று முடிவெடுத்தது.

எனினும் வாக்கெடுப்பு நடந்த அன்று கட்சித் தீர்மானத்தை மீறி அந்தக்கட்சியின் உறுப்பினர் சுயேச்சைக் குழுவுக்கு எதிராக வாக்களித்தார்.தமது கட்சிக் கட்டுப்பாட்டை மீறி முடிவெடுத்த உறுப்பினருக்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்திருக்கிறது.

காரைநகர் பிரதேச சபை விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்போடும் தமிழ்தேசியத் திரட்சியைப் பாதுகாப்பது என்ற அடிப்படையிலும் முடிவுகளை எடுத்திருக்கிறது. எனினும் போதிய அளவுக்கு அரசியல் மயப்படுத்தப்படாத உறுப்பினர் ஒருவர் வாக்கெடுப்பில் கட்சியின் கொள்கை முடிவை மீறி வாக்களித்திருக்கிறார்.அதேசமயம் அவரைப் போலவே அந்தப்பிரதேசத்தின் சமூக ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கும் விதத்தில் கூட்டமைப்பும் யு.என். பியும் முடிவுகளை எடுத்தன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். யு.என்.பி ஒரு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சியல்ல. ஆனால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் மத்தி யில் இது போன்ற விடயங்களில் தெளிவான விளக்கங்கள் உண்டா? அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் நடந்த சமூக முரண்பாடுகளை கையாள்வதில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் துரிதமாகச் செயற்படத் தவறிவிட்டன.

தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையையும் உள்ளடக்கியதுதான் என்பதனை எத்தனை கட்சிகள் தமது உறுப்பினர்களுக்கு கற்பித்திருகின்றன? தேசியம் என்றால் என்ன? சமூக விடுதலையும் தேசிய விடு தலையும் ஒன்றா? ஒரு சாதிவாதி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? ஒரு மதத் துவேசி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? ஓர் ஆணாதிக்கவாதி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? ஒரு பிரதேசவாதி ஏன் தேசியவாதியாக இருக்க முடியாது? போன்ற கேள்விகளுக்கு பொருத்தமான விளக்கங்களை கட்சி உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டிய பொறுப்பு எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் உண்டு.

காரைநகர் பிரதேச சபை விவகாரம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளின் உள்ளூர்த் தலைவர்கள் மத்தியில் சமூக விடுதலை குறித்து போதிய தெளிவு இல்லை என்பதையே காட்டுகிறது. அதாவது தேசியவாதத்தை அதன் பிரயோக நிலையில் பல கட்சித் தொண்டர்களும் முக்கியஸ்தர்களும் விளங்கி வைத்திருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது.

அதுமட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிப்பது தொடர்பில் தமிழ்க் கட்சிகளிடம் பொருத்தமான தரிசனங்கள் போதாது என்பதைத்தான் அண்மை வாரங்களாக உள்ளூராட்சி மன்றங்களில் நடக்கும் வாக்கெடுப்பு முடிவுகள் நமக்கு உணர்த்துகின்றன.

ஒருபுறம் உள்ளூராட்சி மன்றங்களை அவற்றுக்கான உள்ளூர் நிலைமைகளோடு விளங்கிக் கொண்டு பிரதேசங்களைக் கட்டியெழுப்புவதற்குரிய வழிவரைபடத்தை உருவாக்க பெரும்பாலான தமிழ்க் கட்சிகள் தவறிவிட்டன. இன்னொருபுறம் உள்ளூர் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் மேவி ஒரு தேசியத் திரட்சியை கட்டியெழுப்புவதற்கான வழிவரைபடம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் உண்டா?

பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள் ஒன்றில் உள்ளூர் சமூக முரண்பாடுகளை,ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிக்கின்றன.அல்லது கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளை பிரதிபலிக்கின்றன.அல்லது ஒரு கூட்டுக்குள்ளே காணப்படும் உட்கட்சி முரண்பாடு களை பிரதிபலிக்கின்றன. இதனால் கட்சிகளால் உள்ளூராட்சி மன்றங்களில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. அதேசமயம் அதைவிட முக்கியமாக தேசியத் திரட்சியையும் பாதுகாக்க

10 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
26 டிசெம்பர் 2021

Dr.S.கிருபானந்தகுமாரன்
கால்நடை மருத்துவர்





# நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்பு நிலை

## கால்நடை மருத்துவத்தின் நிலைப்பாடு!

### அறிமுகம்

மனிதர்களிலும் விலங்குகளிலும் நோய்ச் சிகிச்சைக்கும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் நுண்ணுயிர்க் கொல்லிகள் [Antibiotics] பயன்படுத்தப்படுகின்றன. பல வருடங்களாக ஆபத்தான நுண்ணுயிர்களால் [Bacteria ] ஏற்பட்ட மிகக் கொடிய நோய்களில் இருந்து மனிதர்களையும் விலங்குகளையும் பாதுகாத்த மேற்படி நுண்ணுயிர்க் கொல்லிகள் அண்மை நாட்களில் பயனற்றவையாக மாற்றமடைந்து வருகின்றன. குறிப்பாக, நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பு நிலை [ Antibiotic resistant] பரவலாக பெரும்பாலான நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளுக்கு தோன்றியுள்ளது.

நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பான நுண்ணுயிர்களின் அதிகரிப்பு மனித மற்றும் விலங்குகளின் சுகாதாரத்தில் பெரும் சவாலாகும். பல நோய்களுக்கு ஒரே தீர்வாக இருந்த நுண்ணுயிர்க் கொல்லிகள் பயனற்றுப் போகின்றமை அதிக உயிரிழப்புகளுக்கு காரணமாக அமைவதாக உலக சுகாதார அமைப்பு கூறுகிறது. அதி சக்தி வாய்ந்த முதலாம் தலைமுறை நுண்ணுயிர்க் கொல்லிகள் பயன்படுத்துகை நிறுத்தப்பட்டு இரண்டாம், மூன்றாம் தலைமுறை மருந்துகளின் பாவனைக்கு மனித மருத்துவ உலகமும் கால்நடை மருத்துவ உலகமும் தள்ளப்பட்டுள்ளன. நுண்ணுயிர்க் கொல்லிகளின் உருவாக்கத்துக்கு நீண்ட கால ஆய்வும்.அதிக செலவும்,அதி உச்ச தொழில் நுட்பமும் தேவைப்படும் அதே வேளை, அந்த நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு எதிரான எதிர் நுண்ணுயிர்கள் தோன்ற சில நொடிப் பொழுதுகளே தேவைப்படுகின்றன. கடந்த பதினைந்து வருடங்களில் புதிதாக எந்த வித நுண்ணுயிர்க் கொல்லிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதும் ஆபத்தான விடயமாகும்.

மனிதர்கள், மருத்துவத்தில் முறையற்ற விதத்தில் நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்துதலே நுண்ணுயிர்க் கொல்லிகளின் எதிர்ப்புக்கு பிரதான காரணமாக அமைகின்றது. அதேவேளை ஆடு ,மாடு, கோழி போன்ற உணவு உற்பத்தி விலங்குகளில் முறையற்ற விதத்தில் நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்துதல் மறைமுகமான விதத்தில் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பைத் தோற்றுவிக்கும் காரணியாக அமைகிறது. அண்மைக் காலத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் தாவரப் பயிர்ச் செய்கையிலும் நுண்ணுயிர்க் கொல்லிகள் பரவலாகப் பயன்படுவதை அவதானிக்க முடிகிறது. அதிரித்த மனித உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாக அண்மைக் காலத்தில் உருவாகியுள்ள கோழி, மாடு மற்றும் பன்றிகளின் இராட்சதப் பண்ணைகள் சுகாதாரமாக இருக்க வேண்டிய காரணத்தால் ,அதிகளவு நுண்ணுயிர்க் கொல்லிகளை பயன்படுத்துவதோடு மிகச் சிறிய பண்ணையாளர்களுக்கும் இலகுவாக கிடைக்கக் கூடியதாக சக்திமிக்க நுண்ணுயிர் கொல்லிகள் காணபடுவதும் இந்த நிலையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. மேற்படி பண்ணைகளின் பால், முட்டை, இறைச்சியை நுகரும் மனிதன் தனக்கு தெரியாமலேயே நுண்ணுயிர்க் கொல்லிகளையும், நுண்ணுயிர்க் கொல்லி எதிப்பு நுண்ணுயிர்களையும் தனக்குள் அனுமதித்து விடுகிறான்.

இன்று உலகில் இடம்பெறும் கணிசமான மரணங்களில் நுண்ணுயிர்க் கொல்லி எதிப்பினால் நிகழும் மரணங்களும் உள்ளடங்கியிருப்பது அதிர்ச்சிகரமான விடயமாகும். இன்றைய திகதியில் அமெரிக்கா போன்ற வளர்ச்சி அடைந்த மருத்துவத் துறையைக் கொண்ட நாடுகளில் கூட பல ஆயிரக்கணக்கான மரணங்கள் இந்த நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்பால் நிகழ்கின்றன. பல வளர்முக நாடுகள் கடுமையான சட்ட திட்டங்கள் மூலம் நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனையை குறிப்பாக உணவு விலங்குகளில் கட்டுப்படுத்திய போதும் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் வகை, தொகை இன்றி விலங்கு வளர்ப்பில் அவற்றை பாவிப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்தப் பாரதூரமான விடயத்தை பொதுமக்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் விழிப்புணர்வைத் தரும் விதமாகவும் சுகாதாரமான விலங்கு உணவு உற்பத்தியை ஊக்குவிக்கவும் ஒரே சுகாதார எண்ணக் கருவை வலுப்படுத்தவுமே இந்த கட்டுரை இதனை வாசிக்கும் பண்ணையாளர்களும் பொது மக்களும் தாம் சார்ந்த சமூகத்தை விழிப்புணர்வு செய்வதோடு கடைப்பிடிக்கவும் வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

> பல வளர்முக நாடுகள் கடுமையான சட்ட திட்டங்கள் மூலம் நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனையை குறிப்பாக உணவு விலங்குகளில் கட்டுப்படுத்திய போதும் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் வகை, தொகை இன்றி விலங்கு வளர்ப்பில் அவற்றைப் பாவிப்பதை அவதானிக்க முடிகிறது.

### நுண்ணுயிர்கள் என்பவை யாவை ?

நுண்ணுயிரிகள் எனப்படுபவை கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய ஒற்றைக் கல உயிரினங்களாகும். இவை நிலம், நீர் , தாவரம் விலங்கு என உலகில் சகல இடங்களிலும் பரவிக்காணப்படுகின்றதோடு, உலகில் அதிகமாகப் பரவி வாழும் உயிரினங்களாகவும் அமைகின்றன. இவை உலகில் முதலில் தோன்றிய உயிரினங்களாகவும் நம்பப்படுகின்றன. இவை இறந்த தாவர விலங்குகளை , கடினமான கழிவுகளை சிறு சிறு துண்டுகளாக் உடைத்து உக்கச் செய்கின்றன. வளிமண்டல நைதரசனை பிரித்து மண்ணை வளப்படுத்துகின்றன.தமது செயற்பாடுகள் மூலம் பல உணவுப் பொருட்களை உருவாக்கவும் செய்கின்றன.

நுண்ணுயிரிகளில் பெரும்பாலானவை நன்மை பயப்பவை. சில நன்மையோ தீமையோ செய்யாதவை. சில சந்தர்ப்பம் வரும் போது தீமை செய்பவை.. மிகச் சிறிய தொகையான நுண்ணுயிரிகள் எப்போதும் தீமையே செய்பவை.தீமை விளைவிக்கும் நுண்ணுயிரிகள் உடலின் நோய் எதிர் சக்தி நலிவடையும் போது உடலின் பாதுகாப்பு அரண்களை உடைத்து மனிதர்கள் மற்றும் விலங்குகளில் நோயை ஏற்படுத்துகின்றன.சில உயிரிகளின் நோய் எதிர்ப்பு சக்தியை [ immune system] தாக்கி நோயை ஏற்படுத்துகின்றன.

### நுண்ணுயிர்க் கொல்லி என்றால் என்ன ?


நுண்ணுயிர்களை தமது உயிர் இரசாயனச் செயல்கள் மூலம் அழிவடையச் செய்யும் அல்லது அவற்றின் வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்யும் பதார்த்தங்கள் நுண்ணுயிர்க் கொல்லிகள் எனப்படும். இவை பக்றீறியோ சைடல் [Bacterio cidal] பக்றீறியோ ஸ்டாடிக்[ bacterio static] என இரண்டு வகைப்படும். பக்றீறியோ சைடல் நுண்ணுயிர்களை முற்றுமுழுதாக அழிக்கும் அதேவேளை பக்றீறியோ ஸ்டாடிக் நுண்ணுயிர்களின் வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்கின்றன.

### நுண்ணுயிர்க் கொல்லிகளின் சுவையான வரலாறு


அலெக்ஸ்சாண்டர் பிளமிங் என்னும் உயிரியலாளர் 1928 ஆம் ஆண்டில், staphylococci மற்றும் strepto cocci நுண்ணுயிர்கள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் ,நடுவே அவசர விடுமுறையில் செல்ல வேண்டி ஏற்பட்டதால் பரிசோதனைத் தட்டினை மூடாமல் சென்று விட்டார். விடுமுறை முடிந்து வந்த போது penciliam notatum என்னும் மதுவத்தால் மாசுபட்ட நிலையில் அந்த தட்டு காணப்பட்டது. அதிசயமாக அந்த மதுவ வகை உயிரினம் காணப்பட்ட பகுதியில் மேற்படி நுண்ணுயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தான் பென்சிலின் நுண்ணுயிர்க் கொல்லியின் கண்டுபிடிப்பின் அடிப்படையாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தில் காயம்பட்ட பல இராணுவ வீரர்களின் கடவுளாக இந்த பென்சிலின் நுண்ணுயிர் விளங்கியது. பென்சிலின் மட்டும் இல்லாது இருந்திருந்தால் அவர்கள் மரணித்து இருப்பார்கள்.பென்சிலினின் அதிசயத்தால் மருத்துவத்துக்கான நோபல் பரிசினையும் அலெக்ஸ்சாண்டர் பிளமிங் பெற்றுக் கொண்டார்.






### நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்பு ( Antibiotic resistant) என்றால் என்ன?




நுண்ணுயிரிகள் , நுண்ணுயிர்க் கொல்லிகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எதிர்ப்பு சக்தியை உருவாக்குபவை ஆகும். தமது மூலக்கூற்று அதாவது மரபணு மட்டத்தில் எதிர்ப்பை உருவாக்கி விடுவதோடு மிக விரைவாக அடுத்த சந்ததிக்கு கடத்தியும் விடுகின்றன.

இந்த நிலையை நவீன மருத்துவத்தின் சாவு மணி என அழைக்கின்றனர்.மிகச் சிறிய முள்ளுக் குத்தினால் கூட நீங்கள் மரணிக்கக் கூடும் எனக் கூறப்படுகிறது.சத்திர சிகிச்சைகள் புற்றுநோய் சிகிச்சைகள் போன்ற நவீன மருத்துவ சிகிச்சைகள் நடைபெறாது பல உயிரிழப்புகள் மனித மற்றும் விலங்குகளில் இடம்பெறக்கூடும். இன்றைய திகதியில் அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளில் நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புக் காரணமாக பல உயிரிழப்புகள் மற்றும் அதிக மருத்துவச் செலவுகளும் ஏற்படுகின்றன.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆவது டோஸ் செலுத்தாவிடின் தென்னாபிரிக்காவின் நிலை இலங்கைக்கும் ஏற்படலாம்!



எதிர்வுகூறுகிறார் மருத்துவர் கோபாலமூர்த்தி றஜீவ்

○ நேர்காணல்: ஆர்.பிரகாஷ்

தென்னாபிரிக்காவில் ஒமிக்ரோன் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தக் காரணம் அந்த நாட்டில் தடுப்பூசித் திட்டம் முறையாக நடைமுறைப்படுத்தாமையே. பிறபொருள் எதிரிகள் அற்றவர்களாக அந்த மக்கள் இருந்ததால்தான் இந்த அவலநிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இலங்கையில் முதல் இரு டோஸ்களையும் பெறுவதில் இருந்த ஆர்வம் பூஸ்டர் டோஸைப் பெறுவதில் இல்லை. முதல் இரு டோஸ்களாலும் கிடைத்த பிறபொருள் எதிரிகள் இன்னும் கொஞ்ச நாள்களில் இல்லாமல் போய்விடின், பூஸ்டர் டோஸ்தான் எம்மைக் காக்கும் அரணாகச் செயற்படப்போகின்றது. இப்படியிருக்கையில் பூஸ்டர் டோஸைப் பெறுவதில் எமது மக்களிடையே இருக்கும் அசண்டையீனம் ஆரோக்கியமானதல்ல. இவ்வாறு பெருந்தொகை மக்கள் பூஸ்டர் டோஸைப்பெறாத பட்சத்தில் பேராபத்து நிலைக்குள் நாடு தள்ளப்படும். அது தென்னாபிரிக்கா போன்ற நிலையையும் தோற்றுவிக்கலாம் இவ்வாறு தெரிவித்தார் சமுதாய மருத்துவர் கோபாலமூர்த்தி றஜீவ்.

அவர் உதயன் – சஞ்சீவி வாசகர்களுக்காக வழங்கிய நேர்காணலின் முழுவடிவம்.

### ஒமிக்ரோனின் அதிவேகப் பரவுகை தென்னாபிரிக்காவில் மட்டும்தான்!

**கே:** இதுவரை கண்டறியப்பட்ட கொரோனாத் திரிபுகளில் ஒமிக்ரோன் ஆபத்தானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய திரிபுகளை விட 70 மடங்கு வேகமாகப் பரவும் தன்மை உடையது ஒமிக்ரோன். இலங்கையிலும் ஒமிக்ரோன் கண்டறியப்பட்டுள்ள நிலையில் அதன் ஆபத்துத் தன்மை எந்தளவுதூரம் உள்ளது?

**ப:** உண்மையில் தென்னாபிரிக்காவை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள்தான் வெளியிடப்பட்டுள்ளன. ஒமிக்ரோன் ஏனைய திரிபுகளை விட வேகமாகப் பரவும் என்பதும் ஆபத்தானது என்பதும் தென்னாபிரிக்கா நிலைவரங்களை வைத்துத்தான் அறிக்கையிடப்பட்டுள்ளது. காரணம், தென்னாபிரிக்காவில் தடுப்பூசித் திட்டம் மிகமிக மந்தமாகத்தான் உள்ளது. அங்கு இன்னும் பலருக்கு முதலாவது டோஸ் கூடச் செலுத்தப்படவில்லை. ஒமிக்ரோன் துரிதமாக அங்கு பரவுவதற்கு இந்தப் பின்னடைவான தடுப்பூசித் திட்டம்தான் காரணம். அதே அளவுகோலை இலங்கையிலோ அல்லது ஐரோப்பிய நாடுகளிலோ பயன்படுத்த வேண்டியதில்லை. ஆயினும், இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றுக்கு உட்பட்டவர்களின் வழித்தடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

**கே:** ஒமிக்ரோனைக் கட்டுப்படுத்துவதற்கு உலகளாவிய ரீதியில் பிரத்தியேகமான தடுப்பூசித் திட்டம் ஏதும் தேவையா? அல்லது பிரத்தியேகத் தடுப்பூசிகள் தேவையா?

**ப:** பிரத்தியேகத் தடுப்பூசிகள் தேவையில்லை. இதுவரை மக்களின் பாவனைக்கு என்று அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் அனைத்தும் கொரோனாவின் அனைத்துத் திரிபுகளையும் கட்டுப்படுத்துகின்றன. அனைத்துத் திரிபுகளையும் எனும்போது ஒமிக்ரோனும் இதற்குள் உள்ளடங்குகின்றது. ஆனால், உலகளாவிய தடுப்பூசித் திட்டமொன்று கொரோனாவைக் கட்டுப்படுத்தத் தேவை.

**கே:** உலகளாவிய தடுப்பூசித் திட்டம் என்பதன் அர்த்தப்பாடு என்ன?

**ப:** ஒவ்வொரு நாடும் தடுப்பூசியில் தன்னிறைவு கண்டுவிட முடியாது. இதுவொன்றும் பொருளாதாரம் சார் விடயமல்ல. ஐரோப்பிய நாடுகள் தம் மக்களுக்கு முழுவதுமாக தடுப்பூசிகளைச் செலுத்திவிட்டால் தம்மைத் தற்காத்துக் கொண்டதாகப் பொருளில்லை.

ஆபிரிக்கத் தேசங்கள் முதலாவது டோஸ் கூட இல்லாமல் நிற்கும்போது இன்னொரு நாடு 100 வீதம் தடுப்பூசி செலுத்தினாலும் ஆபிரிக்காவில் இருந்து கொரோனா பிற தேசங்களுக்குள் ஊடுருவ வாய்ப்புண்டு. இன்று ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் ஏதோவொரு விதத்தில் பின்னிப் பிணைந்ததாக உள்ளது. ஆகவே, உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்துவதைப்போன்று 'தடுப்பூசிப் பகிர்வு' என்பது இங்கே அவசியம். பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்குத் தடுப்பூசிகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

அனைத்து நாடுகளிலும் சராசரியான அளவில் தடுப்பூசி ஏற்றப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதுதான் 'உலகளாவிய தடுப்பூசித் திட்டம்' என்பதன் அர்த்தப்பாடு. அதுதான் இன்று காலத்தேவையாகவும் உள்ளது.



### தடுப்பூசி டோஸ்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்

**கே:** இலங்கையில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, இரு டோஸ்கள் செலுத்த வேண்டும் என்ற பொதுவான எண்ணப்பாடே இருந்தது. ஆனால், தற்போது பூஸ்டர் டோஸ் ஏற்றப்படுகின்றது. நான்காவது டோஸ் ஏற்றப்படக்கூடிய வாய்ப்புண்டு என்று தற்போதே தெரிவிக்கப்பட்டாயிற்று. இந்தப் பட்டியல் இப்படியே நீட்சி பெறுமா?

**ப:** தடுப்பூசிகள் உடலில் பிறபொருள் எதிரிகளை ஏற்படுத்துகின்றன. அந்தப் பிறபொருள் எதிரிகள்தான் தொற்றில் இருந்து எம்மைப் பாதுகாக்கின்றன. உண்மையில் இந்தக் கேள்விக்குப் பதில் இரண்டு விடயங்களைப் பொறுத்தது. முதலாவது விடயம் கொரோனா எமது சூழலில் எவ்வளவு காலம் இருக்கப் போகின்றது என்பது. இரண்டாவது விடயம் எங்களின் உடலில் பிறபொருள் எதிரிகள் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கப்போகின்றன என்பது. எனவே தடுப்பூசி டோஸ்களின் எண்ணிக்கை பொதுமக்களின் செயற்பாடுகளைப் பொறுத்துத்தான் அமையும்.

**கே:** சினோபார்ம், மொடோர்னா, பைஸர் என்று பல்வேறுபட்ட தடுப்பூசிகள் முதல் இரு டோஸ்களாக ஏற்றப்பட்டிருந்த நிலையில், மூன்றாவது டோஸாக (பூஸ்டர்) பைஸரை ஏற்றுவதால் மருத்துவச் சிக்கல்கள் இல்லையா?

**ப:** ஏற்கனவே தெரிவித்ததைப்போன்று, எமது உடலில் குறித்த தடுப்பூசியின் தாக்கம் (பிறபொருள் எதிரிகள்) குறைகின்றமையால்தான் மேலதிக டோஸ்கள் தேவைப்படுகின்றன. அவ்வாறு பிறபொருள் எதிரிகள் குறைந்த [illegible] இந்த [illegible]'கள் மாற்றப்படு கின்றன. அதனால் எந்தவொரு மருத்துவச் சிக்கலும் இல்லை. இது தொடர்பில் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை.

### தடுப்பூசிகளுக்கு ஏற்ப வைரஸ் தகவமைவு

**கே:** தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்படும்போது இல்லாத திரிபுகள் இப்போது தோன்றியுள்ளன. எனின், இந்தத் திரிபுகளுக் கும் தடுப்பூசிகளுக்கும் ஏதும் தொடர்பிருக்கின்றதா? அதா வது வைரஸ் தன்னைத் தகவமைக்கின்றதா?

**ப:** நேரடியாகத் தொடர்பில்லை, ஆனால் வைரஸைப் பொறுத்தவரை 'தக்கன பிழைக்கும்' கொள்கை அதனுடையது. பிறபொருள் எதிரிகளுக்கு ஏற்ப அது தன்னை தகவமைத்துக்கொள்ள முயலும். அவ்வாறு தன்னை மாற்றி பிறிதொரு சூழலுக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ள முயல்கின்றபோது பிறபொருள் எதிரியற்ற சமூகம் அந்த வைரஸ் பலமாக ஊடுருவக் காரணமாக அமைந்துவிடுகின்றது.

எனவே, ஆகச்சிறந்த தடுப்பூசித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி சிறந்த சுகாதாரக் கட்டமைப்பை நாம் பேணினால், வைரஸ் மனிதர்களை விட்டு வேறு உயிரிகளுக்கோ அல்லது வேறொரு சமூகத்துக்கோ சென்றுவிடக்கூட வாய்ப்புண்டு. வரலாறுகளும் பதிவுகளும்கூட அவ்வாறுதான் குறிப்பிடுகின்றன.

### தடுப்பூசி ஏற்றாதவர்களால் இலங்கைத் திரிபு ஏற்படும்

**கே:** தடுப்பூசி ஏற்றாதவர்களால் இலங்கை எதிர்கொள்ளக்கூடிய பெரும் பிரச்சினை எது?

**ப:** மனிதர்களுக்கு டி.என்.ஏ. போன்று வைரஸ்களுக்கு ஆர்.என்.ஏ. உள்ளது. டி.என்.ஏ. மாதிரிகள் ஒருபோதும் பிறழ்வதில்லை. ஒருவருடைய டி.என்.ஏ. மாதிரிகள் அவருடைய குழந்தைக்கு அப்படியே பிரதியெடுக்கும்.

ஆனால், ஆர்.என்.ஏ.யில் இவ்வாறான நிலை இல்லை. எனவே வைரஸ் ஒருவரில் இருந்து இன்னொருவருக்குத் தொற்றும்போது இந்த ஆர்.என்.ஏ. பிரதிகள் மாறுகின்றன. இவ்வாறு மாறுவதற்கு அநேக வாய்ப்புக்கள் உள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுவா காரணம்?

மருத்துவ சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை உட்பட 7 கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றுக்குத் தீர்வு கிட்டும்வரை போராட்டம் தொடரும் என அறிவிப்பு ச் செய்துவிட்டு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் என்பது பலருக்கும் தெரியும்.

இதனால் நாட்டில் அரச மருத்துவமனைகளின் சேவைகள் ஸ்தம்பித்தன. நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. இந்நிலையில் இந்தப்போராட்டத்துக்கு மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளிப்படையாகச் சொன்ன காரணங்களை விட இன்னும் சில வெளியில் தெரியாத காரணங்களுமுள்ளன.

சுகாதார அமைச்சராக பவித்ரா தேவி வன்னியாராச்சி செயற்பட்ட போது, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கென சுகாதார அமைச்சில் அலுவலகமொன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த அலுவலகத்தை உடனடியாக நீக்குமாறு இப்போதைய சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனது செயலாளருக்கு அண்மையில் உத்தரவிட்டுள்ளார். சுகாதாரத் துறையில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் உள்ளன. ஒரு தரப்புக்கு மட்டும் அலுவலகம் ஒதுக்குவது தவறு. ஏனையோரும் அவ்வாறு கோரினால் என்ன நடக்கும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரின் இந்தச் செயல் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தை கடுப்பாக்கியுள்ளது.

அதேபோல அண்மையில் அலரிமாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச்சந்திப்பில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் மருத்துவர் நளிந்த சொய்சா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது மருத்துவர் சொய்சா, சுகாதார அமைச்சர் கெஹலியவிடம் கடுந்தொனியில் வாதிட்டார் எனவும், இதனால் அருகில் இருந்த இராஜாங்க அமைச்சர் லொஹானுக்கு கடும் கோபம்வந்து, மருத்துவருக்கு செம டோஸ் கொடுத்தாராம்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் தொழிற்சங்கப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம்.

## கெஹலிய நல்லவர்

தம்மால் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்துள்ளனர். அவருடன் இது சம்பந்தமாக கலந்துரையாடலில் ஈடுபட்டு தமது தரப்பு நியாயத்தை எடுத்துரைத்தனர். மருத்துவர்கள் கூறியவற்றை பொறுமையாக செவிமடுத்த சஜித்,

“மருத்துவர்களே, சுகாதார அமைச்சர் நல்ல மனிதர். அவருடன் பேசி இந்தப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாம். போராட்டத்தால் மக்கள்தான் பாதிக்கப்படுகின்றனர். தயவு செய்து அதனை நிறுத்தி சேவைக்கு திரும்புங்கள். என ஆலோசனை கூறியுள்ளார்.



# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்



## ஓய்வும் மாற்றமும்

அரசிலிருந்து வெளியேறுவதற்கு 44 பேர் தயார் நிலையில் உள்ளனர் என தகவல்கள் வெளியாகின. அந்த எண்ணிக்கை தற்போது 60 வரை உயர்வடைந்துள்ளதாம். இவர்கள் ஒரு கூட்டணியாகவே வெளியேறுவார்களென உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுமீது கடும் அதிருப்தியில் உள்ள இவர்களை பிரதமர் மஹிந்தவே சமரசப்படுத்தி கூட்டணியில் தக்கவைத்துக்கொண்டுள்ளாராம். எனினும், பிரதமர் மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வுபெற்றதும் இவர்கள் வெளியேறிவிடுவது உறுதியாம். அது மட்டுமல்ல சஜித் தரப்புடன் இணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றையும் இவர்கள் கைச்சாத்திடவுள்ளனர். அதற்கான பேச்சுகளும் ஆரம்பமாகியுள்ளன எனக் கூறப்படுகின்றது.

## ஐ.எம்.எப். இருக்க பயமேன்?

அமைச்சரவைக் கூட்டம் இம்முறை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, ‘‘ஜனாதிபதி அவர்களே, கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நீங்கள் இருக்கவில்லை. அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவைத் தவிர ஏனையோர் சர்வதேச நாணய நிதியத்தை நாட விருப்பம் தெரிவித்தனர்’’- என அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி,

“சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரும், நிதி அமைச்சரின் செயலாளரும் வேறு நிலைப்பாட்டிலேயே உள்ளனர்”- என்றார்.

அப்படியானால் அவர்களை அழைத்துப் பேசி, இது விடயத்தில் முடிவெடுப்போம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த அமைச்சரவைக் கூட்டம் 2022 ஜனவரி 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்துக்கு மத்திய வங்கி ஆளுநரும், நிதி அமைச்சரின் செயலாளரும் அழைக்கப்பட்டுள்ளனராம்.



## இணைவார்களா?

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து செயற்படுமென சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர அறிவிப்பு விடுத்திருந்தாலும், இது தொடர்பில் சு.க. தரப்பிலிருந்து ஜே.வி.பிக்கு இன்னும் அதிகாரப்பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லையாம்.

அவ்வாறானதொரு அழைப்பு விடுக்கப்பட்டால் அதனை ஜே.வி.பி. ஏற்காதென அந்தக்கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், பொதுவானதொரு கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஜே.வி.பி அங்கம் வகிக்கும் தேசிய மக்கள் சக்தியில் சுதந்திரக்கட்சி இணையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாண


0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

63



அனுப்புபவர் பெயர்:...............................................

முழுமையான தபால் விலாசம்: .................................

..........................................................................

கையொப்பம்:.....................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. பரிபாலிப்பவர் 4. ஒருவரின் (குண) இயல்பு 6. பல வித்தியாசமான பெறுமானங்களின் கூட்டு மத்தி. 7. இரத்தல் 9. முற்காலத்தில் இது ஒரு தூர அளவீட்டு அலகு 11. நடுநிலையம் 12. உணர்வுகளைக் கடத்துவது 13. மனம் 14. பொதுமேடை 16. நல்லது என்பதன் சுருக்கம் 17. குத்துவது இப்படி 18. இது ஒரு கணிதக் குறியீடு 19. கடல் (அலை) (20) மகன்

### மேலிருந்து கீழ்

1. நிலைத்திருக்காத தன்மை 2. வசனம் 3. இது ஒரு நிறுத்தல் அலகு 4. பிராயச்சித்தம் 8. நித்திரை 10. தமது 12. விரலில் வளருவது 13. தோய் 14. மாலைப்பொழுது 15. பிரி 16. அசைய 18. மறைவில் தீட்டப்படுவது

### சொற்சிலம்பம் போட்டி 62க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சமுத்திரம் 6. தாடை 7. கைம் 8. சோலை 9. தர்ப்பை 10. தவி 11. வேல் 12. பனை 14. ஓசை 16. விநாயகர் 19. வீதி, 20. கல்வி 21. விரல் 22. நாம் 23. தைமாதம்

**மேலிருந்து கீழ்**

1. சதா 2. முடைதல் 3. திகைப்பு 4. ரம்பை 5. தலைவி 8. சோதனை 11. வேள்வி 12. பசை 13. கயல் 14. ஓர் 15. மதில் 17. நாகம் 18. கவிதை 19. வீரம் 21.வித

**சொற்சிலம்பம் போட்டி இல.63**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

31.12.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 62இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
ஸ்ரீ.துஷாரா
மருத்துவபீடம், முதலாம் வருடம்
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
அ.ஸ்ரீஸ்கந்தராஜா,
இல. 15/11 புவனேஸ்வரி
அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
பா.அபிநயா,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

**4 ஆம் பரிசு**
ந. பாலகுமார்,
காரை வடகிழக்கு,
காரைநகர்.

**5 ஆம் பரிசு**
ச.ஜனகன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண வரலாறு

## 1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

**1765 மே 13.**

அந்தோனி மோயர்ட் (Anthony Moyart) ஒல்லாந்தர்களின் யாழ்ப்பாணத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஆனால் இவர் 1633 முதல் 1636 வரை யாழ்ப்பாணத் தளபதியாக கடமையாற்றினாரென இன்னொரு தகவல் கூறுகிறது.

**1766**

யாழ்ப்பாணத்தில் இரண்டாவது தடவையாக குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண சனத்தொகை 1 லட்சத்து 87ஆயிரத்து 600 என இதன்போது கணிப்பீடு செய்யப்பட்டது. முதலாவது குடிசன மதிப்பீடு போர்த்துக்கீசர் காலத்தில் 1658 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய சனத்தொகை 1லட்சத்து 20 ஆயிரமாக இருந்தது.

### விவசாயம்

போர்த்துக்கீசர் தமது ஆட்சிக்காலத்தில் விவசாயத்தில் அக்கறை செலுத்தவில்லை. இதனால் விவசாய நிலங்கள் யாவும் காடு மண்டியிருந்தன. ஒல்லாந்தர் தமது ஆட்சிக்காலத்தில் விவசாயத்தில் அக்கறை செலுத்தியதுடன் இந்தியாவிலிருந்து 35 ஆயிரம் அடிமைகளையும் விவசாய விருத்திக்கென அழைத்து வந்தனர். இந்த அடிமைகள் ஒல்லாந்தக்குறியிடப்பட்ட பின் விவசாய நிலங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். ஒல்லாந்தர் காலத்தில் நெல்லே பிரதான உற்பத்தியாக விளங்கியது. உள்ளூர்த் தேவைக்கும் அதிகமாக நெல் விளைந்தபடியால் மேலதிகமாக விளைந்த நெல் மதுரை, நாகப்பட்டினம் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஒல்லாந்தர் காலத்தில் விவசாயச்செய்கைக்கென பல குளங்கள் திருத்தியமைக்கப்பட்டன. ஒல்லாந்தர் காலத்தின் இறுதிப்பகுதியில் மக்கள் நெற்செய்கையில் ஆர்வம் காட்டாதபடியால் இந்தியாவிலிருந்து நெல் இறக்குமதி செய்யப்பட்டது. இந்தியாவிலிருந்து மாடுகளும் ஒல்லாந்தரால் இறக்குமதி செய்யப்பட்டன. பூநகரியில் பருத்திச்செய்கையும் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டது. பருத்திச்செய்கைக்கென தென்மராட்சியில் இருந்த மக்கள் பூநகரியில் குடியமர்த்தப்பட்டனர்.

### கைத்தொழில்

இருபாலையில் ஓடு, செங்கல் என்பன உற்பத்தி செய்யப்பட்டன. பருத்தித்துறையிலும் காங்கேசன்துறையிலும் சுண்ணாம்புச் சூளைகளிருந்தன. முருகைக்கல்லும் சுண்ணாம்பும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பனை மரங்கள், சலாகைகள் என்பன தென்னிந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வன்னியிலிருந்த மரங்கள் அடிமைகள் மூலம் தறிக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு ஒல்லாந்தர் வீடு கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

### அடிமை வியாபாரம்

அடிமைகளும் ஏனைய பண்டங்களைப்போல் விலைக்கு வாங்கி விற்கப்பட்டனர். ஒரு அடிமையின் விலை ஒரு பிடி நெல்.1695 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 589 அடிமைகள் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து விற்கப்பட்டனர். கிறிஸ்தவ மதத்தைத்தழுவிய அடிமைகளுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டன. சலுகைகளுக்காக மதம் மாறக்கூடாது என அடிமைகளுக்கு ஒல்லாந்தர் கட்டளையிட்டனர். அடிமைகள் மிருகங்களைப்போல் பிணைக்கப்பட்டே கொண்டு செல்லப்பட்டனர். அடிமைகளுக்கான சட்டங்கள் தேசவழமைச் சட்டத்தில் இடம்பெற்றிருந்தன.

### குதிரை வியாபாரம்

போர்த்துக்கீசர் நெடுந்தீவில் குதிரை வளர்ப்பை ஊக்குவித்தனர். போர்த்துக்கீசரைத் தொடர்ந்து ஒல்லாந்தரும் குதிரை வளர்ப்பை ஊக்குவித்தனர். ஈரானிலிருந்தும் யாவாவிலிருந்தும் குதிரைக்குட்டிகள் கொண்டு வரப்பட்டு நெடுந்தீவிலும் இரணைதீவிலும் வளர்க்கப்பட்டன.

### வரிகள்

**தலைவரி**: வயோதிபர்கள், அங்கவீனர்கள் தவிர்ந்த சகல ஆண்களிடமும் தலைவரி அறவிடப்பட்டது. ஆண்டொன்றுக்கு இரண்டு தொடக்கம் நான்கு பணம் வரியாக அறவிடப்பட்டது. அடிமைகளிடம் ஒரு பணம் மட்டுமே தலைவரியாக அறவிடப்பட்டது. மக்கள் தலைவரியை செலுத்துவதில் பெரும்சிரமப்பட்டனர்.

**நிலவரி, மரவரி** : காணிகளுக்குரிய தோம்புகள் மூன்று வருடங்களுக்கொருமுறை புதுப்பிக்கப்பட்டன. தோம்புகளில் காணிகளின் பெயர்கள் குறிக்கப்பட்டு . காணிகளில் உள்ள மரங்கள் பயிர்களின் விபரமும் குறிப்பிடப்பட்டிருந்தது. காணியின் வருமானத்தின் பத்திலொரு பங்கு வரியாக அறவிடப்பட்டது. தலைவரி நிலவரித்தோம்புகள் தமிழில் ஓலையிலும் டச்சு மொழியில் கடதாசியிலும் எழுதப்பட்டன. 1674 தொடக்கம் 79 வரையான காலப்பகுதியில் வடமராட்சி,தென்மராட்சி,பச்சிலைப்பள்ளி பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் வரி செலுத்த மறுத்து வன்னிக்குத் தப்பிச்சென்று கண்டி அரசனின் உதவியைக் கோரினர் .ஒல்லாந்தர் இவர்களை அழைத்து சமரசம் செய்தனர்.

**ஆயவரி** : ஆனையிறவு, கொழும்புத்துறை,கச்சாய் முதலிய இடங்களில் வைத்து வன்னிக்குச் சென்று வருவோரிடம் வரி அறவிடப்பட்டது.

**நகைவரி**: ஒல்லாந்தர் காலத்தில் தங்க நகைகளுக்கும் வரி அறவிடப்பட்டது .இதனால் சிலர் வெள்ளி நகைகளை அணிந்தனர். சிலர் தங்க நகை அணிவதைக் கைவிட்டனர்.

**விவாகவரி**: திருமணம்,மரணச்சடங்கு போன்ற நிகழ்வுகளின் போது நாதஸ்வரம்,தவில்,பறை என்பன இசைக்கப்பட்டால் அந்த வாத்தியக் கச்சேரிகளுக்கு வரி செலுத்த வேண்டியிருந்தது. வரிப்பணத்தால் சிரமப்பட்ட வெள்ளாளர், கண்டி அரசனுடன் சேர்ந்து சதி செய்ய முற்பட்டனர். இதையறிந்த ஒல்லாந்தத் தேசாதிபதி இந்த வரியை நீக்கினார்.

**மரணவரி**: ஒருவர் இறந்தால் அவரது சொத்தின் மூன்றிலொரு பகுதியை வரியாகச் செலுத்த வேண்டும். போர்த்துக்கீசர் காலத்திலும் இந்த வரி அமுலில் இருந்தது. ஆனால் போர்த்துக்கீசர் கத்தோலிக்கர்களுக்கு வரிவிலக்கு அளித்தனர். ஒல்லாந்தர் சகலரிடமும் வரி அறவிட்டனர்.


**தரகுவரி**: யாழ்ப்பாணத்தில் தரகர்கள் பெருந்தொகைப் பணமீட்டி வந்தபடியால் தரகர்களிடமிருந்து ஒரு தொகைப் பணம் வரியாக அறவிடப்பட்டது.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை ரவி

11



# மானத்தி

“கண்கெட்ட கடவுள். நீயும் எங்களைப் பிச்சை எடுக்க வைச்சிட்டியே...” தலையை விபூதி தட்டில் முட்டிக் கத்தினாள். அவளின் சத்தத் தைக் கேட்ட கந்தவிக்கிழவன் அவசரமாக கேற்றைத் திறந்தார். உள்ளுக்கு வந்தவர் அப்படியே நின்றார். ஏதும் மரணவீடுகளுக்குப் போனால் வரும்போது கேற்றடியில் நிற்பார்.

சஞ்சீவி தொடர் கதை

கபூங்கொடி திண்ணையில் இருந்தாள். நித்தி அவளுக்குப் பக்கத்தில் யோசித்த படி இருந்தான். அனுப்பிய கருவாட்டை யும் அடைவு வைத்த நகைகளையும் லொறியுடன் எரிந்த மயில்வாகனத்தையும் நினைத்தபடி இருக்க அவளுக்கு கண்ணீர் பெருக்கெடுத்தது.

காதுகளில் தோடுகளைத்தவிர வேறு எந்த நகை களும் அவளிடமில்லை. ஊரில் கல்யாணவீடு கள், திருவிழாக்கள் என்றால், கையில் இருந்து கழுத்து, மூக்கு, காதுகள் எங்கும் பவுண் நகை களை போடுவதென்றால் அது பூங்கொடி மட்டும் தான். எட்டுப்பவுண் தாலி, ஐந்து சோடி காப்பு, கைச்செயின், வெள்ளை முத்து வைத்த இரட் டைப்பட்டு பதக்கச்சங்கிலி, முத்துக்குவியல் தோடு எல்லாம் அவளின் கண்களில் வந்து கொண்டிருந்தன

கல்யாணம் செய்து முதல் முதல் நெடியகாட்டுப் பிள்ளையார் தேர்த்திருவிழாவுக்கு பூறாட்டியோடு சோடியாக, கால்நடையாகப் போக, கனகம் மறித்து தெருவில் கண்ணூறு துடைத்து விடும் போது சொன்னாள்

“ அம்மனுக்குச் சோடிச்சமாதிரிக் கிடக்கடி. உந் தக்கோலத்திலை உன்னைப்பாக்க கோத்தைதா னில்லை. தாலியை எடுத்து சட்டைக் குள்ளை விடடி. புருசனைத்தவிர தாலியை வேறையாக்கள் பாக்கக் கூடாது.”

சொல்லிவிட்டு கனகம் தாலியை எடுத்து சட்டைக்குள் மறைத்தாள். பழைய நினைவுகள் பனியாய் அவளை மூடின. பழைய நினைவுக ளுக்குள் துவள்வதைத் தவிர அதில் இருந்து அவளால் மீளமுடியவில்லை. வேலிக்கரை வேப்பமரத்தைப் பார்த் தாள்... மரத்தில் பட்டுக்கள் சுற்றி யிருந்தன. சூலத்தில் பூக்கள் குத்தியி ருந்தன. கீழே தட்டில் விபூதியும் சந்த னமும் இருந்தது. எழும்பி வேப்பமரத் தடிக்குப் போனாள். மண்ணை அள் ளினாள்.

“ உனக்கு கண்ணிருந்தா லொறி யைக் காப்பாத்தியிருப்பாய், கொழும் புக்கு போகேக்கையும் வந்து உனக்கு கற்பூரம் கொளுத்திப் போட்டுத்தானே போனவர்”

வைத்திருந்த மண்ணை இருகைகளா லும் வேப்பமரத்துக்கு கொட்டினாள்.

“ கண்கெட்ட கடவுள். நீயும் எங்களைப் பிச்சை எடுக்க வைச்சிட்டியே...”

தலையை விபூதித் தட்டில் முட்டிக் கத்தி னாள். அவளின் சத்தத்தைக் கேட்ட கந்த விக்கிழவன் அவசரமாக கேற்றைத்திறந்தார். உள்ளுக்கு வந்தவர் அப்படியே நின்றார். ஏதும் மரணவீடுகளுக்குப் போனால் வரும்போது கேற் றடியில் நிற்பார். பூங்கொடி தண்ணி கொண்டு வந்து கேற்றடியில் வைக்க, முகம் கால்களைக் கழுவிவிட்டு தலைக்கு மூன்றுதரம் தண்ணீர் தெளித்த பிறகுதான் வீட்டுக்குள் காலடி எடுத்து வைப்பார்.

“ பூங்கொடி... தண்ணி கொண்டுவா...”

பூங்கொடி போகவில்லை. கிழவனைப்பார்த்தபடி இருந்தாள். முகத்தில் கோபம் விரிந்தது. நித்தி ஓடிப்போய் வாளிக்குள் தண்ணியை எடுத்தான்.

“ கோயிலுக்கு பூசை வைச்சனாடித்தானே முகம் கழுவிப் போட்டு உள்ளுக்கை வாறனீங்கள். இஞ்ச இப்ப கடவுளில்லை. கடவுள் இருந்தா லொறியைக் காப்பாத்தியிருப்பர். வாங்கோ உள் ளுக்கு”

நித்தி தண்ணிவாளியோடு கிழவனிடம் போகா மல் நின்றான்.

12

பூறாட்டி வாசலில் இருந்தான். அவனுக்குப் பசி. வீட்டில் தனிய இருந்தான். பூங்கொடியும் கந்தவிக்கிழவனும் மயில்வாகனத்தின் அந் தியேஸ்டி வீட்டுக்குப் போய் விட்டார்கள். வீட் டில் சமைக்கவில்லை. அவர்கள் கொண்டு வரும் சாப்பாட்டைத்தான் அவன் சாப்பிடவே ணும். மயில்வாகனம் செத்ததில் இருந்து அவன் நல்ல சாப்பாடுகள் சாப்பிட வில்லை. உழைப்பில்லை. கவலையில் தொழிலுக் குப்போக மனம்வரவில்லை. கந்தவிக்கிழ வன் குடத்தனையில் கரைவலை இழுக்கப் போய் தான் சீவியம் நடந்தது. யோசனை யில் உடம்பும் மெலிந்திருந்தான்.

'போனது போகட்டும் நடக்கிறதைப்பார்'

என்று கனகம் அடிக்கடி சொல்லு வாள். அவன் கருவாடும் லொறியும் எரிந்த கவலையிலிருந்து மீள மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தவன் கன கம் சொன்னமாதிரி தன்னைத் தேற் றிக்கொண்டு நாளைக்கு வேலைக்குப் போகவென யோசித்துக்கொண்டிருக் கப் பூங்கொடி சாப்பாட்டுடன் வந்தாள். அந்தியேஸ்டிச் சாப்பாடு இரவு முழுவ தும் பூறாட்டிக்குச் செமிபாடடைய வில்லை. வயிறு ஊதிக்கொண்டே இருந்தது. இஞ்சித் தேநீர் பூங்கொடி வைத்துக்கொடுத்த பிறகுதான் வயிறு சீராக வந்தது. அதுக்குப்பிறகுதான் நித்திரையும் வந்தது. கொஞ்சநேரம் நித்திரை கொண்டு விட்டு எழும்ப நேரம் நான்குமணியாகியது.

இன்று அவன் கடற்கரைக்குப் போக வேணும். பெட்டிக்காரர் மீனுக்கு வரு வார்கள். அவர்களுக்கு மீன் கொடுக் கவேண்டும். சம்மாட்டி மரியதாஸின் வலைகளை தெரித்துக் கொடுக்கவே ணும். கூலியாக மரியதாஸ் கொடுக் கும் மீன்களை விற்கவேணும். விற்று மிச்சம் பிடிக்கும் காசுக்கு கொஞ்சம் கொஞ்சமாக கருவாடுகளை வாங்கி விற்க வேண்டும் என நினைத்தபடி கையில் பற்பொடியைக் கொட்டினான். நான்கு தடவைகள் கீழும் மேலுமாக ஆள்காட்டி விரலை வாய்க்குள் விட்டு துழாவி எச்சிலைத்துப்பினான்.

கையில் கொட்டிய பற்பொடி முடிந்தவு டன் இடது கையில் ஒட்டியிருந்த பற் பொடியை சாரத்தில் துடைத்துக் கொண்டு கிணற்றில் வாளியை விட் டான். ஆழமற்ற கிணறு. நாலுமுழக் கயிற்றில் தண்ணி அள்ளலாம். கப்பி யில் கனநாட்களாக 'ஓயிலை' காண வில்லை.

வாளியில் தண்ணியைக் கோலவும் கிணற்றில் கயிற்றை விடவும் கோலிய தண்ணீரை இழுக்கவும் கடகட என்ற சத்தம் அரிகண்டத்தைக் கொடுத்தது. அந்தச்சத்தத்துக்கு நிருபன் எழும்பி னான். போச்சியில் கரைத்து வைத்த பாலை அவனின் வாய்க்குள் வைக்க, அவன் அழுகையை நிறுத்தினான்.

பூறாட்டி முகம் கழுவிவிட்டு வாசலுக் [illegible] பூங்கொடி தேநீரைக் கொடுத் [illegible] நின்றவாறே தேநீரை ஊதி ஊதி குடித்துக்கொண்டிருந்தான். அவள் படத்தட்டில் இருந்த திருநீற்றை விரல் களால் தொட்டு வந்து அவனின் நெற் றியில் பூசினாள். அவன் குவளையை அவளிடம் கொடுத்து விட்டு போனான். சூரியன் இன்னும் உதிக்கவில்லை. வானம் வெளித்துவிட்டது. அடிவானத் தில் மஞ்சள் திரட்டுக்கள் திட்டி திட்டி களாக இருந்தன.

இரண்டு வள்ளங்கள் கரைக்கு வந் தன. மிகுதி வள்ளங்கள் இன்னும் வரவில்லை. றோட்டில் அங்கங்கு குவிந்து கொண்டு சனங்கள் நின்ற னர். எல்லோரும் மதிலைப் பார்த்தபடி நின்றனர்.

கனகம் இடுப்பில் பெட்டியை வைத் துக்கொண்டு துவாயால் தலையை மூடிக்கொண்டு சுவரைப் பார்த்தாள். பூறாட்டி வேகமாகப் போனான்.

மதிலில் மூன்று நோட்டீஸ்கள் நீட்டுக்கு ஒட்டியிருந்தன. எல் லோரும் நோட்டீசைப் பார்த் தார்கள். சிவாஜி, எம்.ஜி.ஆர், முத்து ராமன், ஜெமினிகணே சனின் படங்கள் ராணித்தி யேட்டருக்கு வந்தால் மட்டும் கடற்கரையில் நோட்டீஸ் களை காணலாம். வேறு நடி கர்களின் படங்கள் என்றால் பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, தொண்ட மானாறு, உடுப்பிட்டிச் சுவர்க ளில் ஒட்டுவார்கள். பூறாட்டி க்கு எம்.ஜி.ஆர் பைத்தியம்.

நெல்லியடி மகாத்மா தியேட்டரில் எம். ஜி.ஆரின் விவசாயி படத்தை முதல் பார்த்தான். படத்தில் மழைபெய்தது. முற்றத்தில் கருவாடு காயப்போட்டதால் மழைக்கு நனையப்போகுது என உடனே வெளியில் வந்து வீட்டுக்கு ஓடினான்.

நெல்லியடி லக்ஷ்மி தியேட்டரில் எம். ஜி.ஆரின் இராமன் தேடிய சீதை பார்த் தான். ஒரு பாட்டுக்கு ஜெயலலிதா காலை உயர்த்த அவளின் உள்சட்டை தெரிந்தது. அதைப் பார்க்க எட்டுத்தரம் இராமன் தேடிய சீதையைப் பார்த் தான். எட்டாவது தரம் அந்தப்பாட்டுக் கட்டத்துக்கு ஜெயலலிதாவின் உட் சட்டை வாறநேரம் முன்னால் இருந்த வன் தலையை அசைத்துவிட்டான்.

“ ச்சீ...”

என அவனின் தலையில் குட்ட, அவன் திரும்பிப்பார்த்த போதுதான் அது சம் மாட்டி மரியதாஸின் தலை என்று தெரிந்தது.

பூறாட்டி கிட்டப்போய் நோட்டீசைப் பார்த்தான்.

“ வீரமரணம், செல்லக்கிளி அம்மான்” என இருந்தது. பெரிய கலர்ப்படம். கீழே 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என இருந்தது. தின்னைவேலியில் ஆமி யோடு சண்டை பிடிக்கும் போது செத் ததாக அந்தோனி பூறாட்டிக்குச் சொன் னான்.

ஊரே கொஞ்சம் கொஞ்சமாகத் திரண்டு சுவரை மொய்த்துப் பார்த்தது. தூரத் தில் ஜீப் ஒன்று வந்தது. மிகவும் வேக மாக வருவதை எவரும் கவனிக்க வில்லை. அவர்களுக்குக்கிட்ட வந்த தும் பிறேக்கடித்து நிற்க புழுதி பறந் தது.

ஜீப்பில் இருந்து குதித்தவர்கள் கையில் வைத்திருந்த கொட்டன்களால் குழுமி நின்றவர்களுக்கு அடிக்க எல்லோரும் ஓடினார்கள். பூறாட்டியைப் பிடித்து வைத்திருந்தார்கள்.


பூறாட்டியைத் தூக்கி மண்ணில் போட்டு தொண்டையில் சப்பாத்துக்கால்களால் மிதித்துக்கொண்டு ஒருவன் கேட்டான்

“ ஆர் நோட்டீஸ் ஒட்டினது?”

“ தெரியாதய்யா”

கூடவந்தவனில் ஒருவன் இடுப்புப் பட் டியைக் கழட்டினான்.

(வருவாள்)



ஜீப்பில் இருந்து குதித்தவர்கள் கையில் வைத்திருந்த கொட்டன்களால் குழுமி நின்றவர்களுக்கு அடிக்க எல்லோரும் ஓடினார்கள். பூறாட்டியைப் பிடித்து வைத்திருந்தார்கள். பூறாட்டியைத் தூக்கி மண்ணில் போட்டு தொண்டையில் சப்பாத் துக்கால்களால் மிதித்துக்கொண்டு ஒருவன் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்



மூவாறு ஆண்டின் முன்
ஆர்ப்பரித்தெழுந்த ஆழிப்பேரலையில்
பூவும் பிஞ்சும் காயும் கனியும் என
மூன்று தலைமுறை தனை முழுதாய்
விழுங்கிய நாளை
இன்று நினைக்கையிலும் இதயம் வெடிக்கிறது
தப்பிப் பிழைத்த தாயின் ஓலமிது

**எஸ்.கோதீஷன்**
திருகோணமலை

உணவின் அருமையும் புரிகிறது
உறவின் அருமையும் புரிகிறது
கண்ணீர் சிந்துவதால் என்ன பலன்…?
தைரியம் என்ற ஒற்றைச் சொல்லில்
வாழ்க்கைப் பயணம் செல்கிறது
எழுந்து விட்டோம் நாம்எமது வாழ்வுக்கு
விடைசொல் வானமே… விடைசொல்..

**வி.கௌதமி**
மீசாலை

ஒரு மனிதனுக்கு கவலை எனின் அவன்
தனது தாயிடம் கூறுவான்
ஆனால் அநாதைக்கு துன்பம் என்றால்
கடவுள், பூமிக்கு தான் கூறுவான்
இந்த மாரியிலே காய்கறி இல்லை
உணவுத் தட்டுப்பாடு அதற்கு ஒளிவரும்
ஒருநாள் கவலைப்படாதே!

**என்.கிஷானிகா**
தரம்7, யாழ்.இந்து மகளிர் கல்லூரி

## 63 மௌன மொழி

காலை நேரம் பேர் இரைச்சல்
கடலின் கோரத் தாண்டவம்
ஊர் எங்கும் தண்ணீர்
தரைமட்டமான ஊர்
எங்கு பார்த்தாலும் மனிதப் பிணங்கள்
மனித அழுகுரல்கள் கலியுக காட்சி

**கும்பவாழியான்**
உடுப்பிட்டி

திரிபுறும் அலையோடு
திண்டாடும் துயரத்தில்
கலியுகப் பிரளய
கடல் அலைப்பிரவேசம்
உறவுயிர் வளம் யாவும்
ஒரு கணம் பரி நாசம்
அரை உயிர்
அபலையின் - இருகரம்
வேண்டிடும் இயற்கையின்
நியாயத்தை

**வி.சாத்விகன்**
முல்லையூர்

பதிவிரதனை கூற்றுவன் பற்ற
கும்பியில் உதித்தவர்களும்
நட்டாற்றில் கைகழுவ
ஏதிலியாய் அபலை மாதாவே
ஏங்கித் தவிக்க கொடு நோயில்
தப்பிக்க வழியேது?
அபலைக்கு தஞ்சம் வழங்கும்
தயாளன் அன்றி தயாளினியள்

**எஸ்.உமாசிவம்**
வவுனியா

யாருமற்ற மயானத்தில் விசும்பை நோக்கி
விழிய நீர் சொரிய வேண்டுவது யாது மாதா
போருள்ள காலத்தில் இழந்த உறவுகளையா
ஆழிப்பேரலை விழுங்கிய அன்புகளையா
கொரோனா கொண்டு சென்ற கேளீரையா
ஆற்றிக்கொள் ஆதவன் மீண்டும் வருவான்
பாரானோ மானுடரின் இன்னல் இடர்களை
தேற்றிக் கொள் தேவமைந்தன் உயிர்த்தெழுவான்

**ஏழாலையூர்**
**எஸ்.அம்சன்**

ஆழிப்பேரலை அவலத்தில் சிக்கி அவதியுற்ற
அபலைப் பெண்ணே வாழ்வதற்கு வாழ்விடமில்லை
புசிப்பதற்கு உணவுமில்லை ஆதரவளிக்க உறவுகள்
இல்லை, உதவி செய்திட யாருமில்லை- இனி
உனக்கு ஆண்டவனே கதி என்று ஆகாயத்தை
நோக்கி இரு கரம் நீட்டி அழைக்கின்றாயோ?

சி.மகாலட்சுமி, கொக்குவில்

அள்ளித்தந்த கடலம்மா நீதந்த
சொத்துக்காய் சுனாமியெனும் பெயரால்
கூலிதனைப் பெற்றிடவே
உயிரோடு உடமைதனையும்
அள்ளிச் சென்றனையோ
நீயழித்த உடைமைதனை வேண்டிலோம்
உன்னைசேர்ந்த உறவுதமை காத்திடம்மா!
என வேண்டும் தாயவள் வேண்டுதலை ஏற்பாயே!

**ந.தனுபதன்,**
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்

சுட்டு விரலை நீட்டி குற்றம் சாட்டுவதுண்டு
இயற்கையின் சீற்றத்தாலும்
செயற்கையான செய்கையாலும்
சொத்து சுகங்களை யிழந்த
இத்தாய் பித்துப்பிடித்தவள் போல்
பத்து விரலையும் உயர்த்தும்
பாங்கு சோகத்தின் உச்சம்

**க.நாகராசா**
நுணாவில், சாவகச்சேரி

## 64



வானிடம் உண்மை வேண்டி
வாய்கதற ஆறுதல் நாடி
வருந்தும் பெண்ணவர் கோடி
காணாத உறவுகள் கோரி
பசித்த வயிறுகள் வாடி
ஆதரவும் அன்பும் தேடி
இயற்கையும் பொய்த்ததென கூறி
இறைவனிடம் கேட்பதே நீதி

**சிவரம்யா**

**பரிசு பெறும் கவிதை**

சுனாமி அடித்த இந்த தேசம்
அனாதி ஆகியது பந்த பாசம்
வானத்து சூரியனும் மறைந்தே – நம்
தேசத்து சூரியனும் மறைந்ததுவோ
இரு கரம் நீட்டி இறைஞ்சுகிறேன்
ஒரு வரம் காட்டி வழிவிடுவாயா – கந்தக
புகை முகில்வரை முட்டிய பூமி – இனி
எமை வாட்டிடாதே சாமி

**சி.பாவனா,**
யா/ அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை.

காலம் கடந்தும் நினைவில் நீந்தும்
சுனாமி அழிவின் சாவின் அவலம்
தாயாள் கரங்கள் நினைவும் ஏந்தும்
தொடரும் அலைகள் பாதம் தழுவும்
கடலில் மரணம் தினமும் துயரம்
பள்ளிச் சிறுவரின் படகுப் பயணம்
குறிஞ்சாக்கேணியில் உயிரைக் குடித்தது
மனிதனின் தவறா? இயற்கையின் சீற்றமா?

**ச.ரன்குமார்,**
வற்றாப்பளை

வாரித்தந்த கடல் அன்னையே
எனது வாரிசுகளை வாரிச்சென்றது ஏனோ?
உனது எழில் காட்டித்தானே
எனது எழில்களுக்கு அமுதூட்டினேன்
என்னை மட்டும் தனியே தவிக்க விட்டு
சுனாமி என்ற பெயரில் சின்னஞ்சிறுசுகளை
அள்ளிச் சென்றது நியாயம் தானோ?

**த.மனோமிதன்**, நல்லூர்.

கடலே உன்னிடம் பறித்தது
மீனை மட்டும்
ஆனால் நீயோ எம்மிடம்
சுனாமி என்ற பெயரோடு
துவம்சம் செய்து என்
குடும்பத்தையே சாகடித்தாய்
இனி மீண்டும் இங்கு வராதே
மனித உயிர்குடிக்க…

**அ.தர்சினி,**
யா/ வரணி மத்திய கல்லூரி.

ஆழிப்பேரலை அள்ளிச் சென்றதொன்று
குண்டுக்கிரையாகிக் கூண்டோடழிந்ததொன்று
கண்முன்னே ஒப்படைத்து காணாமல்போனதொன்று
விலைவாசி வயிறுக்க
மனையோடு கயிற்றில் தொடங்கியதொன்று
எரிவாயு எமனாகி எரித்தழித்த தொன்றுமாய்
சாம்பல் மேடுபூத்த சரித்திரபூமியில் நின்று
[illegible]
[illegible]ர்தான் ஒன்று

[illegible]

கவிதைக்கு பரிசு
1000/=

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:
31.12.2021

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடி!

சஞ்சீவி சிறுகதை

கனக.பாரதி செந்தூரன்
பரந்தன்

தன் நான்கு வயது மகளுக்குச் சிரிப்புக் காட்டிய வாறே ஞாயிறு விடுமுறையைக் களித்தபடி. கழித்துக்கொண்டிருந்தார் வித்தி என்கின்ற வித்தியானந்தன். வேலை முடிந்ததும் வீட்டுக்கு வந்து தன் மகளோடு முகம் ஒட்டி முற்றத்தில் தூக்கி வைத்துச் சிறுபொழுதைக் கழித்தாற்தான் வித்தியருக்கு நிம்மதி. ஊருலகத்தில் எல்லோருக்கும்தான் மணம் முடித்துக் குழந்தைகள் பிறக்கின்றன. ஆனால் வித்தியருக்கோ இந்த மகிழ்வும் மனநிறைவும் உலக அதிசயங்களில் ஒன்று போன்றது. விபத்தொன்றில் சிக்கிச் சின்னாபின்னமாகி நீண்ட நாட்களாகக் கட்டிலோடு காலம் கழித்தவருக்குக் கல்யாணம் பேசி வந்ததே நாற்பது வயதுகளில்தான்.

"தூரத்து உறவுக்காரி ஒருத்தி தாய், தந்தையின்றி இருக்கிறாள், உனக்குச் சம்மதமென்றால் கட்டன்"

மாமன் முறையில் வந்த உறவொன்று இணைத்துவிட்ட சம்பந்தத்தைக் கொழுகொம்பாகப் பிடித்துக்கொண்டு இல்லறச் சோலையின் இதத்தை இதமாக அனுபவித்தார். எத்தனை நாட்களின் ஏக்கமோ? இல்லை அவசரமோ? எண்ணிப் பத்தாம் மாதம் மகள் பிறந்தாள்.

தடுக்குப்பாயில் மகளை வைத்துக் கொஞ்சும் போதெல் லாம் "என்னைப் போலயே இவளுக்கும் சின்னக் கண்ணு களப்பா, காது எங்கட அம்மாவைப் போல" என்று மனைவிக்குச் சொல்லிச் சொல்லிச் சந்தோசப்படுவார். "அப்பாவைப் போலவே பிள்ளை இருக்கிறாள்" என்று பிள்ளையைப் பார்க்க வருபவர்கள் யாரேனும் சொன்னால் பூரித்துக்கிடப்பார். "என்னோட படிச்சவங்களெல்லாம் தங்கட பிள்ளையளுக்கு சாமத்திய வீடு செய்யேக்க தான் நான் என்ர பிள்ளைக்கு முதல் பிறந்த நாள் கொண்டாடினான். ம்ம்... எல்லோருக்கும் எல்லா வயதிலயும் எல்லாம் கிடைக்கிறேலத்தானே" மனைவியி டம் அடிக்கடி சொல்லிச் சிரிப்பார்.

டோங்லீ, வித்தியர் வீட்டுக் காவலன். முதல்முதலில் அவனைப் பார்ப்பவர்களுக்கு நிச்சயம் பயம் வரும். மிக நல்லவன், ஆனால் பசி தாங்கமாட்டான். இதனாலேயே பலமுறை வித்தியரின் கண்டிப்புக்கு ஆளாகுவான். வித்தியரின் மகளை வித்தியரைப் போலவே நேசிப்பவன். புதிதாக யாரும் வீட்டுக்கு வந்தால் குழந்தையை நெருங்க விட மாட்டான். குழந்தையையே சுற்றிச் சுற்றி வருவான். தன் இரு கண்களில் ஒன்றை எப்போதுமே குழந்தை மேலே வைத்திருப்பான். கொடுப்பதை உண்பான், ஆனால் நிறைய உண்பான். பசி வந்தால் கண்டவற்றிலும் வாய் வைப்பான். வீட்டில் மரக்கறியென்றாலும் அவனுக்கு அசைவம்தான். வீட்டில் விரத நாட்களில் அவன் மட்டும் சோக ஆலாபனையில் சுருதி மீட்டுவான். இன்னும் சொல்லப்போனால் டோங்லீக்கும் குழந்தை பானுவுக்கும் சம வயதுதான். அடர்த்தியான தேகக் கட்டும் அதனைச் சுற்றி மொசு மொசு என்று உரோமமுமாகச் சற்றுப் பெருத்து வளைந்த வாலுமாக ஆங்காங்கே பிரஷ்ஷில் இருந்து சிந்திய வெள்ளைச் சுண்ணாம்புப் பொட்டுக்கள் போல புள்ளிகள் படர்ந்த கரிய உடலில் வீட்டைக் காவல் செய்வான். யாரேனும் புதிதாக வந்தால் குரைத்தே கலைத்து விடுவான். பானுக்குட்டி சிணுங்கும் போதெல் லாம் டோங்லீ சுதந்திரமாக நின்றால் வீட்டைச் சுற்றியும் சில சமயங்களில் வீட்டின் உட்புறமாயும் ஓடித்திரிவான். கட்டிப்போட்டாலோ முன்னங்கால்களால் விறாண்டியே கோபத்தை அடக்கிக் கொள்வான்.

வல்லைவெளி ஆமிக்காம்பில் பழுதடைந்து சிக்கலை ஏற்படுத்திய ரான்ட்ஸ்போர்மரைத் மிகத் துல்லியமாகத் திருத்திக் கொடுத்ததற் குப் பரிசாகா, கொமாண்டர் ஜயசூரிய தனக்கு டோங்லீயைப் பரிசளித்தார் என்பதைக் கிட்டத்தட்டக் காது கேளாதவர்களைத் தவிர நெல்லியடியில் எல்லோருக்கும் சொல்லிவிட் டார் வித்தி. டோங்லீயும் சொல்லிக்கொள்ளும் படியான வெளிநாட்டுப் பரம்பரையில் வந்த வாரிசுதான். என்னவொன்று, இலங்கையில் பிறந்துவிட்டதால் கொஞ்சம் கிராக்கியான இனமாகத் தெரிந்தான். சில மனிதர்களுக்கு இல்லாத உலகத்து நல்ல புத்திகளெல்லாம் நாய்களுக்குக் குறிப்பாக டோங்லீக்கு இருப்பது கண்டு வித்தியர் அடிக்கடி பெருமை பேசுவார். ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தாலும் ஆளரவம் கேட்டால் அறக்கப் பறக்க எழுந்து விடுவது நாய்களுக்கே உரித்தான பண்பு. 'நாய்களின் நல்ல பண்புகள் பற்றி நாலடியாரும் ஔவையாரும் சொல்லாததையா நான் சொல்லப்போகிறேன்' என்று வீட்டுக்கு வந்துபோபவர்களிடம் சொல்லிச் சிரிப்பார். 'ஏனப்பா, எனக்கு பானு எண்டு பேர் வச்சனீங்கள்?' ஒருநாள் மாலைநேரம், தந்தையோடு விளையாடிக்கொண்டிருந்த வேளையில் பானு கேட்டாள்.

'அதுவா, அந்தா வானத்திலே சிவப்பாத் தெரியுதே அதுக்கென்ன பேர்?'

'சூ...ரியன்'

'ஆ, சூரியன பானு எண்டும் சொல்லலாம், பிள்ளையும் சூரியனைப் போல சிவப்பா அழகா இருக்கிறதாலதான் அப்பா பிள்ளைக்கு பானு.. எண்டு பேர் வைச்சனான்'

சொல்லும் போதே வித்தியரின் ஆன்மாவுக்குள் பிரகிருதி இல்லாத் தெய்வத்தின் பிரதிமை எட்டிப்பார்க்க, மகளை அணைத்து முன் நெற்றியில் முத்தமிட்டார்.

"அப்போ, எங்கட டோங்லீக்கு ஏனப்பா டோங்லீ எண்டு பேர் வச்சனீங்கள்?" தந்தையிட்ட முத்தத்தில் நாட்டமில்லா தவளாக அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

வித்தியர், "ஹா ஹாஹஹா.." ஓங்கிச் சிரித்தார்.

"அதுவா அது அப்பாவுக்கு ஏழாம் அறிவால கிடைச்ச பெயர் "

"'ம்ம்... " என்றாள் குழந்தை பானு. பின்னர் சிறிது நேரம் எதுவும் பேசாது சிந்தனையில் இருந்தாள்.

'ஏனம்மா, பிள்ளைக்கு இந்தப் பேர் பிடிக்கலையா?' கேட்டார்.

"இல்லையப்பா, எனக்கு நல்லாப் பிடிச்சிருக்கு" சொல் லிக்கொண்டே தந்தையின் கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு டோங்லீயை நோக்கி ஓடினாள்.

"டோங்லீ... டோங்லீ.."" இரண்டு தடவைகள் சத்தமாகக் கத்தினாள். மனதில் என்ன மகிழ்ச்சியோ யாருக்குத் தெரியும். இறைவன் இப்படித்தான் சந்தோஷமாக இருப் பான் போல என்று வித்தியர் மனதுக்குள் எண்ணிக் கொண்டார். டோங்லீ கழுத்தில் கட்டப்பட்ட சங்கிலியை வெறுத்தவனாக நாக்கை நீட்டி மூக்கைத் துழாவியபடியே செல்லங்கொஞ்சிக்கொண்டு முன்னங்கால்களை மடித்தான்.

வழக்கமாக இறைச்சி வாங்கும் கடையில் டோங்லீக்குத் தேவையான கறியையும் வீட்டுக்குத் தேவையான காய் கறிகளையும் வாங்கிக் கொண்டுவந்து மனைவியிடம் நீட்டினார்.

"ஏனப்பா, இவ்வளவத்த அள்ளிக் கொண்டந்தனீங்கள்? நான் ஒராள் இவ்வளவத்தையும் என்னெண்டு சமைக்கி றது? பத்தாக்குறைக்கு உங்கடையும் பிள்ளையின்ரயும் என்ரயுமெண்டு எக்கச்சக்க உடுப்புகளும் தோய்க்கக் கிடக்கு" சீறிச்சினந்தாள் திருமதி வித்தியர்.

"இதில நாய்க்கு வேற தனிக்கறி, நானென்ன மனுசரே மாடே" ... சேர்த்து வைத்திருந்த அன்றைய நாள் எரிச்சல் முழுவதையும் வார்த்தைகளால் வீசியெறிந்தாள். வித்தியருக்கு எல்லாமே உயிர்கள் தான் .நெடு நாட்கள் தனிமை யில் வாழ்ந்ததாலோ என்னவோ? உயிர்க ளிடத்தில் இயல்பாக அன்பு ஒட்டும்.

"சரி, அப்ப பின்ன, நீங்க உடுப்புகளைத் தோயுங்கோவன் நான் சமைக்கிறன்" விடுமுறை நாட்களில் கணவர்கள் சமையற்கட்டுக்குச் செல்வதொன்றும் நாட்டில் புதுமையில்லையே.. அதனால் என்ன நாட்டின் பொருளாதாரமா வீழ்ச்சி காணப்போகி றது?. சிலர் கட்டாயத்தில் போவார்கள், சிலர் விரும்பிப் போவார்கள். இப்போது வித்தியர் இரண்டுமாக நிற்கிறார், அவ்வளவுதான்.

அவிழ்த்து விடப்பட்ட டோங்லீ ஏக குஷியில் வீட்டு விறாந் தையாலும் வெளியாலும் சுற்றி ஓடித்திரிந்தான். பானுவின் கண்களுக்கு டோங்லீ தம்பியைப் போல செல்லச் சேட்டை களும் விட்டுத்திரிந்தான். "பிள்ளையைப் பாருங்கோ, நான் உடுப்ப ஊறப்போட்டுட்டு வாறன்" கிணற்றடிக்கு விரைந்தார் வித்தியரின் மனைவி.

பகற் சாப்பாடு முடிந்ததும் 'உண்ட களை தொண்டனுக்கும் உண்டு' என்பது போல வீட்டு விறாந்தையில் பாயை விரித்துக் குட்டித் தூக்கம் போட்டனர் மூவரும். டோங்லீ வீட்டு முற்றத்தில் நடப்பட்டிருந்த நிழல் மரவள்ளிக்குக் கீழே தன் முன்னங்கால்களை நீட்டி அதற்குள் தலையைக் கிடத்திக்கொண்டு கண்ணயர்ந்தான். குழந்தை பானுவோ, குட்டித்தூக்கத்தில் உடன்பாடில்லாதது போலத் தந்தையின் அரவணைப்பிலிருந்து எழுந்து வெளிக்கதவுக்குச் சென்று எட்டிப்பார்த்தாள். வீடே அமைதியாக இருப்பது அவளுக்கு என்னவோ போல இருந்தது இது காலையா மாலையா என்ற வேறுபாடு கூடத் தெரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள். படுத்திருக்கும் தந்தையின் முகத்தை நோக்கி செல்லங்கொஞ்சிக்கொண்டு வந்தமர்ந்தாள். வந்தவ ளுக்கு தந்தையின் தூங்கு முகம் பிடிக்கவில்லைப் போலும். மூக்கில் செல்லமாக நுள்ளினாள், தன் பிஞ்சு விரல் நகங்களால் கன்னங்களை விறாண்டினாள். வித்தியர் துடிச்சுப் பதைத்து எழுந்தார் 'ச்சீ பிள்ள, அப்பிடிக் கீறக்கூடாது கைய எடுங்க' கொஞ்சம் கோபம் கலந்து கத்திவிட்டார். மனைவியும் கண்களை விழித்துக் கொண் டாள். சிரித்து விளையாடிக் கொண்டிருந்த பானுவுக்கு வித்தியரின் அந்தத் தொனி கிலியை ஏற்படுத்தியது. அப்படியே குந்திவிட்டாள் பிள்ளையின் இந்தச் சடுதியான மாற்றத்தை உணர்ந்த வித்தியர் மறுகணமே 'அம்மாக் குட்டி ஏன் இருந்திட்டீங்க அப்பா சும்மாதான் கத்தினான். இந்தா இப்பிடி விறாண்டுங்கோ' மகளின் இரு

"அப்பாவைப் போலவே பிள்ளை இருக்கிறாள்" என்று பிள்ளையைப் பார்க்க வருபவர்கள் யாரேனும் சொன்னால் பூரித்துக்கிடப்பார். "என்னோட படிச்சவங்க ளெல்லாம் தங்கட பிள்ளையளுக்கு சாமத் திய வீடு செய்யேக்கதான் நான் என்ர பிள் ளைக்கு முதல் பிறந்த நாள் கொண்டாடி னான். ம்ம்... எல்லோருக்கும் எல்லா வயதில யும் எல்லாம் கிடைக்கிறேலத்தானே" மனைவியிடம் அடிக்கடி சொல்லிச் சிரிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளையும் எடுத்து மழித்து இரண்டு நாட்கள் ஆகிவிட்ட கன்னங்களில் போட்டார். பானுவோ சற்று முன்னர் இருந்த மனநிலையை இழந்து சோம்பிப் போனாள். நடக்கின்ற சம்பவங்களைப் பார்த்த வித்தியரின் மனைவி தன் தலையைச் சொறிந்து கொண்டே 'பேசாமல் படம்மா' மகளை இழுத்துக் கட்டிக்கொண்டாள்.

"அப்பா, டோங்லீய ஏனப்பா கட்டி வச்சு வளக்கிறீங்கள்?" இரவு வாசலில் நின்று வித்தியரைப் பார்த்துக் கேட்டாள் .வித்தியருக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. 'அதுவா, டோங்லீ எங்கட வீட்டு நாய் தானே வேற ஆக்கள் டோங்லீயப் பிடிச்சுக்கொண்டு போகாமலிருக்கத்தான் கட்டி வச்சிருக்கிறம்' பதில் சொன்னார். 'ப்ப டோங்லீயக் கட்டிவைக்காட்டி யாரும் பிடிச்சுக்கொண்டு போயிருவி னமா?' சோர்ந்துபோனாள்.

சிறிது நேரத்தில்..

"அப்போ ஏனப்பா, என்னைக் கட்டி வளக்கேல?"

"ஹா ஹா ஹா.." வித்தியர் சிரித்துவிட்டு ,

"அம்மா பிள்ளைய சின்னனில குழப்படியெண்டு காலில கட்டி வச்சுத்தான் வளர்த்தவா. இப்ப பிள்ளை வளர்ந்திட் டீங்க தானே! அதுதான் கட்டுறேல" சொல்லிக்கொண்டே மகளைத் தூக்கிக் கொஞ்சினார். சிந்திக்காமல் கேட்கிறாளா இல்லைச் சிந்தித்துக் கேட்கிறாளா விளங்கிக்கொள்ள முடியாத விளங்காத வித்தியருக்குக் குழந்தையின் ஒவ்வொரு கேள்வியும் ஆச்சரியமாகவும் ஆனந்த மாகவும் இருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்பு வித்தியருக்கு ஒரு கடிதம் வந்தது. பிரித்துப் படித்துவிட்டு மேசையில் வைத்துவிட்டு வீட்டுக்குள் சென்று ஏதோ அலுவல கம் சார்ந்த அலுவலில் மூழ்கியிருந்தார். அந்தப் பக்கமாகத் தன் வெண்பொங்கற் கால்களால் நடந்து வந்துகொண்டிருந்த பானு .அந்தக் கடிதத்தை அதன் வெண்மையை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தாள் .அதன் வெண்மையை இரசித்தவ ளுக்கு அதனை அள்ளியெடுத்து விளையாட வேண்டும் போல இருந்தது. மேசையில் இருந்த பேனாவைத் தன் பிஞ்சுப் பச்சை மிளகாய் போன்ற விரல்களால் கையிலெ டுத்து மனம் போன போக்கில் கிறுக்கல் ஓவியங்களாக வரைந்துகொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் ஓவியத்தில் ஆர்வமில்லாதவளாக சிற்பக்கலைக்குச் சிமெந்து குழைப்பது போல அக் கடிதத்தைக் கசக்க ஆரம்பித்தாள். அலுவல் முடிந்து வந்த வித்தியர் மகளைப் பார்த்தார் மகள் சந்தோசமாக இருப்பது தெரிந்தது. குசினிக்குள் சென்று ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வந்து தன் வாயைத் திறந்து உறிஞ்சிய பின்தான் கடிதத்தின் மீதான மகளின் கலவரத்தைக் கண்டுணர்ந்தார்.

"ஐயோ, பிள்ள என்ன செய்து வச்சிருக்கிறாய்.." கோபம் குரங்குப் பாய்ச்சல் போட்டு உச்சிக்குச் சென்றது. ஓங்கி ஒரு அறையை அவள் முதுகில் வைத்தார். பாவம் பானு வலியால் துடிதுடித்து நடுங்கிக் கொண்டே வீரிட்டுக் கத்தினாள். தந்தையின் கோபச் சுவாலையிற் பொசுங்கிய வளாகத் தாயிடம் ஓடிச் சென்று மடியில் வீழ்ந்து கதறி னாள். அடுத்த கணமே பிள்ளையின் வலி தாங்க முடியாதவளாக

"நீங்க மனுசரே மாடே?இப்பிடிப் போட்டுப் பிள்ளைய அடிச்சிருக்கிறீங்க"

"கடிதத்தை என்ன செய்து வச்சிருக்காள், பார் ஒருக்கா!"

"நான் ஏன் பாக்கோணும்?முக்கியமான கடிதமெண்டால் அதை நீங்கதானே கவனமா எடுத்து வச்சிருக்கோணும். பிள்ளையள் எண்டால் இப்பிடித்தான் எடுத்து விளையாடுங்கள் .கிறுக்குங்கள்.அதுசரி, மனுசர் மக்களோட கிடக்காமல் தனியக் கிடந்ததுகளுக்கு இப்பிடித் தான் இரணியப் புத்தி வரும்" வித்தியரின் மனைவி மகளுக்காக வித்தியரை வார்த்தைகளால் வெளுத்து அடுக்கினாள்.

"ஐயோ! பிள்ளையை இப்படி அடித்து விட்டேனே கடவுளே! கடவுளே!"

இப்பொழுதுதான் இயல்பு நிலைக்குத் திரும்பியவராகத் தன்னைத் தானே நொந்துகொண்டார்.ஆனாலும்

"இஞ்ச பார், எனக்கு வந்த புறமோஷன் கடிதத்தை என்ன செய்து வச்சிருக்கிறாள் எண்டு"

"பிள்ளைக்கு உது புறமோஷன் கடிதமெண்டு தெரியுமே? அதுக்காக இப்பிடியா அடிக்கிறது ?என்ன மனுசன் நீங்க.சின்னப் பிள்ளையப் போட்டு இந்த அடி அடிச்சிருக்கி றீங்கள். இப்படியா அடிக்கிறது?"சட்டையைக் கழற்றி மகளின் முதுகைக் காட்டினாள். தன்னைப் போல கண்ணும் மூக்கும் வாயும் என்று அடிக்கடி பேசிக்கொள் ளும் வித்தியருக்குத் தன் கைவிரல்கள் முதுகில் புடைத்துக் கிடப்பது தெரிந்தது. சில நிமிடத் தாடகையாக மாறியிருந்த மனைவியின் தாக்குதலை சமாளிக்க முடியாதவராக வித்தியர் முகங் கோணியிருந்தார். மகளைத் தூக்க மனைவியின் அருகே போனார்

"இஞ்ச விடுங்கோ. காணும்...."





"குழந்தைகளின் சோகங்களும் சந்தோசங்களும் ஒரு குட்டித் தூக்கத்தோடு மறந்து விடும். வளர்ந்த வர்கள் நாங்கள்தான் ஆழ்மனதில் வைத்து வினோத உயிரினங்களாக அலைகின்றோம் " வித்தியருக்கு தத்துவமொன்று எட்டிப்பார்த்தது. தன் இரு கைகளா லும் மகளை வாரியணைத்து முத்தாடினார்.

"விடு.பிள்ளைய நான் பாக்கிறன்"

"நீங்க பாத்தது காணும் தூக்காதீங்கோ..."

"பானு, அப்பாட்ட வாம்மா.""

வித்தியரின் குரல் தழுதழுத்தது. என்னதான் பிள்ளைக் காக வாதாடினாலும் ஒரு ஆண்மகன் அதுவும் தன் தவறை உணர்ந்து ஊமையாக அழுது தகிக்கும் கணவனின் நிலையை மனமானியில் வாசித்தறிந்த மனைவிக்கு மறுகணமே கோபம் தளர்ந்தது. மகளின் முதுகை நீவியபடியே.

'ஒண்டுமில்ல ஒண்டுமில்ல. பிள்ளைக்கு ஒண்டு மில்ல...அப்பாட்டப் போங்கோ அப்பாட்டப் போங்கோ'

'ங்ங்..போகமாட்டன்'

'பிள்ளை அப்பாட்டப் வாங்கோ '

'ம்ம் வரமாட்டன்'

தந்தையின் அந்நேர அன்பை நிராகரித்தவளாகத் தாயின் தோளை இறுகப் பற்றிக்கொண்டு கண்ணீர் வடித்தாள். கேவிக் கேவி அழுகையை விழுங்க நினைக்கும் மகளைப் பார்த்து வித்தியர் தன்னைத் தானே உள்ளூரத் திட்டிக்கொண்டார்

வலுக்கட்டாயமாகத் தூக்க முனைந்த வித்தியர் 'என்ர பிள்ளையெல்லா அப்பாட செல்லமல்லா வாம்மா...!' கெஞ்சிக் கூத்தாடி சிறிது நேரத்தின் பின் ஒருவாறு மார்போடு சேர்த்துக்கொண்டார்.

'அப்பா பிள்ளையைத் தெரியாமல் அடிச்சுப்போட் டன்.அழாதீங்கோ. அழாதீங்கோ. என்ர பிள்ளையல்லா..! அழாதையம்மா..!'

மார்போடு மகளை மணிவைரமாகப் போர்த்திக் கொண்ட வித்தியர் இப்போதும் பானுவுக்கு மேலாகத் துடித்தார். டோங்லீ நடப்பவற்றை கண்கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்தது. அதன் ஆத்திரத்துக்கு அடையாளமாகத் தன் முன்னங்கால்களால் மண்ணைக் கிண்டி ஒரு பள்ளத்தை கிண்டிவைத்திருந்தது. அதன் வாயில் தொங்கிக் கொண்டி ருக்கும் நாக்கில் ஈரலிப்புத் தன்மை காய்ந்திருந்தது.

அந்தச்சம்பவத்துக்குப் பின் பானு தன்னை அப்பா என்று அழைக்காதது வித்தியருக்கு என்னவோ போலவிருந்தது. பீங்கானிலிருந்து கை விரல்களில் சென்ற புட்டு தொண் டைக்குழிக்குள்ளால் பயணம்போனதென்பதை மாத்திரம் உணர்ந்திருந்தார். இரவுச் சாப்பாடு எப்படி முடிந்தது? எப்படி இறங்கியது என டோங்லீ உட்பட யாருக்கும் விளங்கவில்லை. பானு வித்தியரின் தோளில் சாய்ந்து கண்ணயர, தாய் வாரியணைத்துப் படுக்கையில் கிடத்தினாள். மறுபடியும் மகளின் முதுகைப் பார்த்தார். தன் பற்களுக்கிடையில் அடித்த அந்த விரல்களை வைத்துக் கடித்துக்கொண்டார் ஒரு சிறுபிள்ளை போல.

காலையில் மகள் எழுந்ததும் 'அப்பா' என்றாள். வித்தியருக்கு இப்போதுதான் உயிர் வந்தது. நிம்மதிப் பெருமூச்சொன்றினை சீதளமாக வெளியேற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழந்தைகளின் சோகங்களும் சந்தோசங்களும் ஒரு குட்டித் தூக்கத்தோடு மறந்து விடும். வளர்ந்தவர்கள் நாங்கள்தான் ஆழ்மனதில் வைத்து வினோத உயிரினங்க ளாக அலைகின்றோம் " வித்தியருக்கு தத்துவமொன்று எட்டிப்பார்த்தது. தன் இரு கைகளாலும் மகளை வாரிய ணைத்து முத்தாடினார். கண்கள் பூழையால் பிசுபிசுத்துக் கிடந்தது, கடவாயில் வீணி வாய்க்கால் வெட்டியிருந்தது. அவர் எதனையும் பொருட்படுத்தவில்லை. முதுகைத் தடவிக்கோண்டே கன்னத்தில் இரண்டு முத்தத்தை அழுத்திப் பதித்தார்.

வார இறுதி நாட்கள் இரண்டும் போயாவுமாக மூன்று நாட்களை வீட்டோடு செலவு செய்துவிட்டு மறுநாள் வித்தியர் வேலைக்குப் போக ஆயத்த மானார். தனது நீளச் சேர்ட்டின் கைகளை மடிக்கத்தொடங்கினார். மனைவியும் வீட்டு வேலைகளோடு பரபரப்பாயிருந்தார். மனைவி நேற்றைய நாளில் எஞ்சியிருந்த இறைச்சியை அடுப்பிலேற்றிச் சுடவைத்தார். தீப்பிடித்து நெகிழ்ந்த இறைச்சி வாடை வீட்டைத் தாண்டி டோங்லீயின் பூமரத்தடிக்கும் போய்ச் சேர்ந்தது. அவிழ்த்து விடப்பட்டிருந்த டோங்லீ இறைச்சி



வாடையை மோப்பம் பிடித்துக்கொண்டு குசினி வாசலா லும் வீட்டு வாசலாலும் தன் நீளமான இரத்தச் சிவப்பு நாக்கை ஈரலிப்பாக்கித் தொங்கப் போட்டுக்கொண்டு செக்குமாட்டைப் போல சுற்றிவந்தது. டோங்லீ அங்கும் இங்கும் ஓடித் திரிந்தது வெளிக்கிட்டுக் கொண்டிருந்த வித்தியருக்கு எரிச்சலைத் தந்தது.

'இந்த நாயை என்ன செய்யலாம்,ரெண்டு அடி போட்டால் தான் திருந்தும்' மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

வித்தியரின் அருகே நின்று கொண்டிருந்த பானு அப்பா வையும் நாயையும் மாறி மாறிப் பார்த்தாள்.

'டோங்லீ. ப்போ .ப்போ..' என்றாள்.

டோங்லீ போவதாகத் தெரியவில்லை

'அப்பா. அண்டைக்கு எனக்கு அடிச்சீங்க அதுப்போல ஒரு அடி வீச்சா அடியுங்க டோங்லீக்கு அப்பதான் டோங்லீ போகும்' என்றாள். மனம் எங்கோவோர் மூலையில் செம்மனச்செல்வியை நினைவுக்குக் கொண்டுவந்தது. காலையுணவுக்காக மனைவி ஆக்கிவைத்திருந்த புட்டில் கைவைத்த வித்தியருக்குக் கண்கள் பனித்துப் போயின. சாப்பிட மனம் வரவில்லை. கைகளை அலம்பினார். உதடு கள் துடித்தது. குழந்தையைத் தூக்கிக்கொண்டு கதிரை யில் அமர்ந்தார். அவர் மனக்கண்ணில் டோங்லீயின் முதுகில் தன் கைவிரல் இருப்பது தெரிந்தது. 'அப்பா. ஏன் சாப்பிடேலை?' பானு கேட்டாள். வித்தியர் மகளை மார்போடு அணைத்துக்கொண்டே மனைவியைப் பார்த்தார். அவரது மறுகை டோங்லீயின் முதுகை வருடத் தொடங்கியது.

சஞ்சீவி

26 டிசெம்பர் 2021






## சில ரசனைக் குறிப்புகள்

"இவ்வளவுக்காவது செய்திருப்பார்களா? என்ற எதிர் பார்ப்பு இருந்தது ஆனால் ஏமாற்றி விட்டார்கள்". எதிர்பார்த்ததை விட 100 மடங்கு சிறப்பாக, பிரமிப்பாக செய்திருக்கிறார்கள்.

சுருக்கமான ஒருவரி விமர்சனம்
"எங்கடை தம்பிமார் ஒரு படம் எடுத்துத்தான் இருக்கிறாங்கள்"

போருக்குப் பின்னான ஈழத்து தமிழ் சினிமா இன்னுமொரு தடத்திலும், பரிமாணத்துக்குள்ளும் பிரவேசித்து விட்டது.

- சமூக அக்கறை கொண்ட கதைக்கரு
- அற்புதமான காட்சியமைப்பு
- தேர்ந்த நடிப்பு
- விறுவிறுப்பும் சுவாரஷ்யமும் குறையாத திரைக்கதை + சோர்வில்லாத நகர்வு
- பிரமிப்பான பாடலாக்கம்
- குறை சொல்ல இயலாத ஒளிப்பதிவு
- இன்னும் முன்னேற இடமுண்டு என்று சொல்லத்தக்க ஓரிரு சிறு தவறுகள்.

முதல் நாள் முதற்காட்சி குடும்பமாகச்சென்று பார்த்தோம் என்று சொல்வதில் உண்மையில் மிக மகிழ்ச்சி. என்பிள்ளைகள் என்றேனும் ஒருநாள் அவர்கள் காலத்தில் போருக்குப்பின்னான ஈழத்து சினிமாவின் வரலாறு தொடர்பாக பேசும்போதும் எழுதும்போதும் "புத்தி கெட்ட மனிதரெல்லாம்" முதல் நாள் முதற்காட்சியில் பார்த்தோம் எனப்பேசுவார்கள்.

*வரணி சிவராஜா*

'புத்தி கெட்ட மனிதர் எல்லாம்' (PKM) படத்தைப் பார்க்கலாமா? ஏன் பார்க்க வேண்டும்?
"எங்கட பெடியள் படம் எடுத்திருக்கிறாங்க.. ஊக்கு விக்க வேணும், தேக்கு விக்கவேணும்..." எண்டு இந்தப் படத்தை பார்க்கப் போகத்தேவையில்லை.. சாதாரணமாக பொழுதைப்போக்க ஒரு படத்துக்கு போகணும் எண்டு நினைச்சாலே போதும். தாராளமா இந்த வார இறுதியைக் கலகலப்பாக்க PKM படம் பார்க்க போங்க.. உங்களுக்கும் படம் பிடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.
எத்தனையோ இந்தியப் படங்களை அடிச்சுப்பிடிச்சுப் போய் பார்த்து "மொக்கை" எண்டு சொல்லி இருப்பம். அந்த மாதிரியான சலிப்பை இந்தப்படம் நிச்சயம் தராது.
படத்தின் கதை ஒண்டும் புதுசில்ல. "எங்கட கதை"யும் இல்லை. ஆனாலும், திரைக்கதை=நடிப்பு ஒன்றரை மணி நேரம் எப்பிடி போனதெண்டு தெரியாம போகும்.
முதல் பாதி கலகலப்பு. இரண்டாம் பாதி சற்றுத் தொய்வு எண்டாலும், எமோஷன் பார்ட். அதுவும் நல்லாத் தான் இருக்கு. இசை சரவெடி.
1.30 மணி நேர படத்தை இரண்டா பிரிச்சு இடைவேளை விட்டதெல்லாம் வர்த்தக சினிமா நோக்கிய ஓட்டம். அது எங்களுக்குத் தேவையானதும் கூட.

**- வரோதயன்**

ஈழத்து சினிமாவென்றால் எமக்குள்ளே நாமே ஓர் வட்டம் வரைந்து அதற்குள்ளே நின்று தான் படத்தை உருவாக்குவதும் மதிப்பிடுவதுமாக இதுகாறும் இருந்தது. எம்மவரின் படைப்பை ஆதரிக்க வேண்டிய தேவையிலேயேபடத்தைபார்க்கசென்ற எமக்கு இந்த வருடத்தின் சிறந்த திரைப்படைப்பை பரிசளித்து எம்மவர்களாலும் சிறந்த, தரமான, ரசித்துக் கொண்டாடக் கூடிய படத்தைத் தரமுடியும் என இவர்கள் நிரூபித்து விட்டார்கள் எத்தனையோ தென்னிந்திய புகழ் பூத்த இயக்குநர்களே திரைக்கதையையும் பார்வையாளர்களையும் படம் முழுவதிலும் ஒன்றாகப் பயணிக்க வைக்க தடம் மாறும் காலத்தில் இவர்கள் சற்றேனும் சலிப்பில்லாமல் ஒன்றித்துச் செல்லக்கூடிய முழுநீள திரைப்படைத்தை சர்வசாதாரணமாக தந்து சென்றுள்ளார்கள். உண்மையான சினிமா எதுவெனில்நாம்பணம்செலுத்தி 2 மணி நேரம் பார்க்கும் திரைப்படம் எம்மைத் திருப்திப்படுத்த வேண்டும். பணம் செலுத்தி உணவை சாப்பிட்டு திருப்தியடைவதைப் போல தான் இதுவும்.அந்த வகையில் எம்மை முழுமையாகத் திருப்தி படுத்தி தன்னிறைவு பெற வைத்துள்ளது 'புத்தி கெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படம்.

**-ஆதி ராஜாதித்தன்**

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# தென்னாபிரிக்காவின்......

இதனால்தான் தடுப்பூசி ஏற்றி வைரஸ் இவ்வாறு பிரதியெடுப்பதை (பரவலாகுவதை) தடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம். அவ்வாறு தடுப்பூசி செலுத்தாத பட்சத்தில் அவர்களை மையப்படுத்தி புதிய பிறழ்வுகள் (மாதிரிகள்) ஏற்பட சாத்தியமுண்டு. எனவே தடுப்பூசி ஏற்றாதவர்களால் இலங்கைக்கான தனித் திரிபுகள்கூட ஏற்படலாம். பூஸ்டர் டோஸ் ஏற்றாமல் இருக்கும் பட்சத்தில் ஏற்கனவே ஏற்றிய இரு திரிபுகளின் நோயெதிர்ப்புச் சக்தி குறைந்தால் அவர்கள்கூட இந்தப் பிறழ்வுகளுக்கு ஆட்படலாம். அதனால்தான் பூஸ்டரை ஏற்ற முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

**கே:** தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் அதை உறுதிப்படுத்தும் அட்டையை வைத்திருக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. அது இன்னும் சட்டமாக்கப்படவில்லை. ஆயினும் ஜனவரியில் இருந்து சட்டமாக்கப்படும் என்று துறைசார் அமைச்சர் தெரிவித்துள்ளார். இது எவ்வளவு தூரம் சாத்தியம்? தடுப்பூசியைக் கட்டாயமாக்காமல் அட்டையின் தேவைப்பாட்டை வலியுறுத்துவதால் என்ன பயன்?

**ப:** இந்தக் கேள்விக்கு இரண்டு விதமான பக்கங்களில் இருந்து நாம் சிந்திக்க வேண்டும். ஒன்று சட்ட ரீதியான பக்கம். இரண்டாவது மருத்துவத் துறைசார் பக்கம். சட்ட ரீதியான நகர்வுகள், அதன் சாத்தியப்பாடுகள் குறித்து எமக்குத் தெரியாவிடினும், மருத்துவத் துறைசார் பக்கமாகச் சிந்தித்தால் அவ்வாறான திட்டமொன்று அவசியம். ஏனெனில் தடுப்பூசிகள்தான் இந்தப் பெருந்தொற்றில் இருந்து எம்மைக் காக்கப்போகின்ற அரண்கள்.

### பெரும் கொத்தணிக்கு அதிக வாய்ப்புள்ளது!

**கே:** சித்திரைப் புத்தாண்டு இலங்கையில் மிகப்பெரும் கொரோனா அலையைத் தோற்றுவித்தது. 'புத்தாண்டுக் கொத்தணி' என்று குறிப்பிடும் அளவுக்கு தீவிரமானது இந்தப் பெருந்தொற்று. இப்படியிருக்கையில் மற்றொரு பண்டிக்கைக்காலமான இக்காலம் பிறிதொரு பேரலையை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டா?

**ப:** இந்தப் பண்டிகைக்காலத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்குரிய எந்தக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. மாகாணப் பயணத்தடைகள் விதிக்கப்படவில்லை. சித்திரைப் புத்தாண்டில் இருந்த அதே நிலைமைதான் தற்போதுமுள்ளது. இப்போதே ஆபத்து மிகையாகிவிட்டது. ஆண்டிறுதிக் கொண்டாட்டங்கள் நடக்கின்றன. வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடுகின்றார்கள். தொற்று அதிகரிக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் யாதும் உள்ளன. பொதுமக்கள் தம் பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்த வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதைப்போன்று தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும். தடுப்பூசி ஏற்றிக்கொண்டால், தடுப்பூசி ஏற்றிய மெத்தனப் போக்கில் நடந்துகொள்ளக் கூடாது. தடுப்பூசி ஒரு பிடிமானமே தவிர ஒட்டுமொத்தப் பாதுகாப்பும் அல்ல. கொரோனாவில் இருந்து விடுபடும் வரையில் சமூக இடைவெளி, மாஸ்க் அணிதல், கிருமி நீக்கத் திரவங்களைப் பயன்படுத்தல் போன்ற அடிப்படைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். எவ்வளவு தூரம் இந்த நடைமுறைகளை ஆத்மார்த்தமாகப் பின்பற்றுகின்றோமோ அவ்வளவுக்கு கூடிய விரைவில் இதிலிருந்து நாம் மீண்டு விடலாம். இதை உணர்ந்தவர்களாக அனைவரும் செயற்பட வேண்டும். அதைத்தான் சுகாதாரத் துறையினராகிய நாம் மக்களிடம் எதிர்பார்க்கின்றோம். மக்கள் எமக்குச் செய்யவேண்டிய - செய்யக்கூடிய பெரிய உதவியும் இதுவே.

# உள்ளூராட்சி...




முடியவில்லை.இது அதன் இறுதி விளைவாக சில சபைகளில் எதிர்த்தரப்பிடம் அதிகாரத்தை கொடுப்பதில்தான் முடிவடைந்திருக்கிறது.
மாகாணசபைத் தேர்தல் ,நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலைப் போலன்றி பிரதேச சபைகளுக்கான தேர்தல் எனப்படுவது உள்ளூர் யதார்த்தங்களை,உள்ளூர் உணர்வுகளை, அபிமானங்களை,ஏற்றத்தாழ்வுகளை பிரதிபலிப்பது.எனவே அங்கே பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்பொழுது பிரதேச உணர்வுகளும் அந்தப்பிரதேசத்தில் காணப்படும் சமூக வேறுபாடுகளும் சமூக ஏற்றத் தாழ்வுகளும் இனமத முரண்பாடுகளும் தீர்மானிக்கும் காரணிகளாக இருக்கும். இது விடயத்தில் தீர்க்கதரிசனம் மிக்க தந்திரோபாயமான அணுகுமுறைகள் தேவை. எத்தனை தமிழ்க் கட்சிகளிடம் அவ்வாறான அணுகுமுறைகள் இருந்தன? இருக்கின்றன?
சமூக ஏற்றத்தாழ்வுகளை, மத முரண்பாடுகளை மட்டுமல்ல பால் அசமத்துவத்தையும் தமிழ்த்தேசிய நோக்கு நிலையிலிருந்து அணுகுவதில் எத்தனை கட்சிகள் வெற்றிபெற்றுள்ளன? கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தில் நடந்த அரசியல் கலந்துரையாடல் ஒன்றில் மேடையிலும் பெண்கள் இருக்கவில்லை,பார்வையாளர்கள் மத்தியிலும் பெண்கள் இருக்கவில்லை.
பால் சமத்துவத்தைப் பேணும் விதத்தில் பெண் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் விடயத்திலும் பெரும்பாலான கட்சிகளிடம் நீண்டகால நோக்கிலான தயாரிப்புக்கள் இருக்கவில்லை. உள்ளூராட்சி மன்றங்களில் குறிப்பிட்ட விகிதம் பால் சமநிலை பேணப்பட வேண்டும் என்ற ஒரு சட்டரீதியான நிர்ப்பந்தம் ஏற்பட்ட பொழுது பெண் வேட்பாளர்களைத் தேடி எல்லாக் கட்சிகளும் ஊர்ஊராகத் திரிந்தன. ஏற்கனவே ஆண் வேட்பாளர்களுக்கு தட்டுப்பாடு. இந்நிலையில் பெண் வேட்பாளர்களை எங்கே கண்டுபிடிப்பது? இதனால் ஆட்பொலிவுக்கு பெண்களை தேடி கண்டுபிடித்து தேர்தலில் நிறுத்தினார்கள். அவர்களில் அநேகர் படிப்படியாக செதுக்கப்பட்ட உள்ளூர்த் தலைமைகள் அல்ல.
பெண் வேட்பாளர்கள் மட்டுமல்ல ஆண் வேட்பாளர்களின் நிலைமையும் அப்படித்தான். கிராம மட்ட உள்ளூர்த் தலைமைகளைச் செதுக்கி எடுப்பதற்குரிய பொருத்தமான அரசியல் தரிசனங்களும் பொறிமுறைகளும் எத்தனை கட்சிகளிடம் உண்டு?
கிராம மட்ட தலைமைத்துவம்தான் அடுத்தடுத்த கட்டங்களில் நகரத்துக்கும் மாவட்டத்துக்கும் மாகாண [illegible] மேல் [illegible] தலைமைத்துவத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஒரு கட்சியின் அத்திபாரத்தைப் பலப்படுத்துவதுதான்.
தமிழ்க் கட்சிகள் உள்ளூர்த் தலைவர்களை எந்த அடிப்படையில் கட்டி எழுப்புகின்றன ?அல்லது தெரிந்தெடுக்கின்றன என்று பார்த்தால் ஏற்கனவே தலைவர்களாக இருப்பவர்களைத்தான் பெரும்பாலான கட்சிகள் தெரிந்தெடுக்கின்றன.
ஏற்கனவே தலைவர்களாக இருப்பவர்கள் அந்தந்த ஊரின் உள்ளூர் உணர்வுகளையும் உள்ளூர் ஏற்றத்தாழ்வுகளையும் முரண்பாடுகளையும் பிரதிபலிக்கிறார்கள். அவர்கள் பின்னர் தெளிவூட்டப்பட்டு அரசியல் மயப்படுத்தப்பட்டு செதுக்கி எடுக்கப்படுவதில்லை என்பதைத்தான் பெரும்பாலான உள்ளூராட்சி சபை நிலைமைகள் நமக்கு உணர்த்துகின்றன.
ஒருபுறம் தேசமாகத் திரள்வதற்கு தடையாக உள்ள அக முரண்பாடுகள், ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறைகள். இன்னொருபுறம் கட்சிகளுக்கிடையேயும் ஒரே கூட்டுக்குள்ளேயயும் பிச்சல் பிடுங்கல்கள்.
தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்கள் ஒரு திரட்சியாக இல்லை என்பதைத்தான் அண்மைய வாரங்களில் உள்ளூராட்சி மன்ற நிலைவரங்கள் நமக்கு உணர்த்துகின்றனவா?
அமெரிக்காவையும் இந்தியாவையும் கையாள்வதற்கு வெளியுறவுக் கொள்கை வேண்டும் என்று பேசப்படும் ஒரு காலகட்டம் இது. ஆனால் உள்ளூரில் தமது சொந்த மக்களைத் திரட்டுவதற்கே கட்சிகளிடம் பலமான உள்விவகாரக் கொள்கைகள் இல்லை என்பதைத்தான் உள்ளூராட்சி சபைகள் உணத்துகின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனிந்தப் பலி?




○ மயூ

தமிழகத்தின் சேலம் மாநகரின், ஜாகிர் அம்மாபாளையத்தைச் சேர்ந்தவர் நவீன்குமார். கடந்த வாரம் முட்புதர் ஒன்றில் கடும் காயங்களுடன் மீட்கப்பட்ட நவீன்குமார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பயனின்றி இறந்து போனார்.

சூரமங்கலம் பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளை ஆரம்பித்தனர். விசாரணைகள் தொடரத் தொடர பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவர ஆரம்பித்தன.

நவீன்குமாரும், அவரது தாய் உமாதேவியும் தனி வீட்டில் வசித்தார்கள். உமாதேவி கணவரை விட்டுப் பிரிந்து விட்டார். நவீன்குமாரின் போக்கில் ஏற்பட்ட மாற்றம்தான் அவரின் உயிரைப் பறித்திருக்கின்றது.

கடந்த சில மாதங்களாகத்தான் நவீன்குமாரின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்திருக்கின்றன. அவர் தன்னைப் பெண்ணாக உணர ஆரம்பித்திருக்கிறார். அவரது நடை உடை பாவனைகள், ஆடை அலங்காரம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்திருக்கின்றன.

நவீன்குமாரின் தாய் உமாதேவிக்கு இது பெரும் அதிர்ச்சியாக இருந்துள்ளது. அவர் மகனைக் கண்டித்திருக்கின்றார். ஒரு கட்டத்தில் நவீன்குமார் வீட்டில் இருந்து மாயமானார்.

“வீட்டிலிருந்த தங்கள் மகன் காணாமல் போய்விட்டார் என்று கடந்த ஏழாம் மாதம் எமக்கு முறைப்பாடு கொடுத்தார்கள். நாங்கள் பெங்களூரில் நவீன்குமார் உள்ளார் என்று அறிந்து அவரை மீட்டு வந்தோம். அப்போது அவர் பெண்ணைப் போன்று அலங்காரம் செய்திருந்தார்” என்று கூறினார் சூரமங்கலத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி.

வீட்டில் இருந்து தப்பியோடிய நவீன்குமார் அதன் பின்னர் முழுதாகவே பெண்ணாக மாறியிருந்தார். தனது பெயரை அக்க்ஷிதா என்று மாற்றிக் கொண்டிருந்தார். மகனைக் கண்டிக்க மீண்டும் அது பொலிஸ் விவகாரமாகியிருக்கின்றது.

“ஏழாம் மாதம் நவீன்குமாரை நீதிமன்றத்தில் ஒப்படைத்தோம். அங்கு நவீன்குமார் தான் தன்னிஷ்டப்படி முடிவெடுக்கும் வயதெல்லையை அடைந்துவிட்டேன் என்றும், தனது விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் செல்வேன் என்றும் கூறியதை அடுத்து, நீதிமன்றமும் அவரை விடுவித்தது” என்றார் இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் சூரமங்கலம் பொலிஸ் அதிகாரி.

வீட்டில் கண்டிப்பு அதிகரிக்க வீட்டில் இருந்து புறப்பட்ட நவீன்குமார் என்கின்ற அக்க்ஷிதா, மீண்டும் பெங்களூர் சென்றுவிட்டார். கடந்த தீபாவளியின் போது வீட்டுக்குத் திரும்பிய அவர், வீட்டிலேயே தங்கியிருந்துள்ளார். மகனின் போக்கால் உமாதேவி கடும் கோபத்தில் இருந்திருக்கிறார். அக்கம் பக்கத்தாரும் அந்தக் கோபத்தை இன்னும் ஏற்றிவிட மகனை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்று தெரியாது கனன்று கொண்டிருந்துள்ளார் உமாதேவி.

இந்தநிலையில் வீதியோரங்களில் ஆண்களுடன் சுற்றுகின்றார் என்ற செய்தியும் உமாதேவிக்கு எட்டியுள்ளது. அவமானத்தையும், ஆத்திரத்தையும் தாங்க முடியாத உமாதேவி, அருகில் உள்ள உணவக உரிமையாளர் வெங்கேடேசனிடம் தனது மனப்பாரத்தை இறக்கியிருக்கிறார். “மகன் இவ்வாறு திரிவது சுத்தமாகப் பிடிக்கவில்லை. எவ்வாறு கண்டிப்பது என்று தெரியவில்லை. நீங்களாவது சொல்லிக் கண்டியுங்கள். வீட்டை விட்டு வெளியேறாதபடி ஏதாவது செய்யுங்கள்” என்று கூறியிருக்கிறார் உமாதேவி:

அப்போதுதான் வெங்கடேசன் விபரீத முடிவு ஒன்றை எடுத்திருக்கிறார். அதற்கு நவீன்குமாரின் தாயும் சம்மதித்திருக்கிறார். நவீன்குமாரின் காலை உடைத்து விட்டால் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்று தீர்மானித்த அவர், அதற்காக தனக்குத் தெரிந்த 3 பேரைத் துணைக்கு அழைத்திருக்கின்றார். அதற்குரிய நாளாகக் கடந்த திங்கட்கிழமையைத் தேர்ந்தெடுத்தார்கள். வீட்டுக்குள் புகுந்த அவர்கள், தூங்கிக் கொண்டிருந்த நவீன்குமார் மீது போர்வையை மூடி, காலில் கடுமையாகத் தாக்கியிருக்கின்றனர். அப்போது நவீன்குமாரும் அவர்களுடன் மல்லுக்கட்ட, தாக்குதல் பலமாகியிருக்கின்றது. நவீன்குமார் படுகாயமடைந்து, நினைவிழக்க, அதை எதிர்பார்க்காத அவர்கள் அடுத்த திட்டம் ஒன்றைத் தீட்டியிருக்கின்றனர்.

படுகாயமடைந்த நவீன்குமாரைக் கொண்டு சென்று புதர் ஒன்றுக்குள் வீசிவிட்டுப் பின்னர் அவர்களே மருத்துவமனைக்குக் கொண்டோடியிருக்கின்றனர். ஆனால் நவீன்குமார் இறந்துவிட இப்போது தாய் உட்பட 6 பேர் மீது கொலை வழக்குப் பதிவாகியிருக்கின்றது.

மகன் திருநங்கையாக மாறியமைக்காக, தாயே தன் பிள்ளையை ஆள்களை வைத்து உயிரிழக்கும் வகையில் தாக்கியமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆணாகப் பிறந்த சிலருக்கு பதின்ம வயதில்



மனதில் தான் ஒரு பெண் என்ற எண்ணம் தோன்றும் .அவ்வாறானவை பாலின மாற்ற அடையாளங்களால் ஏற்படும் மனக் குழப்பங்கள் என்று மனநல மருத்துவத்தில் குறிப்பிடுவார்கள். இது ஒரு ஹோர்மோன் பிரச்சினையே என்கிறார் தமிழகத்தைச் சேர்ந்த மனநல மருத்துவர் மோகன் வெங்கடாஜலபதி.

'பாதிக்கப்பட்டவர்களை அப்படியே விட்டுவிட்டால் அவர்கள் திருநங்கைகளாக மாற வாய்ப்புகள் உள்ளன. தங்களுடைய பிள்ளைகளிடம் இதுபோல மாற்றத்தை பெற்றோர் கண்டால் உடனே கோபப்படக்கூடாது. உடனடியாக அவர்கள் ஒரு மனநல மருத்துவரை அணுக வேண்டும். இது ஒரு நோயல்ல. மனக்குழப்பம் அவர்களைப் பழைய நிலைமைக்கு மாற்ற முடியும்' என்று கூறுகிறார் மோகன் வெங்கடாஜலபதி. அவ்வாறில்லையே அந்தப் பிள்ளை பெண்ணாகவே மாறி வாழ்ந்துவிட்டுப் போகட்டுமே? குடும்ப மானம் என்ற போலி அடையாளத்துக்காக உயிர்ப் பலி வரை போவதை விட, அந்தப் பிள்ளையை வாழவைப்பதால் வரும் மகிழ்வு பேரானந்தமல்லவா? ஏன் இதை எவரும் உணர்வதில்லை?



# ஐ.பி.எல்லில் சென்னை எல்.பி.எல்லில் ‘ஜப்னா’

விறுவிறுப்பாக இடம்பெற்ற எல்.பி.எல். தொடரில் மீண்டும் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது 'ஜப்னா கிங்ஸ்'.

அம்பாந்தோட்டையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் காலியை வீழ்த்தி கிண்ணத்தை மீண்டும் ஜப்னா கிங்ஸ் தனதாக்கியுள்ளது. இந்த வருடம் நடைபெற்ற தொடரில் காலி அணியை நான்கு தடவைகள் ஜப்னா கிங்ஸ் எதிர்கொண்டிருந்தது. அதில் இரண்டு லீக் ஆட்டங்களிலும், தகுதியாட்டத்திலும் ஜப்னா கிங்ஸ் காலியிடம் தோற்றிருந்தது. அதற்கெல்லாம் சேர்த்து இறுதியாட்டத்தில் தக்க பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது.

லங்கா பிறீமியர் லீக் தொடரைப் பொறுத்த வரையில் ஜப்னா கிங்ஸின் ஆதிக்கம் தவிர்க்க முடியாததாகவே இருந்து வந்துள்ளது. கடந்த வருடம் இலகுவாகச் சம்பியனாகியிருந்த அந்த அணி, இம்முறையும் கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு அவ்வளவு சிரமப்பட்டதாகத் தெரியவில்லை.

ஐ.பி.எல். தொடரில்-சென்னை சுப்பர் கிங்ஸ் தவிர்க்க முடியாத சக்தியாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. சென்னை அணியை நீக்கிவிட்டு ஐ.பி.எல்லின் கதைகளை எழுதிவிட முடியாது. அதேபோன்றதொரு நிலைக்கு எல்.பி.எல். தொடரில் 'ஜப்னா கிங்ஸ்' உருவெடுத்துள்ளதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. கூடுதல் தகவல் என்னவென்றால் இரண்டும் தமிழ் நிலப்பரப்புக்களின் பிரதிநிதித்துவ அணிகள்.

○ ஆர்.லயனல்

விளையாட்டு

# நியூஸிலாந்தின் வெற்றி யாதெனில்...



பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களுக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நியூஸிலாந்து அணியில் இருந்து வரலாற்றுச் சாதனையாளரான அஜாஸ் பட்டேல் நீக்கப்பட்டிருக்கின்றார். இது தற்போது வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தாலும் நியூஸிலாந்தின் அணித்தெரிவானது சரியானது என்றே கூற வேண்டும்.

அஜாஸ் பட்டேல் ஒரு சுழற்பந்து வீச்சாளர். இந்தியாவுக்கு ஏதிராக இந்தியாவில் நடைபெற்ற தொடருக்கான நியூஸிலாந்து அணியில் அவர் இடம்பிடித்திருந்தார். இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை. இதனால் அஜாஸ் பட்டேலின் வருகையின் அனுகூலத்தை கனகச்சிதமாக அறுவடை செய்தது நியூஸிலாந்து. இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் அனைத்து இலக்குகளையும் கைப்பற்றி வரலாற்றுச் சாதனையாளராக அஜாஸ் உருவெடுத்தார். இதனால் அவர் மீது தாராளமாக ஊடக வெளிச்சம் பாய்ச்சப்பட்டிருந்தது. தற்போது பங்களாதேஷுக்கு எதிரான தொடருக்கான அணியில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார். இந்தியத் தொடரில் அஜாஸின் பங்களிப்பு அளப்பெரியதாக இருந்த நிலையில் ஏன் பங்களாதேஷ் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அங்குதான் தனித்துத் தெரிகின்றது நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழு. நியூஸிலாந்து கிரிக்கெட் தெரிவுக்குழு தனிநபரின் பெறுபேறுகளை வைத்து அணியைக் கட்டமைப்பதில்லை. குறிப்பாக பந்துவீச்சாளர்களுக்கான கட்டமைப்புக்களை மேற்கொள்ளும்போது ஆடுகளத்தின் தன்மையையும் கவனத்திற்கொள்ளும். எப்படித்தான் பெரிய பங்களிப்பை வழங்கினாலும் ஆடுகளம் அந்த வீரருக்குச் சாதகமாக இல்லையென்றால் அணியில் இடமில்லை என்பதுதான் நியூஸிலாந்துத் தெரிவுக்குழுவின் கொள்கை. அதுதான் அஜாஸின் விடயத்திலும் தற்போது நடந்துள்ளது.

இந்திய அணி சொந்த மண்ணில் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்திய போதிலும் அந்நியச் சுற்றுப் பயணத்தில் அதேயளவு ஆதிக்கத்தை வெளிப்படுத்துவது குதிரைக் கொம்பாகவே இருந்து வருகின்றது. குறிப்பாக பந்துவீச்சு வரிசையில் இந்தப் பலவீனம் தனித்துத் தெரியும். இதற்குக் காரணம் நியூஸிலாந்துத் தெரிவுக்குழு கொண்டிருக்கும் மனோநிலை இந்தியத் தெரிவாளர்களிடம் இல்லாமைதான். இந்திய ஆடுகளங்களின் செல்வாக்கு அந்நிய ஆடுகளங்களிலும் அந்தந்த வீரர்களுக்கு இருக்கும் என்று அது நம்புகின்றது. இதனால்தான் மிகப்பலமான அணியைக் கொண்டிருந்தாலும் சுற்றுப் பயணங்கள் என்று வரும்போது சறுக்கல்கள் இருக்கச் செய்கின்றன. நியூஸிலாந்துத் தெரிவுக்குழு செய்வது சரி என்பதை இந்தியத் தெரிவுக்குழுவை வைத்தே கூறிவிடலாம். காலுக்கு ஏற்பதான் செருப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். செருப்புக்கு ஏற்ப கால்களை வெட்டிக்கொள்ளக்கூடாது. நியூஸிலாந்து இதில் முதலாவது ரகம். இந்தியா இரண்டாவது ரகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்ட கிருமி

தொல்புரம் சி.கதிர்காமநாதன்




> இப்போது நாம் இயல் பாகச் செயற்படத் தொடங்கிவிட்டோம். சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறுபவர்கள் மிகக் குறைவு, சிகிச்சை முறையில் மாற்றங்கள் வந்துவிட்டன். இருந்தாலும் தூரத்தில் இந்நோய் பற்றி அவலச் சத்தம், அபாய ஒலி கேட்கத் தொடங்கிவிட்டது

மறுபடியும் சமயப் பெரியவர்கள், கல்விமான்கள், மருத்துவர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகை நண்பர்கள், தாம் சார்ந்த ஊடகங்கள் வழியாக கொரோனாவுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள்.

- **விழிப்பாக இருங்கள்**
- **கவனமாக இருங்கள்**
- **சமூக இடைவெளியைக் கடைப்பிடியுங்கள்**
- **கைகளைச் சவக்காரமிட்டு அடிக்கடி கழுவுங்கள்**
- **முகக் கவசத்தை அணியுங்கள்**
- **கூட்டங்களைத் தவிருங்கள் (இலக்கிய நிகழ்வுகளை அல்ல)**

காரணம் இந்த நோய் உயிராபத்தை ஏற்படுத்தும். என்ன செய்வது? நோயும் தணிந்தபாடுமில்லை.
நாமும் பெரிதாக அக்கறை கொள்ளவுமில்லை. எத்தனைவிதமான செய்திகள் காதில் வந்து வீழ்ந்து கொண்டு இருக்கின்றன.

**தொற்றாளர்கள் எண்ணிக்கை**
**மரணிப்போர் எண்ணிக்கை**
**சிகிச்சை நிலையங்களில் இருப்போர்**
**தடுப்பூசி பெறுவோர்**
**சிகிச்சை முடிந்து வெளியேறுவோர்**

இப்படிக் கொரோனா பற்றிய செய்திகளுக்கு குறைவேயில்லை. காலம் ஓடிக் கொண்டு இருக்கின்றது. நோயின் தீவிரம் இன்னமும் குறைந்தபாடில்லை. அது தன்னுடைய உருவத்தை மாற்றி வித்தியாசமான வடிவங்களில் வெளி வரத் தொடங்கியுள்ளது. இப்போது புதிதாக ஒமிக்ரோன் என்ற புதிய வடிவத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள்.
நோயின் தாக்கம், பரவல் அதிகரிக்க மரணிப்போர் தொகையும் அதிகரிக்கவே செய்யும்.
முதலில் பெரும்பாலும் 60 வயதை எட்டியவர்களுக்கே இந்நோய் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சொன்னாலும் அது நடுத்தர வயதினரையும் சிறுவர்களையும்விட்டுவைக்கவில்லை. நோய்த்தொற்றாளர்களை இனம்கண்டு சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி கொண்டு இருந்தார்கள்.
ஏன் இந்த நோய் பற்றி மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளாத நிலை காணப்படுகிறது?
பாவம் எனக்குத் தெரிந்த நண்பரொருவர் ஓட்டோ வைத்து வாழ்க்கையை நடத்துகிறார். கொரோனா தீவிரமடைய அவர் தொழிலுக்குச் செல்லவில்லை. வீட்டில் அவரது சிறு பிள்ளைகளும், மனைவியும் 'இனிமேல் ஓட்டோ ஓட வேண்டாம்' என்று சொல்லிவிட்டார்கள். சிறு சிறு வியாபாரம் செய்து வயிற்றுப் பசியைப் போக்கினாஅர். ஒருநாள் திடீரென அவரைக் கொரோனாச் சிகிச்சை நிலையத்துக்குக் கொண்டு போய்விட்டார்கள். எங்களுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. காய்ச்சல் என்று அறிகுறி தெரிய அதற்கு மருந்தெடுக்கப் போய் கொரோனாத் தொற்று கண்டுபிடிக்கப் பட்டது.
பின் மற்றைய விடயங்கள் வரிசைப்படி நடந்தேறின.

'எப்படி வந்தது கொரோனா அவருக்கு?'
அதுதான் நோய். எங்கிருந்து வந்து அவருக்குத் தொற்றியது என்பதை அறிவது இலேசான காரியமல்ல. ஒருவர் தனக்கு வந்த நோய் பற்றி தெரியாமலே பலரோடு பழகி இருப்பார். இதன் காரணமாகத்தான் மருத்துவத் துறையினர் எச்சரிக்கைகளைப் பொதுமக்களுக்கு விடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.
கண்ணுக்குத் தெரியாத எதிரியோடு மோதும் யுத்தம்.



ஆனால் எங்களுக்கு நோய் பற்றிய பயமில்லையே. அதுவும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் நபர்கள் அவர்கள் சொல்லும் கதைகள் அனுப்பும் வீடியோ படங்கள், செய்திகள், கொரோனா நோயைக் கேலிக் கூத்தாக பார்க்கும் பார்வை கொரோனாவுக்கே கோபத்தை உண்டுபண்ணும் அளவுக்கு வந்துவிட்டது.
"உது ஒருவருத்தமாம். நல்லாப் பேய்க் காட்டுறாங்கள். "
"என்ன வருத்தமோ தெரியாது, சிகிச்சைக்குக் கொண்டு போய் என்ன செய்யிறாங்கள்?
"நல்ல கட்டில், மெத்தை, சாப்பாடு, விளையாட்டு ஜாலியாக போகுது. எங்கட பெடியளும் சேர்ந்தால், நாங்கள் குரூப்பாய் நின்று செல்பி எடுத்து போடுறம். ஏதோ பெரிய ஹொட்டலில் விடுமுறைக்கு நிண்ட மாதிரி கிடக்கு. 14 நாள் முடிய வீட்டை கொண்டு வந்து விட்டிட்டு பேசுறாங்கள்"
" ஒரு மருந்து குளிசை ஒண்டுமில்லை. சாப்பாடும் சுடுதண்ணியும் ரசமும் குடுத்து விடுறாங்கள். உதுக்கேன் அங்க போய் நிக்க வேணும்? இங்க வீட்டில சொன்னால் அதுகள் செய்து தந்திடுங்கள். சும்மா அங்க போய் மருந்தொண்டும் இல்லாமல் கடுப்பாயெல்லோ கிடக்கு."
"உலகத்தில பெரீய்யயய நோயெண்டு சொல்லுகினம். ஆனால் மருந்தில்லையாம்."
அடாகதைஇப்படியெல்லே போட்டுது. நோயெண்டால் வார்ட்டில படுத்திட்டு டொக்டர் வருவார். மருந்து குளிசை எழுதுவார், கூடுதலாக மூண்டு நேரமும் குளிசை போடுவம். துண்டு வெட்டி வீட்டை விடேக்க மருந்துக் குளிசைகள் சரை சரையாக எழுதிக் கொடுப்பினம். நோய் இருந்தாலும் அப்படி வாங்கிக் கொண்டு போவது எவ்வளவு சந்தோசம், பெருமை.
"வார்ட்டில நல்லாப் பாத்தார்கள். நிறைய குளிசையெல்லாம் தந்தார்கள்" இப்படி பெரியாஸ்பத்திரியில குளிசைகள் வாங்கிய பரம்பரை நாங்கள்.
"பாத்தியளே கன குளிசைகள் தந்து இருக்கினம் எத்தனை விதமான கலரில இருக்கு"
வாங்கிய குளிசைகளை வீட்ட பாக்க வாற ஆக்களிட்ட காட்டி சந்தோசப் பட்டது எங்கள் இனம்.
எங்க போனாலும் 'சும்மா' வந்தால் எங்களுக்குப் பிடிக்காது.
கலியாண வீடுபோய் திரும்பி வரேக்க வாசலில 'எங்களுக்கு' கையில கவர் கொடுக்கிறது உதுக்குத்தான்.
இப்போது நாம் இயல்பாகச் செயற்படத் தொடங்கிவிட்டோம். சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறுபவர்கள் மிகக் குறைவு, சிகிச்சை முறையில் மாற்றங்கள் வந்துவிட்டன். இருந்தாலும் தூரத்தில் இந்நோய் பற்றி அவலச் சத்தம், அபாய ஒலி கேட்கத் தொடங்கிவிட்டது. மறுபடியும் பயணித்தல் ஒத்திவைக்கப்படலாம்.
மக்கள் கொரோனா ஒரு நோய் என ஏற்றுக் கொள்ள வேண்டுமானால் மறுபடியும் சிகிச்சைக்குத் தொற்றார்கள் வரவு அதிகரித்தால்... அவர்கள் வந்து வெளியேறும்போது கலர்கலரான அத்தனை குளிசைகளோடு அனுப்பி வைக்கவேண்டும் போலும். இல்லாவிட்டால் கொரோனாவை ஒரு நோயாகவே எம்மவர்கள் மதிக்கமாட்டார்கள். உலகமே நடுங்கும் கொரோனாவுக்கு எங்கள் நாட்டில் இப்படி ஒரு அவமானம் தேவையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீட்டுத் திண்ணை

தி.செல்வமனோகரன்

**“குறும் தொடைநெடும் படிக்கால் கொடும் திண்ணை” பட்டினப்பாலை.**

தமிழர் வாழ்வியலோடும் வீடு கட்டுதல் செயற்பாட்டோடும் பின்னிப் பிணைந்த ஒன்றாகத் திண்ணை இருந்து வருகிறது. தனிமனித அரசியற் பெறுமானம் திண்ணைக்கு உண்டு.

சாதாரண மண்குடிசையில் வாயிலுக்கு அருகே வெளிப்புறத்தில் இருபக்கமும் திண்ணைகள் அமைக்கும் பழக்கம் இருந்து வந்தது. இது வசதி கருதி அடுப்படியின் வெளிப் புறத்திலும் அமைக்கப்பட்டது. இது மண்குடிசைகளில் மண்ணால் அமைக்கப்பட்டு சாணத்தால் மெழுகப்பட்டது. பின்பு பொருளாதார அந்தஸ்துக்கு ஏற்ப இருவறை, மூவறை.வீடுகள் உருவானபோது திண்ணையும் பெருத்தது. வீட்டுக் கட்டுமானத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப திண்ணையும் வளர்ந்தது. சுண்ணாம்புக்கல் வீடுகள் உருவாகத் தொடங்கியபோது திண்ணை வெளித் திண்ணை, உட்பக்கத்திண்ணை என்பன உருவாகின. வெளித்திண்ணை





என்பதும் வீட்டின் முன்பக்கத்திலும், வீட்டின் பின்பக்கத்திலுமானதாக அமைக்கப்பட்டது.

மண்குடிசை வீடுகளில் வெறும் மூன்றடி அகலத்திலேயே திண்ணைகள் அமைக்கப்பட்டன. வீட்டின் அளவு பெருகப் பெருக திண்ணையின் நீளமும் அகலமும் பெருத்தது. வீட்டுக் கூரையை தாங்கும் தூண்கள் திண்ணைகளில் அமைக்கப்பட்டன. அவை பெரும்பாலும் எட்டு அல்லதுபத்து அடி இடைவெளிகளைக் கொண்டவையாக இருந்தன. திண்ணையின் அகலமும் பத்தடி அளவுவரை பெருத்தது. இது திறந்த விறாந்தையை ஒத்த அளவு காணப்பட்டது. உயரம் பெரும்பாலும் ஒன்று அல்லது இரண்டு அடிக்கு உட்பட்டதாக இருந்தது. அறுபதுவரை கட்டப்பட்ட சிமெந்துக் கல் வீடுகளிலும் திண்ணை அமைக்கும் வழக்கம் பெரும்பாலும் இருந்துவந்தது.

வெளித் திண்ணைகள் பெரும்பாலும் யாவர்க்குமான பொழுதுபோக்கிடமாக இருந்து வந்துள்ளன. தொலைக்காட்சி எம்மை முழுமையாக ஆக்கிரமித்து வீட்டுக்குள் முடக்கிய காலம் வரை திண்ணையின் ஆட்சி காணப்பட்டது. சிறுவர்கள் பல்லாங்குழி, தாயம், ஆடுபுலியாட்டம், அடித்துப்பிடித்து விளையாடுதல் உள்ளிட்ட பல்வேறு உள்ளக விளையாட்டுக்களை விளையாடும் இடமாக திண்ணை காணப்பட்டது.

பாட்டி பாக்கை இடித்து உண்ணுவதோடு ஊர்க்கதைகளையும் சேர்த்து மெல்லும் இடமாக அது இருந்தது. சமையலை முடித்து மதிய உணவு உண்ட பின் வீட்டுப் பெண்களும் அயற் பெண்களும் கூடியிருந்து ஊரின் விடுப்பு விண்ணாரங்களை அசைபோடும் இடம் அதுவே. அதன் பின் வீட்டுப் பெரியவர்கள் கூடியிருந்துசுருட்டுப் புகைத்தல், சீட்டாடுதல், ஊர்க்கதை பேசுதல் என மனிதருக்காக ஓய்வு ஒழிவின்றி திண்ணை உழைத்தது. வீட்டில் பொழுது போகாத மனிதர்கள் வீட்டு வெளித் திண்ணையில் அமர்ந்திருந்து பாதையால் போய் வருபவர்களை மறித்து உரையாடுவர். ஊர்ப்புதினங்களை அலசுவர்.

> **தமிழர் பாரம்பரியம் காணாமல் போனது மட்டுமல்லாமல் எம்மிடமிருந்து மனிதாபிமானமும் காணாமல் போய்விட்டது. எம்மிடம் எஞ்சியிருப்பது அண்ணாந்து பார்க்கும் பெருஞ்சுவர் போன்ற 'கேற்றுகளும்' அவற்றில் தொங்கும் “நாய் கடிக்கும் கவனம்” எனும் வாசகமும் தான்.**

திண்ணையில் பெரும்பாலும் செம்பும் தண்ணீரும் காணப்படும். நடந்தோ, வண்டியிலோ களைத்து வரும் சாமிமார், பரதேசிகள், பண்டாரங்கள், உறவினர்கள், வழிப்போக்கர்களுக்கு தாகம் தீர்க்கவே அது அங்கே வைக்கப்பட்டது. வழிப்போக்கர்கள், வியாபாரிகள், தம் தலைச்சுமையை இறக்கி வைத்து இளைப்பாறினர். அதற்காக சுமைதாங்கி திண்ணைக்கரு கில் அமைக்கப்பட்டிருந்தது. சுமைதாங்கி ஆள் உயரத்திலிருக்கும். சுமையை வேறொரு ஆளின் உதவியின்றி இறக்கவும் மீளத் தலைமீது வைக்கவும் உதவியாக அது அமைக்கப்பட்டிருந்தது. திண்ணையிலிருந்து சற்று விலகி கல்லாலான நீர்த்தொட்டியும் ஆவுரோஞ்சிக் கல்லும் அமைக்கப்பட்டன. இது கால்நடைகளுக்கானது. தமிழர் பாரம்பரியத்தில் ஜீவகாருண்யத்தின் அடையாளங்கள் இவை.

வீட்டாருடன் வியாபாரம் பேசுமிடமாக, கிளிஜோதிடம், கைரேகை ஜோதிடம், குறிசொல்லல் முதலானவை நிகழ திண்ணை இடம் கொடுத்தது. வெயிலுக்கும் மழைக்கும் வழிப்போக்கர் ஒதுங்க இடம் கொடுத்தது. வீட்டுக்கு வந்த விருந்தினருக்கு உட்திண்ணை இருப்பின் உட்திண்ணையும் அவ்வாறு இல்லாதுவிடின் வெளித்திண்ணையும் இருக்க இடமாகவும், உபசாரம் செய்யும் இடமாகவும் இருந்தது. அறிமுகம் இல்லாதவர்க்கு அல்லது வீட்டினுள் அழைத்துச் செல்லமுடியாதவர்க்கு வெளித்திண்ணை இடமளித்தது. வழிப்போக்கரும் வீட்டிலுள்ளவர்களும் தூங்கும் இடமாகவும் இது காணப்பட்டது.

வீட்டிலுள்ளவர்கள் உணவு உண்ணும் இடமாவும், ஓய்வாக அமரும் இடமாகவும், தூங்கும் இடமாகவும், வீட்டில் சண்டை பிடித்த பின் ஒதுங்கும் இடமாகவும் இது இருந்தது. தோய்த்த ஆடைகள் இங்கு காயவிடப்பட்டன. மாங்காய், மிளகாய், ஊறுகாய், பாவற்காய் உள்ளிட்ட வத்தல்கள் காயவிடப்பட்டன. நெல் உள்ளிட்ட தானியங்கள், புளி முதலானவை காயவிடப்பட்டன. உட்திண்ணையில் நெல்மூட்டைகள் அடுக்கப்பட்டன. ஊர்ப்பெரியவர்களின் வீட்டுத் திண்ணை சண்டைச் சச்சரவுகளைத் தீர்க்கும் இடமாகவும் நீதி நியாயம் கதைக்கும் இடமாகவும் காணப்பட்டது. படித்தோ வீட்டுத் திண்ணை ஏனையோர்க்கு கடிதம் எழுதுதல்,பத்திரம் எழுதுதல், அறிவுரை வழங்குதல் முதலான இடமாக இருந்தது. சமயவியல் தளத்தில் காலனித்துவ கால வாழ்வில் புராணப்படிப்பு கள், பஜனைகள், கதாகாலேட்சபங்கள், நிகழும் இடங்களாகவும் அரசியல், ஊர்த் திருவிழாக்கள் உள்ளிட்ட முக்கிய முடிவுகளை எடுக்கும் இடங்களாகவும் இவை இருந்தன.

சுதேச மருத்துவர்கள் மருத்துவம் பார்க் கும் இடமாகவும் இவை இருந்தன. ரேடியோ, ஊர்களில் ஆங்காங்கே சிலரிடம் மட்டும் இருந்த போது ஊரே கூடியிருந்து அதனை கேட்குமிடமாக திண்ணையும் அதன் முன் இருந்த வெளியும் அமைந்தன. காலனித்துவ காலத்தில் சுதேச மக்களின் கல்வி பாதிக்கப்பட்டபோது அதனை மீட்டெடுக்கவும் தாய்மொழி மற்றும் தன்தன் சமயக் கல்வியை வளர்க்கவும் சுதேச பண்பாட்டுக் கோலங்களை வளர்க்கவும் உதவியவை திண்ணைப் பள்ளிக்கூடங்களே. திண்ணைக் கல்வி குருகுலக் கல்விக்கு சமமானதாகவும் அறிவுடை மக்களை உருவாக்கியதுமான பெருவரலாற்றுக் கடமையைச் செய்திருக்கிறது. ஆசிரியர் வீட்டுத் திண்ணைகள் அறியாத பாடம் இல்லை. ஆசிரியர்களுக்கான சமூக அந்தஸ்தை அவர்களது வீட்டுத் திண்ணைகள் பெற்றுத் தந்தன. ஊர்க்குழந்தைகளின் அறிவு விருத்திக்கு அவை பதியங்களாக அமைந்தன. வீட்டின் உள்ளக அரசியலை அதிகாரத்தை அண்ணை எப்பபோவான் திண்ணை காலியாகும் என்ற பழமொழி உணர்த்தி நிற்கின்றது. இது நாட்டின் அரசியலை,அதிகார மையவாதத்தை வெளிப்படுத்த இன்றுவரை உதவும் பழமொழி.

அதேவேளை திடீரென ஒருவருக்குக் கிடைக்கும் அதிர்ஷ்டத்தை 'திண்ணையில் கிடந்தவனுக்கு திடுக்கின்னு வந்திச்சாம் வாழ்க்கை' எனும் பழமொழி உணர்த்தி நிற்கின்றது. சாய்வு திண்ணை, ஒட்டுத்திண்ணை, பெரியதிண்ணை, சிறிய திண்ணை எனப் பலதிண்ணை வகைகள் காணப்படுகின்றன. இவை தமிழர் வாழ்வில் திண்ணை எவ்வெவ் வழிகளில் பயன்படுத்தப்பட்டது என்பதைப் பதிவு செய்கின்றன. எதிரெதிர்த் திண்ணைகள் பெரியார்களின் உரையாடும் களமாகவும் வக்கணைப் பேச்சுக்கள், நிறைந்ததாக வும் அமைய, வீட்டு இளசுகளுக்கோ காதல் செய்யும் களங்களாக அமைந்திருந்தன. ஒருகட்டத்தில் திண்ணைகள் சிறு அடையாளங்களாக குடிசைக் கைத்தொழில் நிலையங்களாக,தையல் நிலையங்களாக, சாப்பாட்டுக் கடைகளாக மெல்ல மெல்லப் பரிணமித்தன. வாழ்வியலின் தேவை இதனைத் தவிர்க்க முடியாததாக மாற்றியது. வீட்டுவசதி, பாதுகாப்பு, இரகசியத்தன்மை, பொருளாதார மேம்பாடு என்பன வீடுகளை காணிக்குள் அமைக்கும் போக்கை உருவாக்கின. காணி வேலிகளால் நிர்மாணிக் கப்பட்டது. வாயில் படலை உடையதாயிற்று. மனிதர் தம் வசதி வாய்ப்பைக் காட்டவும் மற்றவர்க்கு உதவவும் படலைகளைக் கூரையின் கீழ் அமைத்தனர். அருகே அருகே திண்ணைகளும் சுமைதாங்கியும் கால்நடைகளுக்கான கற்தொட்டியும் ஆவுரோஞ்சியும் அமைக்கப்பட்டன. நவீன வாழ்வில் அவை இன்று காணாமல் போயின. அருங்காட்சிப் பொருளாயின. வீட்டுடன் இணைந்த திண்ணைகளில் சாதி பெருமளவு உறைந்திருந்தாலும் படலைத் திண்ணைகள் விரும்பியோ விரும்பாமலோ பெருமளவு சாதி நீக்கம் செய்யப்பட்டவையாகவே இருந்தன. யாராயினும் தங்கிச் செல்லும் இடமாக இருந்தன. தமிழர் பாரம்பரியம் காணாமல் போனது மட்டுமல்லாமல் எம்மிடமிருந்து மனிதாபிமானமும் காணாமல் போய்விட்டது. எம்மிடம் எஞ்சியிருப்பது அண்ணாந்து பார்க்கும் பெருஞ்சுவர் போன்ற 'கேற்றுகளும்' அவற்றில் தொங்கும் “நாய் கடிக்கும் கவனம்” எனும் வாசகமும் தான்.



அற்றைத் திங்கள் 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ‘சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்’

## சிட்டுக்குருவிகளின் சிறகடிப்பு

○ உடுவில் அரவிந்தன்

நூல் அறிமுகம்



பள்ளிப்பருவமென்பது எங்களுக்குக் கிடைக்கின்ற அற்புதமான வரம். அது கற்றலுக்கும் கலகலப்புக்கும் உரியது. அந்தப் பருவத்தை மாணவர்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். எங்களுடைய காலத்தில் கல்விச்செயற்பாடுகளுக்கப்பால் கதைப்புத்தகங்கள், கலையாக்கப்போட்டிகள், கையெழுத்துச் சஞ்சிகைகளென்று களைகட்டியிருக்கும். சிலர் வாசிப்பதன்மூலம் அறிந்தவற்றைத் தங்களுடைய படைப்புமொழியில் உருவாக்குவதற்கு முயற்சிப்பார்கள். இவ்வாறு படைப்பாற்றல்களை வெளிப்படுத்திய பலரும் கல்வியில் உயர்ந்தவர்களாகவும் வெவ்வேறு துறைகளில் திறமைமிக்கவர்களாகவும் தங்களை நிரூபித்திருக்கிறார்கள்.

‘சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்’ என்ற தொகுப்பு நூல் ஜீவநதியின் 201ஆவது வெளியீடாக வந்துள்ளது. இந்தத் தொகுப்பில் மு.கோகனன், க.கைலாஷ், மு.மேதினிகா, த.அக்ஷிகா, வ.கஜானா, ம.கனியா, ஜெ.ஜெயசுவேதா, உ.சாய்தனியா, ஜெ.லிவியானா ஆகிய ஒன்பது மாணவர்கள் எழுதிய நாற்பது குட்டிக் கதைகள் உள்ளன. நூலின் தொகுப்பாசிரியர்களாக மு.கோகனன், மு.மேதினிகா ஆகியோரும் பதிப்புரிமையாளராக உ.சாய்தனியாவும் விளங்குகிறார்கள். த.அக்ஷிகாவின் கைவண்ணத்தில் அட்டைப்படமும் உள்ளோவியங்களும் பொருத்தமாக மிளிர்கின்றன.

பொதுவாகவே, குழந்தைகளுக்கான கதைகளும் பாடல்களும் முதிர்படைப்பாளிகளால் எழுதப்பட்டு வெளிவந்திருக்கின்றன. ஆனால், சிறுவர் எழுதிய கதைகள் அவர்களாலேயே தொகுக்கப்பட்டுத் தமிழில் வந்ததில்லையென்றே நினைக்கிறேன். அதனால் இந்தத்தொகுப்பு தனித்துவமானது. இலக்கிய வரலாற்றில் நிச்சயமாக இடம்பெறக்கூடியது. இந்தப் படைப்பாளிகளை ஊக்கப்படுத்தும் ஆசிரியர்களும் பெற்றோரும் போற்றுதலுக்குரியவர்கள்.

மேலும், இவ்வகையான கதைகள் எல்லோராலும் இரசிக்கப்படக்கூடியவை. பெரும்பாலான கதைகளில் பறவைகளும் விலங்குகளும் பாத்திரங்களாக வருகின்றன. அவை தங்களுக்குள் உரையாடுகின்றன. கதைகளின்முடிவில் அறம்சார்ந்த கருத்தொன்று மென்மையாக முன்வைக்கப்படுகின்றது அல்லது வாசகர்களால் உணரப்படுகிறது.

பஞ்சதந்திரக்கதைகள், ஈசாப் நீதிக்கதைகளென்று வாசித்த காலமிருந்தது. நாங்கள் ஆறேழு வயதுகளில் அந்த உலகத்தினுள் அமிழ்ந்துகிடந்தோம். அத்தகைய கதைகள் குறியீட்டுப்பாங்கானவை. அவை எமக்கு உணர்த்துகின்ற சேதிகள் ஏராளம். அவற்றில் வருகின்ற நல்ல பிராணிகள் எங்களுக்கு நெருக்கமான தோழர்கள். தீயபிராணிகள் எங்களுக்கும் எதிரிகள். அவற்றிலுள்ள ஒவ்வொரு பாத்திரத்தையும் நாங்கள் எங்களுடனும் இன்னும் பலருடனும் பொருத்திப் பார்ப்போம். எங்களிடமிருந்த எதிர்மறைக் குணங்களைத் திருத்திக்கொள்வோம். குழந்தைப் பருவத்தில் அவ்வாறான மனநிலைக்கூடாகவே மானிட விழுமியங்களை ஓரளவுக்கேனும் வளர்த்துக்கொள்வது எமக்குச் சாத்தியமாயிருந்தது. அவை மனதுக்கு நெருக்கமான கதைகளென்பதால் எப்போதும் கொண்டாடப்படுகின்றன.

இந்தத்தொகுப்பிலுள்ள நாற்பது கதைகளில் வகைமாதிரிக்கு ஒவ்வொன்றை எடுத்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். அது, குறித்த முகிழ்நிலைப் படைப்பாளிகளின் ஆக்கச்சிறப்புகளை ஓரளவுக்கு அடையாளப்படுத்துவதாக அமையும்.

மு.கோகனனின் ‘ஆபத்து உதவியும் உறவின் ஆபத்தும்’ கதை ஒரு சிறிய சம்பவத்தினூடாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. புதைகுழியில் சிக்கிய சிங்கக் குட்டியைத் தாய்மானொன்று மீட்டெடுக்கிறது. மகிழ்ந்துபோன சிங்கக்குட்டி தன் பிறந்தநாளுக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறது. போவதற்கு ஆசைப்பட்ட தன் குட்டியைத் தாய் தடுத்து, ‘தீயவர்களுக்கு ஆபத்திலே உதவலாம். ஆனால் அவர்களோடு உறவுவைத்துக்கொள்வது ஆபத்தானது’ என்று அறிவுரை சொல்கிறது. அவ்வளவுதான் கதை. இங்கு அவசியமற்ற ஆலாபனைகள் எவையுமில்லை. கனதியான கருத்தொன்று, அளவான சொற்களால் வாசகர்களுக்கு இலகுவாகக் கடத்தப்படுகின்றது. இத்தகைய தன்மை தொகுப்பிலுள்ள ஏனைய கதைகளிலும் காணப்படுவது பொதுப்பண்பாகும்.

த.அக்ஷிகாவின் ‘ஆமையும் கோழியும் முயலும்’ என்ற கதை ஆமையிடம் ஓட்டப்பந்தயத்தில் தோற்றுப்போன முயலுக்காக, கோழியொன்று முட்டையிடும் போட்டியில் கலந்துகொள்வதைப்பற்றியது. கோழி ஒரு வாரத்தில் ஏழுமுட்டைகளையிட, ஆமை ஒரே நாளில் அதிக முட்டைகளையிட்டு வென்றுவிடுவதாகக் கதைமுடிகிறது. இங்கு ஆமையின் தன்னடக்கமே வெற்றிக்குரிய சிறந்த பண்பாகச் சொல்லப்படுகின்றது.

மு.மேதினிகாவின் ‘ரோபோ வாசகன்’ என்ற கதை 2050ஆம் ஆண்டில் நிகழ்கின்றது. மனிதர்களை வேலைகளுக்கு அமர்த்தக்கூடாதென்று சட்டம் வந்ததால் எல்லோரும் ரோபோக்களைப் பயன்படுத்துகிறார்கள். ஒருவன் தன்னுடைய ரோபோவுக்கு வாசிப்புப்பழக்கத்தை ஏற்படுத்துகிறான். கடைசியில் அந்த ரோபோ ஏவலுக்குக் கட்டுப்படாது அவனுக்கு நல்லதோர் அறிவுரையைக் கூறுகிறது. தேர்ந்த வாசிப்பினால் ஒருவருக்குப் பகுத்தறிவும் முதிர்ச்சியும் விருத்தியாகும் என்பதற்கு உதாரணமாகச் சொல்லக்கூடிய நல்ல கதை. மேதினிகாவின் கதைகளில் அறிவியல் தென்படுவதைத் தனித்துவமான படைப்பியல்பாகக் கொள்ளலாம்.

உ.சாய்தனியாவின் கதைகளில் அன்பும் இரக்கமும் பகிர்தலுக்குரிய பண்புகளாக இருக்கின்றன. வாங்கிய பணிஸ் கீழே விழுந்ததால் வருந்திய தோழி ரோஜாவுக்குத் தன்னுடைய பணிஸில் பாதியைக் கொடுத்த பூஜா உயர்ந்த பண்புடையவளாகிறாள். சாய்தனியாவின் குட்டிக்கதைகள் பெரிய விடயங்களை எளிமையான நடையில் உருக்கமாகத் தொடுகின்றன.

ஜெ.லிவியானாவின் ‘வண்டின் முயற்சி’ கதை வயதில் சிறியவனாக ஒரு நாட்டின் ஆட்சிப்பொறுப்பை [illegible] பார்த்தும் தன்னம்பிக்கையும் தைரியமும் அடைவதைச் சொல்கிறது. மிகச்சிறிய உயிரினங்களிடம் நாங்கள் கற்றுக்கொள்வதற்கு ஏராளமான விடயங்கள் இருப்பதை உணர்ந்துகொள்கிறோம். ஜெ.ஜெயசுவேதாவின் ‘வேட்டைக்காரர்களின் ஓவியம்’ என்ற கதையின் தலைப்பும் உள்ளடக்கமும் வெகுவாகக் கவர்கின்றன. காட்டில் அப்பாவி மிருகங்களை வேட்டையாடுபவர்கள், தந்தை வேங்கையின் ஆக்ரோசமான உறுமலைக்கேட்டுத் தப்பியோடுகிறார்கள். அவர்கள் விட்டுச்சென்ற ஓவியம் வேட்டையாடப்பட்ட வேங்கையொன்றை ஒருவர் தூக்கி வைத்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. அதைப்பற்றிக் குட்டியானது தந்தையிடம் கேள்வியெழுப்புகிறது. அதற்கு, ‘வேங்கைகள் ஓவியம் வரையும்வரை வேட்டைக்காரர்களின் ஓவியமே உண்மையானது’ என்று தந்தை சொல்லும் பதில் அர்த்தங்கள் பொதிந்தது. அவ்வகையில் இந்தக் குட்டிக்கதை அருமையானது.

வ.கஜானாவின் ‘ஒட்டகத்தின் கெட்ட அகம்’ சிங்கத்திடம் மந்திரியாகவுள்ள நரியைப் பிரித்துப் பதவியைக் கைப்பற்றத் திட்டமிட்ட ஒட்டகம் தந்திரமாக விரட்டப்பட்ட கதை. தகுதியற்றவர்கள் பதவியாசையால் செய்கின்ற காரியங்களை அவர்களின் வழியில் முறியடிப்பதற்குப் புத்திக்கூர்மையொன்றே அவசியம் என்பதை வலியுறுத்தும் நல்ல கதை.

க.கைலாஷ் எழுதிய ‘யானையும் குருவியும்’ என்ற பத்துவரிக்கதையில் இரண்டு பாத்திரங்கள் மட்டுமேயுள்ளன. காட்டில் வீழ்ந்துகிடக்கும் பெரிய மரமொன்றைக் காட்டித் தன்னுடைய தாத்தா புரட்டிப்போட்டதாக யானை பெருமை பேசுகிறது. காட்டுமரங்களெல்லாம் தன்னுடைய தாத்தா போட்ட விதைகளாலேயே உருவானவை என்று சிறியகுருவி அமைதியாகப் பதிலளிக்கிறது. இங்கு அழிப்பது இலகுவானது. ஆக்குவதே உன்னதமானது என்ற கருத்து அழகாகப் பதிவுசெய்யப்படுகின்றது.

ம.கனியாவின் ‘மின்குமிழ் சொன்ன கதை’ அருமையான விஞ்ஞானக்கதை. பொருள்கள் பேசுகின்ற மொழி தெரிந்த மிருதுளா என்ற தேவதை பூமிக்கு வருகிறார். சிலந்தியும் மின்குமிழும் நிகழ்த்திய உரையாடலைச் செவிமடுக்கிறார். நவீன விஞ்ஞானத்தின் பிரதிபலிப்பான உரையாடல் அவருக்குப் புதுமையாக இருக்கிறது. அவர் பூமியில் தங்கியிருந்து மேலும் பல பொருள்களைப்பற்றி அறியவிரும்புகிறார். கனியாவின் ஏனைய கதைகளும் அறிவியலின் சாரமாக விளங்குபவை. அவர் ‘மிருதுளாவின் கதை’களைத் தொடர்ந்து எழுதவேண்டும். இவ்வகை உத்தியுடன் கூடிய குட்டிக்கதைகள் இரசிக்கக்கூடியதாக இருப்பதுடன், புதிய விடயங்களை அறிந்துகொள்ளவும் உதவும். அவற்றைத் தனியான தொகுப்பாகவும் வெளியிடலாம்.

ஏனைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகின்ற ‘சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள்’ போன்ற நூலாக்க முயற்சிகள் பரவலாக்கப்படவேண்டும். கல்வித்திணைக்களங்கள் இவற்றைக் கொள்வனவுசெய்து பாடசாலைகளுக்கு வழங்குவதன்மூலம் மாணவர்களின் படைப்பாளுமை விருத்திக்குப் பெரிதும் துணைசெய்யமுடியும்.

‘கல்விக்கு முன்னுரிமையுடன் கலைகளையும் வளர்த்துச் செல்லல்’ என்ற மனப்பாங்கு சிறுவர் படைப்பாளிகளிடம் கட்டாயமாக இருக்கவேண்டும். அதுவே அவர்களுக்கும் இலக்கியத்துக்கும் வளமான எதிர்காலத்தைத் தரும். அந்தவகையில், இந்தக் கதைகளை அழகாகவும் எளிமையாகவும் உருவாக்கிய மாணவர்கள் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் வாசிப்புப் பழக்கத்தைத் தொடர்வதன் மூலம் தேர்ந்த படைப்பாளிகளாகச் செதுக்கப்படுவதுடன், கல்வியிலும் உயர்ந்த நிலையை அடைவார்கள் என்பதை அவர்களின் எழுத்துக்களே உறுதிசெய்கின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூச்சும் பேச்சும்!

○ மயூரபாலன்

பருவகால மாற்றத்தால் குளம் வறண்டு போகத் தொடங்கியது. அப்பொழுது அங்கிருந்த இரண்டு அன்னப்பறவைகள் வேறொரு குளத்துக்கு செல்லத் திட்டமிட்டன. இதனை அறிந்த அதே குளத்தில் வசிக்கும் ஆமை தன்னையும் கூட்டிச் செல்லுமாறு மன்றாடிக் கேட்டது. அன்னப்பறவைகளும் அதற்குச் சம்மதித்தன. அவை ஒரு தடியை எடுத்து இரண்டு பக்கமும் அதனைக் கவ்வியபடி பறந்து செல்ல ஆமை அந்தத் தடியை இறுகக் கவ்வியபடி இருக்கவேண்டும் எனத் திட்டம் போட்டன. என்னதான் நடைபெற்றாலும் வாயை திறக்கக்கூடாது என ஆமைக்கு மீண்டும் மீண்டும் வற்புறுத்தி கூறப்பட்டது.

திட்டமிட்டபடி ஒருநாள் அவை பறந்து செல்லும் பொழுது கீழே நிலத்தில் இருந்த சில சிறுவர்களின் கண்களில் அந்தக் காட்சி தென்பட்டது. இவ்வாறான காட்சியை ஒருபோதும் காணாத சிறுவர்கள் கைகொட்டி ஆரவாரமாகக் கத்தினார்கள். இந்த கூக்குரலை கேட்ட ஆமைக்கு ஒரு இனம் புரியாத உற்சாகம் தோன்றியது. தான் பறந்து செல்வதை சிறுவர்கள் பாராட்டுகிறார்கள் என எண்ணிய ஆமை தானும் பதிலுக்கு ஏதாவது கூற வேண்டுமென விரும்பியது. சில கணங்கள் பொறுத்துப் பார்த்த ஆமையால் மேலும் தனது வாயை கட்டுப்படுத்த முடியவில்லை. ஆமை தனது உண்மை நிலையை உணராது வாயைத் திறந்து பேச ஆரம்பித்த பொழுது ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த ஆமை நிலத்தில் விழுந்துவிட்டது.

இந்த கற்பனை கதையின் உண்மையான பிரதிபலிப்பு போலத் தான் நமது வாழ்க்கையும் உள்ளது. வருகின்ற மூச்சும் போகின்ற மூச்சும் தான் அந்த அன்னப்பறவைகள்.
அந்த மூச்சின் அருளால்தான் நமது வாழ்க்கை ஓடிக்கொண்டு இருக்கின்றது. ஆனால் நாம் அதனைக் கணக்கில் எடுப்பதே இல்லை.
இந்த உலகத்தில் நாங்கள் தான் எல்லாவற்றையும் செய்து கொண்டு இருக்கின்றோம் என்ற எண்ணத்தில் வாழ்கிறோம். நமது இலட்சியங்கள், திட்டங்கள், கோபதாபங்கள் என அவற்றின் பின்னால் ஓடிக் கொண்டே இருக்கின்றோம்.

எம்மைச் சுற்றிலும் அறியாமையின் வாள் தொடர்ந்து வீசிக்கொண்டு இருக்கிறது. சிறிதளவு தன்னும் நாம் நமது தலையை மேலே தூக்கினால் அந்த அறியாமையின் வாள் நமது தலையை துண்டித்துவிடும் என்பதனை அறியாது வாழ்கிறோம். இவற்றுக்கு இன்று உலகில் நடைபெறும் பல சம்பவங்கள் சான்றாக உள்ளன. அண்மையில் இணையத்தளத்தை கலக்கி வந்து உச்ச நிலையில் இருந்த சிலர் தம்மைத் தாமே மாய்த்துக் கொண்டது நம்மில் பலரும் அறிந்ததே. அவர்களிடம் பணம், பொருள் ,புகழ் என எவையெல்லாம் நமக்கு மகிழ்ச்சி தரும் என நாம் எண்ணுகிறோமோ அவை எல்லாம் அளவுக்கு அதிகமாக இருந்தன. ஆனால் அவர்கள் அந்த அடிப்படையான விஷயத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்.

வாழ்க்கை வேறு வாழ்க்கையில் நடைபெறும் விஷயங்கள் வேறு எனப் பிரித்துப் பார்க்கத் தவறிவிட்டார்கள். ஆகாயத்தில் பறப்பது போல இருந்த அவர்களது வாழ்க்கையில் திடீரென்று ஏதாவது ஒரு நிகழ்வு நடைபெற்று அவர்களது வாழ்வையே புரட்டிப் போட்டுவிடுகின்றது. அப்பொழுது அவர்களால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது விபரீதமான முடிவுகளை எடுத்து விடுகிறார்கள். "இன்பத்திலே இறைவனை நினைப்பதில்லை துன்பத்திலே நினைக்கின்றாய். இன்பத்தில் இறைவனை நினைத்திருந்தால் துன்பம் எவ்வாறு உன்னை அணுகும்" என ஒரு பாடல் உள்ளது.

இவ்வாறு ஞானிகளும் மகான்களும் மிகவும் கருணை கொண்டு கூறிய அறிவுரைகளை கேட்டு நாங்கள் அதன்படி நடக்கவில்லையென்றால் விபத்துக்களும் விபரீதங்களும் நமக்கு பாடம் புகட்டும் பொழுது அது மிகவும் கசப்பாக இருக்கும். எமக்கு நமது உண்மையான பலம் என்ன பலவீனம் என்ன என்பது காலம் கற்றுத் தரும் பாடத்தில் தெரியவருகிறது. எவையெல்லாம் நம்மை காப்பாற்றும் என நாங்கள் நம்பி இருந்தோமோ அவையெல்லாம் மெதுவாக நமது கைகளை விட்டு நழுவிச் செல்ல ஆரம்பிக்கின்றன.

செல்வச் செழிப்பு நிறைந்த ஒரு நாட்டின் அரசனிடம் பஞ்சம் வர உள்ளது என அவனது மந்திரிகள் கூறினார்கள். மந்திரிகளின் சொல்லுக்கு கட்டுப்பட்ட அரசனும் நாட்டில் தானியங்களை சேமிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அந்த திட்டத்தின்படி குடிமக்கள் எல்லோரும் ஒரு குறிப்பிட்ட விகிதம் தானியங்களை அரச களஞ்சியத்தில் ஒப்படைக்க வேண்டுமென கட்டளையிட்டான். சில காலம் சென்ற பின்னர் மந்திரிகள் கூறியது போன்று மிகப்பெரும் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் அரச களஞ்சியத்தில் போதுமான அளவு தானியங்கள் இருந்ததால் பஞ்சம் ஏற்பட்ட பொழுதும் பஞ்சத்தினால் மக்கள் யாரும் பெரிதாகக் கஷ்டப்படவில்லை.

எமது வாழ்விலும் இதனைத்தான் நாம் கடைப்பிடிக்க வேண்டி உள்ளது. வருமானம் அதிகமாக இருக்கும் பொழுது எவ்வாறு பணத்தைச் சேமித்து வைக்கிறோமோ அது போன்று வாழ்க்கை நன்றாக இருக்கும் பொழுது




நம்முள்ளே உள்ள அமைதியை நாம் தேடிக் கண்டுகொள்ளவேண்டும். எம் உள்ளேயும் ஒரு வீடு உள்ளது. அதனை எவ்வாறு சென்று அடைவது என நாம் கற்றுக் கொண்டால் வாழ்க்கையில் புயலும் சூறாவளியும் அடிக்கும் பொழுது அவற்றினால் பாதிப்படையாது நாம் அடைக்கலம் புகல்வதற்கு ஒரு இடத்தை கண்டுகொள்ளலாம். எனது வாழ்விலும் புயல் வருமா என சென்று ஜோதிடம் பார்க்கத் தேவையில்லை. எல்லோருடைய வாழ்விலும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு புயல் வந்துகொண்டுதான் இருக்கின்றது. நாம் அதற்கான சான்றுகளை அக்கம்பக்கத்தில் சுற்றிப் பார்த்தாலே அறிந்துகொள்ள முடியும். கடலில் விழுந்த பின்னர் நீச்சல் கற்றுக்கொள்வோம் என இருப்பது புத்திசாலித்தனமான செயல் அல்ல.

வள்ளலார் கூறியது போன்று 'தன்னையறிந்து இன்பமுற ஒரு தந்திரம் உள்ளது. சச்சிதானந்தக் கடலில் மூழ்குவதற்கு ஒரு வழி உள்ளது. வெள்ளம் வருமுன் அணை கட்டுவோம். விலை மதிக்க முடியாத இந்த வாழ்வில் ஆனந்தமாகவும் அமைதியாகவும் வாழ முயற்சி செய்வோம்.'



# கெவ்லே மீது ஏன் கோபம்?

○ ஆர்.பிரகாஷ்




உலகில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு என்று அடையாளப்படுத்தப்படும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இத்தாலிக்கு, இஸ்ரேலுக்கு அடுத்தபடியாக சுவீடனும் அமைந்துள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடம் அமைக்கப்பட்டுள்ள இத்தாலியிலும் அதன் உரோம் நகரிலும், கிறிஸ்து பிறந்த நாடு என்று கருதப்படும் இஸ்ரேலிலும் இடம்பெறும் கொண்டாட்டங்கள் 'ஆன்மிகம்' என்பதை அத்திபாரமாகக் கொண்டிருந்தாலும் அமெரிக்காவிலும் சுவீடனிலும் இடம்பெறும் கொண்டாட்டங்கள் அவ்வாறானவை அல்ல.
அமெரிக்கக் கொண்டாட்டம் தனக்கே உரித்தான 'ஆடம்பரப் போர்வையைக்' கொண்டது. கேளிக்கைகள், களியாட்டங்கள் என்றவாறாக நகர்ந்துசெல்லும் அவர்களின் கிறிஸ்மஸ் பண்டிகை. அதேநேரம் சுவீடனின் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் 'சுவீடனை மையப்படுத்தி' உருவாக்கப்பட்ட கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக அமையும். அது தான் கெவ்லே.



## கெவ்லே என்றால்...

சுவீடனில் உள்ள ஒரு நகரத்தின் பெயர்தான் கெவ்லே. அங்கு 1966 ஆம் ஆண்டு ஆடு போன்ற மிகப் பெரும் வைக்கோல் பொம்மை உருவாக்கப்பட்டு அது கிறிஸ்மஸ் பண்டிகைக்குரித்தான அடையாளங்களுடன் அலங்கரிக்கப்பட்டு கிறிஸ்மஸ் தினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. காலப்போக்கில் இந்த ஆடு சுவீடனுக்கு உரித்தான அடையாளமாகவே மாறிவிட்டது. தற்போது 'கெவ்லே' என்றால், கெவ்லே நகர் நினைவுக்கு வருகின்றதோ இல்லையோ இந்த ஆடுதான் அனைவரினதும் நினைவைத் தொட்டுச் செல்கின்றது.



சுவீடன் மக்களைப் பொறுத்தவரை இந்த கெவ்லே ஆடு அவர்களது உணர்வுகளுடன் தொடர்புடையது. அவ்வாறு இருக்கையில் அவர்களது உணர்வுகளைப் பாதிக்கும் எதிர்செயல்களும் நிகழும்தானே?! ஒவ்வொரு ஆண்டும் கெவ்லே ஆடு அமைக்கப்படும்போது அந்த ஆட்டின் மீது தாக்குதல் நிகழ்வதும் தொடர்கதையாகிறது. 1966ஆம் ஆண்டு முதலே கெவ்லே ஆட்டின் மீது தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறிவருகின்றன. இதன் தொடர்ச்சியாக இந்த வருட கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்காக அமைக்கப்பட்ட கெவ்லே ஆடு கடந்த வாரம் தீயூட்டி அழிக்கப்பட்டிருக்கின்றது. இதன் பின்னணியில் அமெரிக்கர்கள்தான் உள்ளனர் என்கின்றனர் சுவீடன் பொலிஸார்.

## ஏனிந்த வெறுப்பு?

கெவ்லே மீதான தாக்குதல்களில் பெரும்பாலானவை அமெரிக்கர்களால்தான் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால், ஏன் அமெரிக்கர்களுக்கு கெவ்லேயின் மீது இவ்வளவு 'காய்ச்சல்' ? என்ற கேள்விக்குப் பதில் இதுவரையில்லை. கிறிஸ்மஸ் பண்டிகையானது கேளிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட பண்டிகையாக அமெரிக்காவில் மாறியுள்ள போதிலும், கிறிஸ்மஸ் என்றவுடன் சில அமெரிக்க மரபுரிமைச் சின்னங்களும் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகின்றது. உதாரணமாக வெள்ளை மாளிகை கிறிஸ்மஸ் மரம், அமெரிக்க அதிபரின் வான்கோழி விருந்து, லொஸ் வெகாஸ் கொண்டாட்டம் என்பவை அவற்றில் சில. உண்மையில் அமெரிக்கர்களின் இந்தக் கொண்டாட்டங்களையெல்லாம் தனியாக நின்று மேய்ந்து தள்ளியுள்ளது கெவ்லே. இதனால்தான் கெவ்லே மீது அமெரிக்கர்களுக்குக் 'கொள்ளைப் பாசம்' என்ற கருதுகோளும் இருக்கவே செய்கின்றது. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை, பல தாக்குதல்களை கடந்து சுவீடன் மக்களின் கிறிஸ்மஸ் சின்னமாகக் கருதப்படும் கெவ்லே ஆடு ஒளிரும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இந்த ஆண்டும் அதே நம்பிக்கையுடன் மிளிர்ந்து கொண்டிருக்கிறது, எரியூட்டப்பட்ட பின்னரும்கூட!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிமாநேத்ரன் துப்பறியும் AK67

'காமிக்ஸ்' தொடர்

சித்திரம் – எஸ்.வினோபா
கதை – இ.சு.முரளிதரன்

06






## ஊர்ப்புதினம்

○ இராகவன்

19

குலமக்காவின்ர தாயை எனக்குத் தெரியாது. அவா நான் பிறக்கிறதுக்கு முந்தியே காலமாகிட்டா. குலமக்காவின்ர தகப்பன் சின்னையாப்பாதான் நான் அங்கை போய் வாற காலத்தில உயிரோடை இருந்தவர். அவரை எங்கடயம்மா சின்னையாண்ணை எண்டு கூப்பிடுவா.

சின்னையாப்பாவை பாத்தால் அச்சு அசலாய் நடிகர் வீராச்சாமியைப் போலயிருப்பார். உங்களுக்குச் சிலநேரம் நடிகர் வீராச்சாமியெண்டால் விளக்கமில்லாமலிருக்கும். அதால கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லுறன். அந்தக் காலம் 'முதல்மரியாதை' எண்டொரு படம் வந்து நல்ல ஓட்டமோடினது தெரியுந்தானே. அதில இன்ரேவலுக்குப் பிறகு ஒரு மனிசன் சிவாஜிகணேசனைக் காணுற நேரமெல்லாம் "ஐயா! எனக்கொரு உண்மை தெரிஞ்சாகணும்" எண்டு சொல்லி உடுக்கடிச்சுக் கொண்டு திரியிறதை இலேசில மறந்திருக்கமாட்டியள். அந்த வயதுபோன மனிசன்தான் நடிகர் வீராச்சாமி.



இந்த வீராச்சாமி வளத்தி. எங்கடை சின்னையாப்பா கட்டை. அதுதான் ஒரேயொரு வித்தியாசம். இதுக்குள்ள இன்னொரு விசயத்தையும் சொல்ல வேணும். எங்கட ஊருக்குள்ள இன்னுமொருத்தர் அச்சுஅசலாய் நடிகர் வீராச்சாமியைப் போல அதே உயரங் கியரமெல்லாத்தோடையும் இருந்தவர். அவர்தான் கச்சாய்ச் சிதம்பரப்பிள்ளையண்ணை. இதிலயும் ஒரு சின்ன வித்தியாசமிருக்கு. நடிகர் வீராச்சாமி பொதுநிறம். எங்கட கச்சாய்ச் சிதம்பரப்பிள்ளையண்ணை அந்திப்பொழுது மாதிரி நல்ல சிவலை. இவரும் ஊர்ப்புதினத்தில ஒரு முக்கியமான தலை. இவரைப் பற்றி நான் தக்க தருணத்தில உங்களுக்குச் சொல்லக் காத்திருக்கிறன். சரி! இப்ப விசயத்துக்கு வருவம். நான் அம்மாவோடை குலமக்கா வீட்டை போற நேரமெல்லாம் சின்னையாப்பா ஒரு முகம் பாக்கிற கண்ணாடியை வைச்சுக் கொண்டு ஒரு வெள்ளைத் துணியால தன்ர சொண்டுகளை உரஞ்சி உரஞ்சித் துடைச்சுக் கொண்டிருப்பார். அவரின்ரை சொண்டு இரண்டும் இரத்தக் கலரில வீங்கி வெளியில தூங்கிக் கொண்டிருக்கும். எனக்கு அவரைப் பாக்கவே கெடிக்கலக்கமாயிருக்கும். நான் அவர் நிக்கிற பக்கமே திரும்பிக் பாக்கிறேல்ல. அவருக்குக்கிட்டை ஆரும் என்னைப் போல சின்னப் பொடியள் போனால் ஒரு வித்தியாசமான குரலெழுப்பி வெருட்டிக் கலைப்பார். இதுக்குள்ள அம்பிட்டு வெருண்டடிச்சு ஓடுறதெண்டால் அதில மாதினிதான் வண் நம்பர். மாதினி குலமக்கா வீட்டுக்கு அடுத்த வீடு. இரண்டு வீட்டுக்கும் நடுவை ஒரு கிடுகுவேலி. போக்குவரத்துக்கு ஒரு கடப்பு விட்டிருக்கு. அந்தக் கடப்படியில நிண்டுதான் சின்னையாப்பா கண்ணாடியைப் பாத்துத் துணியால சொண்டை உரஞ்சிக் கொண்டிருப்பார். மாதினி என்னசெய்யுமெண்டால் மெல்ல மெல்லப் பதுங்கிப் போய்க் கடப்புக்குள்ளால் எட்டிப் பாக்க சின்னையாப்பா அந்த வித்தியாசமான குரலிலை சத்தம் போட்டு வெருட்டிக் கலைப்பார். மாதினி "ஐயோ! ஐயோ!" எண்டு சத்தம் போட்டுக் கொண்டு திரும்பியோடிட்டுப் பேந்தும் அதேமாதிரி மெல்ல மெல்லப் பதுங்கிப் பதுங்கிப் போய் எட்டிப் பாத்து அவர் வெருட்டியடிக்க, குழறிக் கொண்டு திரும்பியோடி இப்படியே இது பின்னேரங்களில தொடர்ந்து நடக்கும். மாதினிக்கு இதுவொரு விளையாட்டாப் போச்சு. இந்த மாதினி ஆரெண்டதையும் பிறகு வடிவாய்ச் சொல்லுறன்.

(தொடரும்)

## சின்னக்காசு

○ மனோ செல்லத்துரை



கடைசிவரை அமைதியாக இருந்த சிவம் அண்ணன் நிதிசேகரிப்பு என்று வந்தபோது 'என்ர கணக்கில் ஐயாயிரம் ரூபா' என்றார். எல்லோரும் ஆச்சரியமாக அவரைப் பார்த்தார்கள்.
'அண்ணை பரவாயில்லை. நீங்கள் போடத் தேவையில்லை' என்று நெளிந்தார் புலம்பெயர் பிரதிநிதி.
'ஏன்?' என்றார் சிவம் அண்ணன்.
"இல்லை அண்ணை நீங்கள் கூலிவேலை செய்து குடும்பம் நடத்தவே கஷ்டப்படுகிறீங்கள்..."
"ஓம். நான் கூலிவேலைதான் செய்யிறன். அதுக்கென்ன?"
கிராமப் பொதுப்பணிக்கு தன்னுடைய பங்களிப்பை செலுத்துவதில் உறுதியாகவே இருந்தார் சிவம் அண்ணன். அவரது சிந்தனை எல்லோரையும் சற்று உசுப்பிவிடத்தான் செய்தது.
"நீங்கள் ஒருத்தரும் காசு போடத்தேவையில்லை. நாங்கள் வெளிநாட்டில இருக்கிறாக்கள். எல்லாத்தையும் பாத்துக்கொள்ளுவம்.
நீங்கள் சரீர உதவி செய்தால் போதும்" என்றார் வெளிநாட்டுப்பிரதிநிதி.
சிவம் அண்ணன் திரும்பவும் "என்ர கணக்கில் ஐயாயிரம்" என்றார்.
சுகிமாஸ்ரர் தன்ர கணக்கில் இரண்டாயிரம் என்றார்.
கண்மணி அக்கா தன்ர கணக்கில ஆயிரம் என்றார்.
"திரும்பவும் சொல்றன் நீங்கள் உந்தப் பிச்சைக் காசை நிப்பாட்டுங்கோ. அதை நாங்கள் பாத்துக்[illegible] இரக்கத்[illegible] வெளிநாட்டுப் பிரதிநிதி.

### சின்னட்டிக்கதை



"இல்லைத் தம்பி உங்கள் பரோபகாரத்தன்மைய நாங்கள் மதிக்கிறம். ஆனா, இது எங்கட உரிமை."
"மாஸ்ரர். உங்கட உரிமை ஒருபக்கம் கிடக்கட்டும். உப்பிடி சில்லறையளைப்போட்டு எப்ப விசயத்தை முடிக்கப்போறியள்? நாங்கள் வெளிநாட்டில இருக்கிறம். எங்களுக்கு இது சின்னக்காசு."
"தம்பி. நாங்கள் ஊர்கூடித் தேர் இழுக்கிற ஆக்கள்"
"நீங்கள் என்னத்தையும் இழுங்கோ மாஸ்ரர். நாங்கள் இஞ்ச சரியான பிஸி. உங்களோட மினக்கெட எங்களுக்கு நேரமில்லை" கூட்டத்திலிருந்தவர்கள் ஆளையாள் அமைதியாகப் பார்த்துக்கொண்டார்கள்.
[illegible]ணை "என்ர கணக்கில ஐயாயிரம்" என்று [illegible]எழுந்து தன்பாட்டில் வெளியே போய்கொண்டிருந்தார். அவரிடம் ஒரு தெளிவும் உறுதியும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org